
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 30.00
ஒக்டோபர் 02 - 08, 2014

# வாரமலர் தினமுரசு



சினி விசிட்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1086



## ஜனாதிபதியின் ஐ.நா உரை

### சர்வதேசத்திற்குச் சாட்டை

## தேர்தல் களத்தில்



வெல்லப்போவது யார்?



## ஐ.எஸ்.ஐ.எஸ் மீது அமெரிக்கா தாக்குதல்

ஓர் அலசல்



முரசு வாசகர்களுக்கு ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்!

## பக்தி நிலை

பக்தி நிலையானது ஆரம்பநிலை, முதிர்நிலை என இருவகைப்படுகிறது. ஆரம்ப நிலையானது மனமானது பக்குவம் அடையாத மனவெளிப்பாடாகின்றது. குறிப்பாக கடவுளிடம் பேரம் பேசுதலை பக்தியின் ஆரம்பநிலை எனக் கூறப்படுகிறது.

குறிப்பாக இறைவனிடம் வேண்டுதல் செய்பவர்கள் தங்களுக்கு அது வேண்டும், இது வேண்டும் இன்னது தர வேண்டும் என கொடுத்ததைத் திருப்பி வாங்கும் குணம் போன்று நடந்துகொள்வார்கள்.

அத்தோடு, இறைவனிடம் எனக்குக் கேட்பதைத் தந்தால், இன்னதைச் செய்வேன்... இவ்வளவு தருவேன் என்று பேரம் பேசுவார்கள். இது பக்தியின் ஆரம்ப நிலையாகும். முதிர்நிலை என்பது அனுபவங்களின் ஊடாகச் சென்று எல்லோருக்காகவும், எல்லாமே நன்றாக நடக்கவேண்டும் எனவும் வேண்டிக்கொள்வது. இதை பரிபூரண நிலை என்றும் குறிப்பிடப்படுகிறது.

**அனந்த நாராயணன், கைவேலி**

## உயிர் கேட்கும் ஊதியம்

ஆன்மீகம்

இப்பூவுலகில் பிறந்த மனிதரோடு அவர்தம் உடலோடு ஒன்றியிருப்பது உயிர். இவ்வுயிர் பிரிந்ததும் உடலோ பிணமாகிவிடும். அது அழிந்தும் விடும். ஆனால் உயிரோ அழிவதில்லை. இந்த உயிரானது உடலைவிட்டுப் பிரிந்ததும், தனக்கு ஊதியம் தா எனக் கேட்டு நிற்கும்.

இந்த உயிர் கேட்கும் ஊதியம்தான் எது?

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் எவற்றிலும், பதிலு பகாரம் பாராது, விளம்பர நோக்கமில்லாது எதை, எவற்றைத் தானமாகக் கொடுத்தார்களோ? அத்தோடு அவர்கள் எப்படி வாழ்ந்தார்களோ அத்தனையும் சேர்த்து கணக்காகக் கொடுத்தல் வேண்டும்.

இனிமைமிக்கதாய் எல்லோரையும் இணைத்து, பண்புள்ளதான அன்பைச் சேர்த்து, பண்புமிகு வாழ்வினை மனிதர்கள் பகுத்துண்டு வாழ்ந்தால் அவைகள் அனைத்தும் அவர்களின் இறுதிக்கணக்கில் சேர்க்கப்படும்.

**சாமுவேல், புதுக்குடியிருப்பு.**

## ஹஜ்ஜ் எவர் மீது கடமை?

'ஹக்' என்றால் என்ன? ஒரு செயலைத் தூய உள்ளத்துடன் செய்வதற்கு மனதில் எண்ணங்கொண்டு நாடுவதற்கு 'ஹஜ்' எனக் கூறப்படும்.

இஃது எவர் மீது கடமை? இதோ! வல்ல அல்லாஹ், தன் திருமறையில்,

"எனவே, எவர்கள் (மக்காவாகிய) அந்நகர்வரை செல்ல வலிமையுடையோராக இருக்கின்றனரோ, அவர்கள்மீது அல்லாஹ்விற்காக (அந்நகர் சென்று அங்குள்ள) அவ்வாலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும்." எனக் கூறியுள்ளார்.

எவருக்கு மக்காவரை சென்று ஹஜ்ஜு செய்வதற்கும் பொருள் வசதியும், வாகன வசதியும், உடல் வலிமையும் இருக்கின்றனவோ அவர் அக்கடமையை ஆற்றவேண்டும்.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

## கவிதைப்போட்டி 1083



### கோலம் அழியாமலே...

காலையில் எழுந்தே
வாசலில் கோலமிட்டு
தாய் அவள் கோயிலுக்குச்
சென்றுவிட்டாள்
கோலம் கலையாமலே
வாசற்படி தாண்டிடவே
சேய் இவள் ஒரு வழி
கண்டுவிட்டாள்.

**ஏ.எம்.கமால். புத்தளம்.**

### வினையாக முடிவதுமுண்டு!

விழிப்புணர்ச்சியுடன் விளையாடு,
கடின முயற்சியுடன் செயல்படு,
முயற்சியுடையார்...
இகழ்ச்சியடையார்...
உன் முயற்சி என்ன சிறுமியே?
உள்ளே இருந்து வெளியே
பாய்வதோ?
கவனம் தேவை சிறுமியே!
விளையாட்டு...
வினையாக முடிவதுமுண்டு.

**ஜே.ஜேசுமணி, கண்டி.**




## கவிதைப் போட்டி இல 1086



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வரிகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்; தபால்அட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.10.2014

கவிதைப் போட்டி இல. 1086 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### விளையாட்டாகவும் தூங்கிடாதே!

விபரீத வேலையாகும்
விரிந்து பட்ட உலகமதில்
விஞ்ஞான விளையாட்டுக்கள்
விலாவாரியாகவே உண்டு
விபரம் அறியா நீயும்
வினையான விளையாட்டில்
விரல் அளவுகூட இடம் கொடாதே
விட்டில் பூச்சியாக்கி
வீட்டில் எல்லோரையும்
வீணான தொல்லைக்கு
ஆளாக்காதே!

**பகிர்தரன், ஜெயந்திபுரம்**

### புரியவில்லையே!

இச்சிறுமியின் செயல்
வெறும் விளையாட்டுத் துள்ளலா
மேடைப் பேச்சுக்கு ஒத்திகையா...
பாம்பைக் கண்டு
அலறலா... அன்றேல்
தூக்கில் தொங்க ஆயத்தமா...
புரியவில்லையே.

**அ.சந்தியாகோ. கண்டி.**

### ஏன் தோன்றியது மகளே!

தன்னந்தனியே...
கூரையைப் பிடித்து
பார்க்கும் பார்வை
கீழே பாய்வதற்காகவோ?
ஏன் இந்த எண்ணம்...
ஏன் தோன்றியது மகளே!

**ஐவின் - கண்டி.**

### நம்பிக்கை உன்னைத் தேடிவரும்

கூரையின் பிடியிலே தொங்கி
உடற்பயிற்சி செய்வதும்
உன் முயற்சியின் வெற்றியோ?
உயரத்திலும், உயர்விலும்
உயர்வடைவாய்...
உன் விடாமுயற்சி...
வெற்றி தரும் நம்பிக்கை
உன்னைத் தேடிவரும்.

**P.இவோன். கண்டி.**

### 'விரைவில் ஒரு முடிவு'

தொட்டிலில் ஆடும் - பெண்
குழந்தைகளுக்குக் கூட
தொல்லை கொடுக்கும் - இந்த
பாவச் செயல்கள் - இன்றும்
தொடராமல் தொலைந்து போக
தோன்றாதோ விரைவில்
ஒரு விடிவு.

**இளம்பிறை யோகன். புத்தளம்.**

### பரிதாப நிலை

பாழாய்ப் போன பாரினிலே இந்த
பாவச் செயலும்
பழகிப்போய்விட்டதோ
பகுத்தறிவில்லாத ஜென்மங்கள்
படைக்கப்பட்டதாலேயே - தொங்கும்
பாலகிக்கும் ஏற்பட்டதோ - இந்த
பரிதாப நிலை.

**இளம்பிறை யோகன், புத்தளம்.**

## உங்கள் பக்கம்

### வீதி புனரமைக்கப்படுமா?

ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு குளத்திற்கு கீழேயுள்ள விவசாயக் காணிகளுக்குச் செல்லும் வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூழாமுறிப்பு குளத்தின் கீழே உள்ள காணிகளுக்கு செல்லும் வீதியானது கடந்த காலங்களில் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் விவசாயம் மேற்கொள்ளும் மக்கள் இவ்வீதியால் செல்லமுடியாத நிலையும் அதேவளை உழவு இயந்திரங்களை கொண்டு செல்லமுடியாத நிலையும் காணப்படுகின்றது. அத்துடன் விவசாயப் பொருட்களை கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அவ்வீதியானது சேதமடைந்து காணப்படுவ்தால் விவசாயிகள் உழவு வேலைகளை மேற்கொள்ள முடியாது பெரும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதிலும் எமது கோரிக்கையை அசட்டை செய்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்வீதியைப் புனரமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

**கூழாமுறிப்பு மக்கள்**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர்சாலை

### மகிழ்ச்சி

நியாயமான கருத்துக்களை வாசகர்களுக்கு அள்ளிவழங்குகின்றாய். வாசகர்களை கவரும் விதத்திலும் முரசு செயற்படுவது பாராட்டுக்குரியது.

விளையாட்டு, சினி விசிட், 24ஆம் பக்கம் என்பவை அற்புதமாக இருக்கின்றது. சினி விசிட் ஒரு கலக்கல் கலக்குகிறது. 24ம் பக்கத்தில் சுவாரசியமான தகவல்களை வழங்கவேண்டும். உன் பக்கங்கள் கவரக் கூடியதாகவும், சுண்டியிழுக்கும் வகையில் இருப்பது மகிழ்ச்சிக்குரியதே

**எம்.ஜெமீலன், நுவரெலியா**

### கவனத்திற்கு...

பல்சுவை அம்சங்கள், கட்டுரைகள், ஜோக்குகள், த்ரில்லான விடயங்கள் என்பவற்றை வழங்கிவருகிறாய்.

பல விமர்சனங்களை முன்வைக்க வேண்டியதும் அவசியமாகும். அதாவது பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணை என்ற கட்டுரை பெறுமதிமிக்கதாக இல்லை. அதன் பெறுமதியைக் கூட்டவேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும். இதை முரசின் ஆசிரியர் கவனத்தில் எடுக்கவேண்டும்.

**எஸ்.எஸ்.சமீம், தர்ஹாநகர்.**

### விழிப்புணர்வு

நீண்ட நாட்களுக்குப் பின் முரசை வாசிப்பதற்கு நேரம் கிட்டியது. பல மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றது. சிறுகதைகள் மிகவும் அருமையாக உள்ளது. சென்ற வாரம் வெளியான அநாதை என்ற கதை சமூகத்திற்கு விழிப்பூட்டும்வகையில் இருந்தது. சமூகத்திற்கு தேவையானதையே எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். உன் பணி தொடரட்டும்

**ம.பாவனா, தெல்லிப்பளை**

### அமைதியின் சொற்கள்

உண்மையான ஆனந்தம் சாதனைகளைப் பற்றியதல்ல, உங்கள் உள்ளேயே அமைதியைக் கண்டுகொள்வதைப் பற்றியது. கண்டு கொள்வதற்காக உள்நோக்கிச் செல்லும் இந்தப் பயணம்தான் எல்லாபயணங்களையும் விட மிக சிறந்த பயணம்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

# சொந்த மண்ணில் முதலிட வாருங்கள்

## - சந்திரகுமார் எம்.பி அறைகூவல்




யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் லக்மன் யாப்பா அபயவர்ந்தன அவர்களின் தலைமையில் நடைபெற்ற வடக்கு மாகாண தொழில் அதிபர்கள் முதலீட்டாளர்களுக்கான விசேட கலந்துரையாடலில் உரையாற்றும்

**வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது உறவுகள் மற்றும் செல்வந்தர்கள் தயக்கமின்றி எம்மண்ணில் முதலிட முன்வாருங்கள். யுத்தத்திற்கு பிந்திய சூழல் அதற்கான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. அத்தோடு மேற்கொண்டுள்ள பலரின் முதலீடுகள் அந்த உத்தரவாதத்தை உறுதிப்படுத்தியுள்ளன என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சொந்த மண்ணில் வந்து தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலம் இம்மண்ணில் வாழ்கின்ற பெரும்பாலான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும். அதற்கான தயார்நிலையிலும் பலர் உள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் இங்கு இயல்புநிலைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனை மையமாகக் கொண்டு பலர் பல தொழில் முயற்சிகளையும் ஆரம்பித்துள்ளனர். எனவே இன்றுள்ள சுழலில் இங்கு தொழில் முதலீட்டுக்கான பாதுகாப்பும் உத்தரவாதமும் உள்ளதென்பதை அவர்களின் முதலீடுகளும் தொழில் மையங்களும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி பல நூற்றுக்கணக்கான வர்த்தகர்களும் ஏனைய தொழில் முயற்சியாளர்களும் யுத்த காலத்திலும்கூட தமது முதலீட்டுக்கு பாதிப்பின்றி தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இதனை முன்மாதிரியாகக் கொண்டு ஏனையவர்களும் எமது மண்ணுக்கு வருகை தந்து தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும், எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பி இன் இணைய வானொலி அங்குரார்ப்பணம்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உத்தியோகபூர்வமான மற்றுமொரு புதிய இணையத்தளத்தினை கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிசார்ந்த செய்திகள், தினசரிச் செய்திகள், உலகச் செய்திகள், அரசியல் கட்டுரைகளை இணையத்தளம் ஊடாக வாசகர்கள் பார்வையிடலாம். இவ் இணையத்தளத்தினை www.epdpnews.net என்ற இணைய முகவரியூடாக பார்வையிட முடியும். அத்துடன், புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகளுக்கு உண்மையானதும் சரியானதுமான செய்திகளையும் தகவல்களையும் வழங்கும் வகையில் அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாக, DD FM இணைய வானொலியும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ் இணைய வானொலியை www.epdpnews.net என்ற இணையத்தளத்தின் ஊடாக நேயர்கள் கேட்க முடியும்.

# யார் இந்த கொராசன் குரூப்?

## நடுங்குகிறது அமெரிக்கா

கொராசன் குரூப் - இது நவீன பயங்கரவாதத்தின் புதிய பெயர் என்கிறார்கள் உளவுத்துறை வட்டாரங்களில். ISIS இயக்கமோ, அல்-கொய்தாவோ செய்யமுடியாத சில காரியங்களை செய்யும் வல்லமை உள்ள சிறிய இயக்கம் இது என்கிறார்கள்.

தற்போது ஈராக்கிலும், சிரியாவிலும் விமானத் தாக்குதல்களை நடத்தும் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேலை நாடுகள், மற்றும் அரபு நாடுகளில் தாக்குதல் நடத்தவோ, பயணிகள் விமானங்களில் வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கவோ, இவர்களை அடிக்க ஆளே கிடையாது என்றும் சொல்கிறார்கள்.

கடந்த (செப்டெம்பர்) 22-ம் திகதி சிரியாவில் உள்ள ISIS இயக்க இலக்குகள்மீது அமெரிக்க மற்றும் அரபு நாட்டு விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. அதிகாலை தொடங்கிய அந்த தாக்குதல்கள், விட்டுவிட்டு மாலைவரை வெவ்வேறு இடங்களில் நடந்தன. மாலையுடன் அனைத்தும் ஓய்ந்துவிட்டன.

ஆனால் அன்றிரவு அமெரிக்க விமானப் படை விமானங்கள் புறப்பட்டன. அவை இருள் சூழ்ந்த நேரத்தில் சிரியாவின் வான் பகுதியில் பறந்து, அலீபோ பகுதியில் சில இடங்களில் குண்டுவீசின. அன்று இரவு, மொத்தம் 8 தடவைகள் நடைபெற்ற இந்த தாக்குதல் பற்றி, கூட்டுப்படைகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை. அந்தளவுக்கு இரகசியமாக, திடீரென நடந்தன அந்தத் தாக்குதல்கள்.

இந்த இரவுநேர தாக்குதல்களில் இலக்கு வைக்கப்பட்டவைதான், கொராசன் குரூப்பின் மறைவிடங்கள் என இப்போது தெரிகிறது.

கொராசன் குரூப்பை சேர்ந்தவர்கள் தாம் இலக்கு வைக்கப்படுகிறோம் என தெரியாமல் இருந்த நிலையில் திடீரென இந்த தாக்குதல்கள் நடந்ததால், அதில் அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கொல்லப்பட்டு இருக்கலாம் என அமெரிக்கா நம்புவதாக தெரிகிறது. அந்த தாக்குதலில் கொராசன் குரூப்பின் தலைவரே கொல்லப்பட்டார் என ஒரு தகவல் உள்ளதாக, இப்போது உளவுத்துறை தரப்புக்களில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது.

**யார் இந்த கொராசன் குரூப்?**
**இவர்களது பின்னணி என்ன?**

முன்பு அல்-கொய்தா இயக்கத்தில் இருந்து பிரிந்த சுமார் 50 பேர், சிரியாவில் தொடங்கிய இயக்கம் இது. சிரியாவில் நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தம், இவர்களுக்கு மறைவைக் கொடுத்தது. அத்துடன், சிரியாவில் உள்ள அல்-கொய்தா ஆதரவு இயக்கம் அல்-நுஸ்ரா இவர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்தது.

அதன்பின் சிறிது சிறிதாக வளர்ந்த இந்த இயக்கத்தில் இப்போது சில நூறு பேர் உள்ளனர் எனத் தெரிகிறது.

ஆட்பலம் அதிகமில்லை. இயக்கமும் சிறியது. இதுவரை சொல்லிக்கொள்ளும் விதத்தில் எந்த தாக்குதலையும் நடத்தியதில்லை. ஆனால், இந்த இயக்கத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை நவீன தொழில்நுட்பத்துடன் மேற்கொள்ளக்கூடிய நிபுணர்கள் உள்ளார்கள் என சி.ஐ.ஏ.விடம் தகவல் உள்ளது.

இந்த குரூப்பின் தலைவர் 33 வயதான முஷின் அல்.ஃ.பட்லி, பின்லேடனின் உள் வட்டத்தில் ஒருவராக இருந்தவராம். பின்லேடன் கொல்லப்பட்டபின், அய்மன் அல்ஜவாகிரியின் தலைமை பிடிக்காமல் வெளியேறியவர்களில் இவரும் ஒருவர்.

இவர் கொல்லப்பட்டதாக கூறப்படுவது வெறும் 3-ம் தரப்பு தகவல்தான். அதை யாரும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. இந்த முஷின் அல்.ஃ.பட்லி, சிறிது காலம் ஈரானில் இருந்ததாக தெரிகிறது. அதன்பின் சிரியாவுக்கு வந்தவர், சிரியாவுக்கு யுத்தம்புரிய வந்த மேலைநாட்டு பிரஜைகளில் திறமைசாலிகளை தமது இயக்கத்தில் இணைத்துக்கொண்டார் என கூறுகிறார்கள்.

இந்த குரூப்பின் தனித்தன்மை, எந்தவொரு பாதுகாப்பு கருவிகளாலும் கண்டுபிடிக்க முடியாத சிறிய hand-held device களில் வெடிகுண்டுகளை பொருத்துவது என்றும் கூறப்படுகிறது.

இந்த இயக்கத்தில் உள்ள வெளிநாட்டு பிரஜைகள் தத்தமது நாடுகளுக்கு பயணம் செய்வதில் எந்த சிக்கலும் கிடையாது. அவர்கள் விமானங்களில் பயணம் செய்யும்போது, இந்த கையடக்க சாதனங்களை தம்முடன் எடுத்துச் செல்லும்போது, அவற்றில் வெடிகுண்டு இருப்பதை கண்டுபிடிக்க முடியாது என்பதுதான், தற்போதுள்ள பெரிய அச்சுறுத்தல்.

இந்த கொராசன் குரூப்பை அமெரிக்க உளவுத்துறைகள் சில மாதங்களாகவே கண்காணித்து வருகின்றன என்று கூறப்படுகிறது. அனால், சிறிய குழு என்பதால், அவர்களால் இரகசியம் காப்பது சுலபம். அத்துடன், தொழில்நுட்பம் தெரிந்த ஆட்கள் என்பதால், தமது தொலைத்தொடர்பு விடயத்திலும் மிக ஜாக்கிரதையாக இருப்பார்கள். தற்போது அமெரிக்க விமானங்கள் தாக்கி அழித்திருப்பது தான், இந்த கொராசன் குரூப்பின் ஒரேயொரு தளமாக இருக்கவேண்டும் என்பதும் கட்டாயமல்ல. அவர்களுக்கு வேறு தளங்களும் இருக்கலாம். அவை சிரியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோகூட இருக்கலாம்.

இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றும் இருக்கலாம். அங்கே சிலீப்பர் செல்களாக வாழ்ந்துகொண்டும் இருக்கலாம்.

இந்த இயக்கத்தின் அலீபோ தளம் தாக்கப்பட்டதையடுத்து, அமெரிக்கா தம்மை குறி வைக்கிறது என்பதை இவர்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள்.

அதுதான், மிகப்பெரிய அச்சுறுத்தல்! காரணம், "அமெரிக்காவின் அடுத்த தாக்குதலுக்குமுன், இவர்கள் தமது கைவரிசையை காட்டலாம்!



## தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாள்

தீன் மணம் கமழும்
தியாகத் திருநாள்
ஹஜ்ஜுப் பெருநாள்.

இஸ்லாம் கூறும்
ஏகத்துவத்தின் வெளிப்பாடு
ஈதுல் அழ்ஹா
ஹஜ்ஜுப் பெருநாள்.

அல்குர் ஆன் வழியில்
அல்லாஹ்வை புகழ்ந்து
அவனடியான் மகிழும்
ஹஜ்ஜுப் பெருநாள்.

இலட்சோப இலட்ச
இஸ்லாமிய மக்களின்
இலட்சிய நாள்
ஹஜ்ஜுப் பெருநாள்.

உயர் மொழி தக்பீர்
உரத்துக் கூறும்
உன்னத நாள்
ஹஜ்ஜுப் பெருநாள்.

பிரார்த்தனைகள் செய்து
பிழைகள் போக்கி
பிறரிடம் அன்பு செலுத்தும்
ஹஜ்ஜுப் பெருநாள்.



எம்.சி.கலீல்,
கல்முனை - 05

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# காலத்தின் தீர்ப்பு!!

தமிழகத்தின் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக பதவியில் இருக்கும் போதே ஊழல் குற்றச்சாட்டில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டு நான்கு வருட சிறைத் தண்டனையை எதிர்கொண்டுள்ளார்.

இந்தத் தீர்ப்பு இந்தியாவின் சட்டம், நீதித்துறையின் வலிமையை உலகுக்கு எடுத்தியம்பியுள்ளது. குற்றவாளியாக இருப்பவர் எவராக இருந்தாலும், எத்தகைய பதவிகளில் இருந்தாலும் பாரபட்சமற்ற நீதியின் வலிமைக்கு கட்டுப்பட்டே ஆகவேண்டும் என்பதை நிருபித்துள்ளது.

முழு இந்தியர்களையும் திரும்பிப் பார்க்கச் செய்த தீர்ப்பாக அது அமைந்தது. தமிழக மக்களுக்கு செல்வி ஜெயலலிதா சிறைக்குச் சென்றது அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்.

ஆனால் செல்வி ஜெயலலிதா கைதுசெய்யப்பட்டதால் இலங்கை தமிழர்களின் தீர்வு விவகாரத்தில் பாதிப்புக்கள் ஏற்படும் என்றவிதமாக சிலர் கருத்துக்கூறுகின்றனர்.

ஜெயலலிதா தமிழீழத்தை உருவாக்குவதற்காக போராட்டத்தை தொடங்கியதற்காகவோ, இலங்கை தமிழர் விவகாரத்துக்கான தனது சட்டசபையில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவோ சிறையில் அடைக்கப்படவில்லை.


அவர் அவரது தனிப்பட்ட குற்றங்களுக்காகவே சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். சிலவேளைகளில் பிணை அனுமதி கிடைத்தால் அவர் விரைவில் வெளியிலும் வரக்கூடும். ஆனால் அந்தச் சம்பவத்துக்கும் இலங்கை தமிழர் விவகாரத்துக்கும் முடிச்சுப்போட்டு கருத்துக்கூறுவோரின் முட்டாள்தனங்களை என்னவென்று கூறுவது?

அடுத்ததாக தமிழர் பிரச்சினையை ஆராய்வதற்காக சம்மந்தன் தலைமையில் பத்துப்பேர் கொண்ட குழு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளனர். அவ்வாறெனின் இவ்வளவு காலமாக தமிழர் பிரச்சினையை தெரியாமலா இவர்கள் காலையில் ஒன்றையும், மாலையில் இன்னொன்றையும் கூறிக் கொண்டிருந்தார்கள் என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கோமாளித்தனங்களுக்கு நடுவே மாவை தலைமையிலேயே அடுத்த வருட இறுதிக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுவிடவேண்டும் என்று சம்மந்தன் கூறியதையும்; தனது உயிரை பணயம் வைத்து சாத்வீகப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தப்போவதாக மாவை சேனாதிராசா கூறியிருப்பதையும் என்ன வகையான நகைச்சுவைத் துணுக்குகள் என்று தமிழ் மக்கள் தரம்பிரித்துச் சிரிப்பது?

எதிர்வரும் காலம் தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் தேசியப் போர்வைக்குள் ஒளிந்துகொண்டுள்ள கோமாளிகளை தமிழ் மக்களுக்கு அடையாளம் காட்டுவதற்கு ஆயத்தமாகிவிட்டதையே கூட்டமைப்பினரின் அண்மைக் கால கருத்துக்களும், செயற்பாடுகளும் வெளிப்படுத்துகின்றனவோ பொறுத்திருப்போம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# ஜனாதிபதியின் ஐ.நா. உரை

## சர்வதேசத்திற்குச் சாட்டை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருபத்தி ஏழாவது கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த வாரம் வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அடுத்த வாரம் மீண்டும் இலங்கை விவகாரம் மனித உரிமைப் பேரவையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகளின் 69ஆவது பொதுச் சபையில் கலந்துகொண்டு உரையாற்றினார். 69 சபை அமர்வின் சபைக்கு தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தெரிவுசெய்திருந்தனர். அவர் சபை அமர்வுக்கு சென்றபோது ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சில புலிப்பினாமி அமைப்புக்களின் பிரதிநிதிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

ஆகையால், பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் ஜனாதிபதியை விஷேட வாயில் வழியாக சபைக்குள் அதிகாரிகள் அழைத்துச் சென்றிருந்தனர். ஆனால் ஜனாதிபதி தனது உரையில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக அலட்டிக்கொள்ளவில்லை. அவரது உரையானது வலிமைமிக்க நாடுகள் மனித உரிமை விவகாரத்தை பாதிக்கப்பட்ட அல்லது வளர்ந்துவரும் நாடுகளுக்கு எதிரான ஆயுதமாகவே பிரயோகிக்கின்றன என்றவிதமாகவே மிகவும் காட்டமாக உரையாற்றினார்.

அவரது உரையில், "ஐ.நா மனித உரிமை பேரவையினால் யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் இலங்கைமீது மேற்கொள்ளப்படும் போர்க் குற்ற விசாரணை ஒழுங்கற்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்றது.

போருக்கு பின்னர் இலங்கை துரதிர்ஷ்டவசமான தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது. புனரமைப்பு, புனர்வாழ்வு, நல்லிணக்கம் ஆகியவை வேண்டாவெறுப்பாக சில தவறான நிகழ்ச்சி நிரலின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இது ஒரு துரதிர்ஷ்வசமானது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தற்போது தலைமை வகிக்கும் பொதுநலவாய அமைப்பு ஐ.நா உறுப்புரிமையில் கால்வாசிக்கும் மேற்பட்ட பங்கை வகிக்கிறது. 2015இற்குப் பின்னரான புதிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்தும் நடைமுறைக்குப் பங்களிப்பதற்கு பொதுநலவாய அரச தலைவர்கள் நவம்பர் 2013இல் கொழும்பில் இணங்கினர். அதியுச்ச வறுமையின் ஒழிப்பு, நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான மீள உறுதிப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மத்திய கவனக் குவியத்தை அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள்.

இரண்டு உலகப்போர்களுக்குப் பின்னராக ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்ட வரலாற்றுத் தறுவாயை நாங்கள் அனைவரும் அறிவோம். அது காணப்பட்ட ஏழு தசாப்தங்களில் இன்னொரு பூகோளப் போரிற்குச் செல்வதிலிருந்து உலகம் பாதுகாக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தரங்களை முன்னேற்றுவதற்கு, நோய்களை இல்லாதொழிப்பதற்கு, சிறுவர்களுக்குக் கல்வியூட்ட, சமாதானத்தை நிலைநாட்ட ஆகியவற்றில் ஐ.நா உதவியுள்ளது. இந்த நிறுவனத்தின் ஸ்தாபக நோக்கினை மீள உறுதிப்படுத்துவதற்கு உலகச் சமூகம் வருடத்திற்கு வருடம் செப்ரெம்பரில் ஒன்றுசேர்ந்து வருகிறது.

சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, செழிப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு ஐ.நா.வின் பங்கு இந்த தற்கால உலகிற்கு அத்தியாவசியமானது. எனினும், சர்வதேச சமூகம் முழுவதினதும் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் வெற்றிகொள்ளுவதற்கு தேர்வுகள், பாகுபாடுகள் பற்றிய புலக்காட்சிகள் எவையுமின்றி நியமங்களின் தொடர்ச்சியான தன்மை சபையிடம் காணப்படுதல் என்பது அவசியமான தேவைகளில் ஒன்றாகும்.

இந்தத் தறுவாயில்தான், தற்போதைய இயங்கும் அமைப்பு அதன் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு புதிய பரீட்சிப்பு அவசியமானது.

சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள பிரச்சினைகளின் சிக்கல் தன்மையைப் பற்றிய புரிதல் அல்லது ஏற்றுக்கொள்ளல் இன்றி, உள்நோக்கங் கொண்ட நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்துவதற்கான கருவியாக மனித உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. எங்கள் அனைவராலும் மனித உரிமைகள் ஒரு நன்னெறி, நன்னடத்தைக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டுமே தவிர, அரசியல் கருவியாக அல்ல. நாடுகளின் சமூக, கலாசாரப் பாரம்பரியங்களின் அமைப்புக்களைப் போதியளவில் கருத்திற்கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் வெளிப்புறத் தலையீடானது தவிர்க்கமுடியாத முடிவாக நிலைகுலைதலிலேயே நிறைவடையும். உலகின் பல்வேறு பகுதிகள் இன்று இதற்கு மிகுந்த ஆதாரமாக உள்ளன.

மீள்புனரமைப்பு, புனர்வாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கையானது 5 வருடங்கள் என்ற சிறிய காலப்பகுதியில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் தொடர்பாக மிகக் குறைவான கவனத்தைச் செலுத்தும் சிலரால் தவறாகப் புனையப்பட்ட நிகழ்ச்சி நிரல்களினால் துரதிர்ஷ்டவசமாக பாதிப்படைந்ததாக போருக்குப் பின்னைய இலங்கையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மாறியுள்ளது. கணிசமான இந்த அடைவுகளைப் புறக்கணித்துக் கொண்டு எனது நாடு இன்று இலக்காகியுள்ளதில் சமநிலையும், விகிதாசாரமும் குன்றிய தன்மை வெளிப்படையானது. மனிதாபிமான அவசர நிலைமை கொண்ட ஆழ்ந்த குழப்பம் மிகுந்த நிலைமைகள் காணப்படும். ஏனைய பகுதிகளுக்கான அணுகு முறைக்கு இது முற்றிலும் முரணானதாகும்.

பன்முகச்சார்பியம் தொடர்ந்தும் சம்பந்தப்பட்டதாகவும், செயற்திறனுள்ளதாகவும் காணப்பட, சம்பந்தப்பட்ட நிறுவகங்களின் சீரமைப்பு அத்தியாவசியமானது. வெற்றிகரமாக அமைவதற்கு இந்த நடவடிக்கையானது ஐ.நா அமைப்புக்கள், பொறிமுறைகளின் அரசியல் நீக்கத்தோடு, வெவ்வேறு வகையான நிதி வழங்கலின் பணயக்கைதியாக இருப்பதை நிறுத்துவதையும் கொண்டிருக்கவேண்டும். கலந்துரையாடல், நிலைமைகளின் சிறப்பான புரிதல், தேசிய நிறுவகங்களைப் பலப்படுத்துவதற்கு உதவுதல் உட்பட ஒத்துழைப்பு மூலமாக அரசாங்கங்களுடன் பணிபுரிவதற்கு ஐ.நா அமைப்புக்கள் வழிகளைக் கண்டறிய வேண்டும். பலவந்தப்படுத்தும் உத்திகளுக்குப் பதிலாக இந்த அணுகுமுறையானது பூகோள சவால்களுக்கான நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகளுக்கான தேடலாக, பல்தரப்பு இராஜதந்திரத்தின் பிரதான புள்ளியை உருவாக்க வேண்டும் என்றும் அழுத்தம் திருத்தமாக கூறினார்.

மேலும் சர்வதேசப் பயங்கரவாத ஆபத்துக்கள் தொடர்பாகவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். "மத்திய கிழக்கில் அதிகரித்துள்ள வன்முறை மிகவும் வேதனை தருகிறது. இறையாண்மைமிக்க, சுதந்திரமான, ஈடேறக்கூடிய, ஒற்றுமையான பலஸ்தீன தேசத்தின் விரைவான சாத்தியப்பாட்டிற்கான இலங்கையின் ஆதரவை நான் மீள வலியுறுத்துவதோடு, இது பாதுகாப்பான, அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளோடு, இஸ்ரேலோடு அருகில், சமாதானமாக அமைய வேண்டும். ஐ.நா. இல் பலஸ்தீனத்தை முழு உறுப்பினராக விரைவில் வரவேற்பதற்கு எதிர்பார்த்திருக்கிறோம்.


தீவிர கோட்பியல்களிலிருந்து உருவாகி, தேசிய எல்லைப்புறங்கள் வழியே மக்களைப் பாதிக்கும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான பல்தரப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் காணப்படுகிறது.

பூகோளம் முழுவதிலுமுள்ள தேசங்களின் பாதுகாப்புக்கும், உறுதித்தன்மைக்குமான கடுமையான அச்சுறுத்தலாக பயங்கரவாதம் தொடர்ந்தும் காணப்படுகிறது. பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கி துன்புறு நிலையில், ஜனநாயகப் பாரம்பரியம், உயர் சிந்தனைகள் வழி உருவாக்கப்பட்ட சமுதாயங்கள், சமூகங்கள், நிறுவகங்கள் ஆகியவற்றில் பயங்கரவாதம் செலுத்தும் சடுதியான பாதிப்புக்களைப் பற்றி இலங்கை நன்றாக அறியும். சர்வதேச பயங்கரவாதம் மீதான ஐ.நா விரிவான மாநாட்டின் விரைவான இறுதியாக்கம், ஏற்றுக்கொள்ளல் உட்பட பயங்கரவாதம் மீதான பல்தரப்பு நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் பலப்படுத்த வேண்டும். பயங்கரவாத நிதியளிப்பு, கடற்கொள்ளை, ஒழுங்குபடுத்தப்பட்ட சர்வதேச குற்றங்களின் அனைத்து வகைகளையும் எதிர்கொள்வதற்குமான பல்தரப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் காணப்படுகிறது'' என்று கூறினார்

• பொருளாதார நெருக்கடியையும் ஒரு ஆயுதமாக உலக நாடுகள் பிரயோகிப்பதையும் அவர் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை. அவர் தனது உரையில், ''அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கெதிரான ஒருதலைப்பட்சமான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை ஆழ்ந்த கரிசனத்தை வெளிப்படுத்துவதோடு, கியூபாவிற்கெதிரான நீதியற்ற பொருளாதார, வர்த்தக, நிதித் தடையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஐ.நா பொதுச்சபைக்கான கோரிக்கையின் தொடர்ச்சியான ஆதரவாளராக இருந்து வந்துள்ளது.

இந்த வகையான ஒருதலைப் பட்சமான தடைகள் நாட்டின் அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்கும் என்பதோடு, அவை நெறிமுறையற்றவை'' என்று எடுத்துரைத்தார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



**மின்சாரத்தில்** இயங்கும் தலைவாரும் பிரஷ். பாரிஸில் இருந்து இறக்குமதியாகும் பிரஷ் அது. விலை பன்னிரெண்டு ஷில்லிங்ஸ் என்று தொடர்ந்தும் கூறிக்கொண்டே போனார் ரிவர்ஸ்.

ரிவர்ஸின் ஒரு வார சம்பளமே பன்னிரெண்டு ஷில்லிங்ஸ்தான் என்பதால், தலைவாரும் ஒரு பிரஷ்ஷின் விலை பன்னிரெண்டு ஷில்லிங்ஸ் என்பது ஆச்சரியமான விஷயமாக அவருக்குத் தெரிந்தது.

ஆனால் எட்வேர்ட் இந்த பிரஷ் பற்றிய பிரஸ்தாபத்தைக் கவனிக்க வில்லை. அவர் லேசாக சிரித்தார்.

காரணம், அவருக்கு ஒரு க்ளூ கிடைத்துவிட்டது.

"ட்ரெண்ட், தனது அறையை மூடிக் கொண்டு இரகசியமாக சிகரெட் குடிப்ப தாக வதந்தி உள்ளது" என்று ரிவார்ஸ் கூறிய கூற்றில், சாவி பற்றி ஒரு க்ளூ கிடைத்துவிட்டது எட்வேர்ட்டுக்கு.

**ஒயின் சேகரித்து வைக்கும் இடத்தில் இருக்கிறது மர்மம்!**

அந்த நாளைய பிரிட்டிஷ்கார்கள் புள்ளிவிபரங்கள் சேகரிப்பில் மன்னர் கள். அவர்களால் எடுக்கப்பட்ட பல புள்ளிவிபரங்களில் ஒன்று. 1851இல் பிரிட்டனில் இருந்த திருமண வயது வந்தும், திருமணமாகாத இளம் பெண் களின் எண்ணிக்கை 2,765,000. திருமணமாகாத ஆண்களின் எண்ணிக்கை யுடன் ஒப்பிடும்போது இது கிட்டத்தட்ட இரண்டு மடங்கு.

இந்தப் பெண்களில் பெரும்பாலானவர் கள் நடுத்தர மற்றும் உயர்மட்ட குடும்பங் களைச் சேர்ந்த பெண்கள்.

அந்த நாளைய பிரிட்டனில் பெண் களின் திருமண வயது சராசரியாக 20 இலிருந்து 25க்கு உள்ளே. அதற்கு மேலே வயதுகூடினால் அந்தப் பெண்ணுக்கு திருமணமாகாது போய் விடுமோ என்ற கவலை பெற்றோர் களுக்கு ஏற்படத் தொடங்கிவிடும்.

ஹடில்ட்ஸன் அன்ட் பிராட்போர்ட் வங்கியின் உரிமையாளர்களில் ஒரு வரான ட்ரெண்ட் பணக்காரராக இருந்தபோதிலும், அவரது 29 வயது மகள் எலிசபெத்துக்கு அதுவரை திருமணமாகவில்லை.

இதனால்தான் எட்வேர்ட் தனக்கு இன்னமும் திருமணமாகவில்லை என்று சொன்னவுடன் அவரை முதலில் நோட்டம் விட்டார் ட்ரெண்ட்.

எட்வேர்ட் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். பந்தயத்தில் யாரும் கட்டவே முடியாத அளவு பணத்தை கட்டியிருந்தார். அந்தப் பணம் தோற்றுப் போனதற்கும் கவலைப்படவில்லை.

மொத்தத்தில் இவரும் ஒரு பெரிய பணக்காரராக இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டார்.

"இந்த ஞாயிற்றுக் கிழமை எனது மாளிகைக்கு மாலை நேரம் டீ குடிக்க வரமுடியுமா?" என்று அழைப்புவிடுத்தார்.

தனக்கு வேறு அலுவல் ஏதாவது அன்று இருக்கின்றதா என்பதுபோல யோசித்த எட்வேர்ட் பின்னர், "ஞாயிற்றுக்கிழமை தானே... ஓ.கே வருகிறேன்" என்று கூறியிருந்தார்.

இந்த எலிசபெத்தின் பெயர் பின்னாட்களில் ரயில் கொள்ளை பற்றிய விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்ற போது சில தடவைகள் சொல்லப்பட்ட போதிலும் அவர் நேரடியாக நீதிமன்றம் வரவில்லை. அரசு தரப்பால் சாட்சியாக அழைக்கப்படவும் இல்லை.

சமூகத்தில் அவருடைய தந்தை ட்ரெண்ட்டுக்கு இருந்த அந்தஸ்து காரணமாக, அவரது பெயர் கேஸில் இருந்தாலும் அவரை நீதிமன்றத்துக்கு அழைக்கவில்லை என்று பத்திரிகைகள் எழுதின. எலிசபெத்தின் போட்டோவும் பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை.

ஆனால் அவரது தோற்றம் எப்படியிருக்கும் என்று பத்திரிகைகள் எழுதியிருந்தன. (வழக்கு பிரபலமாக நடைபெற்ற நாட்களில்)

பத்திரிகைகளின் குறிப்புப்படி, எலிசபெத் நடுத்தர உயரமுடைய பெண். பெரிய அழகி என்று கூறிவிட முடியாத படி சுமாரான தோற்றமுடைய பெண்.


எட்வேர்ட் சொன்ன நேரத்துக்கு ட்ரெண்ட்டின் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை போய்ச் சேர்ந்தார். அவருக்கு தனது மகளை அறிமுகம் செய்துவைத்தார் ட்ரெண்ட்.

"எட்வேர்ட் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்று வருபவர். பெரிய வர்த்தகர். இப்போதுகூட நியூயோரக் நகரத்துக்கு சென்று திரும்பியிருக்கிறார்" என்று மனைவி எமிலியிடமும் மகள் எலிசபெத்திடமும் அறிவித்தார் ட்ரெண்ட்.

மனைவியிடம் ஏற்கனவே எட்வேர்ட் பற்றிக் கூறியிருந்த ட்ரெண்ட், "எலிசபெத் துக்கு ஏற்ற கணவராக வரத் தகுதியுடைய ஆள்" என்று கூறியிருந்ததால், எட்வேர்ட் டுக்கு வரவேற்பு பலமாக இருந்தது.

எட்வேர்ட்டின் பேச்சு, நடையுடை பாவனைகள் எல்லாமே ட்ரெண்ட் தம் பதிகளைக் கவர்ந்திருந்தது. எலிசபெத்துக்கும் எட்வேர்ட்டைப் பிடித்திருந்தது.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 133

மணியம்

இது தற்செயலாக நடந்ததா அல்லது திட்ட மிட்டுச் செய்யப்பட்டதா என்பதை என்னால் சொல்லமுடியாது. ஏனெனில் இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நான் இருந் திருக்கவில்லை. அங்கு நின்ற விசுவானந்ததேவனின் இயக்கத் தோழர்கள் சிலரே பின்னாட்களில் இந்தத் தகவல்களை எனக்குச் சொன்னார்கள்.

நான் தோழர் விசுவானந்த தேவனை அவர் இந்தியா புறப் படுவதற்கு முதல்நாள் கோண்டா விலிலுள்ள அவரது மாமியார் (மனைவியின் தாயார்) வீட்டில் சந்தித்து சில மணித்தியாலங்கள் உரையாடினேன். அவர் இந்தியா புறப்படுவதற்கு முன்னர் என்னைச் சந்திக்க விரும்பியதால், அவரது இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் என்னை விசுவானந்ததேவனிடம் அழைத்துச் சென்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தான் இந்தியா செல்லவிருப்பது குறித்து என்னிடம் பிரஸ்தாபித்தார்.

ஆனால் எப்பொழுது, எங்கி ருந்து புறப்படப் போகின்றார் என்ற விபரங்களை அவர் என்னிடம் தெரிவிக்கவில்லை. எனக்கும் அது அவசியமாகப்படவில்லை. ஆனால் அந்தச் சந்திப்புத்தான் எமது இறுதிச் சந்திப்பாக அமை யும் என நான் எண்ணாமலே அது அமைந்துவிட்டது.

மறுநாள் விசுவானந்ததேவன் பயணம் செய்த நெடுந்தீவைச் சேர்ந்த இரத்தினம் என்பவரின் படகு இரத்தக்கறைகளுடன் நயினாதீவு கடற்படை இறங்கு துறையில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்தபின்னரே நடந்துள்ள விபரீதம் எமக்குப் புரிந்தது.

அதன்பின்னர் என்னைச் சந்தித்த தோழர் சசி.கிருஸ்ண மூர்த்தி (பனம் பொருள் அபி விருத்திச் சபையின் செயலாளராக இருந்தவர். புலிகள் பூநகரில் சுட்டு வீழ்த்திய 'லயன் எயார்' விமானத்தில் பயணம் செய்கை யில் மரணித்தவர்). தோழர் விசுவானந்ததேவன் இந்தியா புறப்படுவதற்கு முதல் நாள் இரவு யாழ்.மருதடி வீதியிலிருந்த தனது வீட்டில்தான் தங்கியிருந்தார் என்ற தகவலைச் சொன்னார்.

அத்துடன் அவர் என்னைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, விசுவானந்ததேவன் மறுநாள் இந்தியா புறப்படுவதற்கு முன்னர் தான் நீண்டகாலமாக வளர்த்திருந்த குறுந்தாடியை அவரது வீட்டுக் கிணற்றடியில் வழித்துப் போட்டுள்ளதைக் காட்டி மிகவும் மனங்கலங்கி வேதனைப்பட்டார்.

தோழர் விசுவானந்த தேவனின் மரணம் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதா அல்லது எதிர் பாராமல் சந்தர்ப்பம் வாய்த்து செய்யப்பட்டதா என்பதைக் காலம்தான் வெளிக்கொணர வேண்டும். ஆனால் அதன் பின்னணியில் அவிழ்க்கப்பட வேண்டிய சில மர்ம முடிச்சுகள் உள்ளன.

கபிலம்மான் குறிப்பிட்ட அந்த குருநகரைச் சேர்ந்த விசுவானந்த தேவனின் இயக்க உறுப்பினரை, நான் விடுதலையாகி வந்த பின்னர் மூன்று தடவைகள் கண்டேன். முதல் தடவை காணும்போது, என்னுடன் பி.எல்.எப்.ரி இயக்கத்திலிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவரும் இருந்தார். ஒரு கடைவாசலில் அந்த நபர் ஏதோ வாங்குவதற்காக சைக்கிளை நிறுத்தினார். நாம் அவருடன் கதைப்பதற்காக அவர் அருகில் சென்றபோது, அவர் எம்மைப் பார்த்துவிட்டு தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

இன்னொரு தடைவ நான் சைக்கிளில் யாழ்.றக்கா வீதியால் செல்லும் போது அவர் எதிரே வந்து கொண்டிருந்தார். தூரத்தில் என்னை அவதானித்துவிட்ட அவர், திடீரென குறொசெற் வீதியால் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

அடுத்த தடவை நானும் பி.எல்.எப்.ரி இயக்கத்திலிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த நண்பரும் சைக்கிள்களில் சவாரி செய்த போது, அதே றக்கா வீதியில் எதிர்பாராமல் நேருக்கு நேர் சந்திக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது. இந்தத் தடைவ அவர் எனக்குத் தலையசைத்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

அப்பொழுது புலிகள் யாழ்ப் பாணத்தைத் தமது இரும்புப் பிடியில் வைத்திருந்தபடியால், பயம்காரணமாக என்னைச் சந்திப்பதை அவர் தவிர்த்தும் இருக்கலாம்.

அதன்பின்னர் நான் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், புலிகளின் தேடுதலுக்குப் பயந்து மறைந்தும் மறையாமலும் கொழும்பில் இருந்தபோது, புறக் கோட்டையில் கடைவைத்திருந்த எனது நண்பர் ஒருவரிடமிருந்து ஒருநாள் எனக்கு ஒரு அழைப்பு வந்தது. நான் குறிப்பிட்ட அந்த குருநகரைச் சேர்ந்த நபர் (எனது நண்பருக்கும் அவரைத் தெரியும்) தனது கடைக்கு வந்திருப்பதாகவும், நான் கொழும்பில் இருப்பது குறித்து அவருக்குச் சொல்லி, என்னைச் சந்திக்க விருப்பமா எனக் கேட்டபொழுது அவர் விரும்பியதாகவும், எனவே என்னைத் தனது கடைக்கு உடன் வரும்படியும் அவர் அழைத்தார்.

நான் அவரது அழைப்பை ஏற்கமுடியாமல் இருப்பதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, குறித்த நபர் குறித்து எச்சரிக்கை யாக இருக்கும்படி எனது புறக் கோட்டை கடைக்கார நண்பரிடம் சொன்னேன். பின்னர் வேறு ஒருநாளில் புறக்கோட்டை நண்பரிடம் சென்று குறித்த நபர் பற்றிய எனது ஐயப்பாட்டினை விளக்கிச் சொன்னேன்.

**புலிகளின் புலனாய்வுப் பிரிவில் ஒரு 'கதை சொல்லி'!**

எமது வதை முகாமுக்கு புதிதாக சிறீ என்ற ஒருவன் கொண்டுவரப்பட்டான். அவன் புலிகளின் புலனாய்வுப் பிரதிப் பொறுப்பாளரான கபிலம்மானு டன் வேலை செய்த ஒருவன் என, அவன் வாய்மூலமாகவே அறிந்துகொண்டோம். அவன் ஏதோ நிதி விவகாரத்தில் ஒழுங் கீனமாக நடந்ததால் அங்கு கொண்டுவரப்பட்டதாக அவனே சொன்னான். அதாவது, புலனாய்வுப் பிரிவில் வேலை செய்த ஒருவருடைய கஸ்டத்தில் வாழும் குடும்பத்தினருக்கு, கபிலம் மானின் அனுமதி இல்லாமல் ஒருதொகை பணத்தைத்தான் வழங்கியதே தன்மீதான குற்றச் சாட்டு என அவன் தெரிவித்தான்.

பொதுவாக இம்மாதிரி வருபவர் களுடன் உள்ளே இருப்பவர்கள் உடனடியாகப் பழகமாட்டார்கள். அவர்கள் சொல்வதையும் இலேசில் நம்பமாட்டார்கள். புதிதாக வந்தவரைச் சில நாட்கள் நன்கு அவதானித்த பின்னரே அவருடன் பழகுவார்கள்.

ஏனெனில், புலிகள் இந்த மாதிரிச் சிலரை கைதிகள் வேசத்தில் இடையிடையே உள்ளே அனுப்பி, அங்குள்ள கைதிகள் என்ன மனோநிலை யில் இருக்கிறார்கள், என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள், தமது விசாரணைகளின்போது சொல்லாமல் ஒளித்த ஏதாவது விடயங்கள் மீதமிருக்கின்றனவா என உளவு பார்ப்பதுண்டு.

எனவே இந்த சிறீ என்பவனின் விடயத்திலும் நாம் கவனமாகவே நடந்துகொண்டோம். ஆனால் அவன் எல்லோருடனும் நீண்டகாலம் பழகியவன் போல வலிந்து வந்து கதைக்கத் தொடங்கிவிட்டான். என்னைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டதாகச் சொல்லி, என்னுடனும் வலிந்து வந்து கதைத்தான்.

அவன் சொன்ன தகவல் களிலிருந்து அவனும் கபிலம் மான், காந்தி போன்றவர்கள் போல திருகோணமலையைச் சேர்ந்தவன் எனத் தெரிய வந்தது. கபிலம்மானால் பயிற்றுவிக்கப்பட்ட அவன், தனது கூடுதலான புலனாய்வு வேலைகளை கொழும்பிலும், தென்னிலங்கையின் சில பகுதிகளிலும் மேற்கொண்டு வந்திருக்கிறான். ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன மீதான புலிகளின் தாக்குதல் உட்படப் பல தென்னி லங்கைத் தாக்குதல் முயற்சி களில் தான் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டதாகச் சொன்னான்.

தென்னிலங்கையில் தாம் புலனாய்வு வேலைகளுக்குச் செல்லும்போது, தமது நடவடிக் கைகள் குறித்து புலனாய்வுப் பிரிவின் மேல்மட்டத்திலுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே அந்தத் தகவல் தெரிந்திருக்கும் என்றும் அவன் சொன்னான்.

(தொடரும்...)




# நிலமெல்லாம் இரத்தம் 122

பா.ராகவன்

இத்தோடாவது நாசர் நிறுத்திக் கொண்டாரா என்றால் அதுதான் இல்லை. முதலாளித்துவ தேசங்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இப்பட்டியலில் இஸ்ரேலையும் நாம் சேர்த்தாக வேண்டும் - ஆகிய தேசங்களுக்கு எதெல்லாம் பிடிக்காது என்று பார்த்துப் பார்த்து, அதை மட்டும் செய்ய ஆரம்பித்தார். உதாரணமாக கம்யூனிட்ஸ் தேசமான சீனாவுடன் நல்லுறவுக்கு வேலை செய்தார். சோவியத் யூனியனை நட்பாக்கிக் கொண்டார்.

இதையெல்லாம் பார்த்து அப்போதைய பிரிட்டன் பிரதம மந்திரி சேர் அண்டனி ஈடனுக்கு இரத்தக்கொதிப்பே வந்துவிட்டது.

அந்த அறிவிப்பு.

ஒரு கால்வாய்க்கு என்ன பெரிய சரித்திரம் இருந்துவிட முடியும்?

ஆச்சரியமாகத்தான் இருக்கும். சுயஸின் பெயர்தான் கால்வாயே தவிர, உண்மையில் அது ஒரு சிறிய கடல் என்றுதான் சொல்ல வேண்டும். அத்தனை நீளம். அத்தனை ஆழம். பிரமாண்டமான கப்பல்களெல்லாம் மிக அநாயாசமாக வரும். யுத்த தளவாடங்களை போர் விமானங்களை ஏற்றிக்கொண்டு இராணுவக் கப்பல்கள் அங்கே அணி வகுக்கும். வெள்ளம் வரும். எல்லாம் வரும்.

மூத்திய தரைக் கடலையும் செங்கடலையும் இணைப்பதற்காக உருவாக்கப்பட்ட கால்வாய் இது. இன்று நேற்றல்ல, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே இப்படியொரு கால்வாய்க் கான சாத்தியத்தையும், அவசியத்தையும் அந்நாளைய எகிப்து மன்னர்கள் யோசித்திருக்கிறார்கள்.

முதலில் நேரடியாக இரு. கடல்களை ஒரு கால்வாய் வெட்டி இணைக்கலாம் என்று யாருக்கும் தோன்றவில்லை. மாறாக, ஒரு கால்வாயை வெட்டி எகிப்தின் அங்கவஸ்திரம் மாதிரி தேசமெங்கும் ஓடும் நைல் நதியில் எங்காவது இணைத்துவிட்டால், நைல் நதி



ஒரு யுத்தம் நெருக்கிக் கொண்டிருக்கிறது என்று பகிரங்கமாகவே அவர் தம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் குறிப்பிட்டார்.

''நாசரின் தேசியவாதம் நல்லதுக்கே இல்லை. இது இத்தாலியில் முசோலினியும், ஜெர்மனியில் ஹிட்லரும் பேசிய தேசியவாதம் போன்றதுதான். அவர்களுக்கு நேர்ந்த கதிதான் நாசருக்கும் நேரும்'' என்றே குறிப்பிட்டார் அவர்.

எல்லாவற்றிற்கும் மூலகாரணம் சுயஸ்.

இவற்றுக்கு மட்டுமல்ல; இதற்கெல்லாம் பின்னால் சில வருடங்கள் கழித்து இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே நடைபெற உள்ள ஆறு நாள் யுத்தம் என்று அழைக்கப்பட்டதொரு பெரிய போருக்குமேகூட அந்தக் கால்வாய்தான் ஆதிமூலக் காரணம் என்பதால் மிகவும் கொஞ்சமாகவாவது சுயஸ் கால்வாய் பிரச்சினையைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது இங்கே இன்றியமையாதது ஆகிறது.

இஸ்ரேல் பலஸ்தீன் பிரச்சினையின் இரண்டாவது பாகமும் இந்த சுயஸ் கால்வாயில்தான் பிறக்கிறது.

மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் பிரிக்கும் எகிப்தின் வடக்குப் பகுதியில் இந்தக் கால்வாயை வெட்டியதனால்தான் ஐரோப்பாவும் ஆசியாவும் கடல்வழியே மிக நெருக்கமாக இணையமுடிந்தது. விமானப் போக்குவரத்து, தரைவழிப் போக்குவரத் தெல்லாம் சரிப்படாத காரியங்களுக்கு முன்பெல்லாம், ஐரோப்பாவிலிருந்து ஆபிரிக்காவைச் சுற்றிக் கொண்டுதான் கடல் மார்க்கமாக ஆசியாவை அடையமுடியும்.

இந்த ஒரு கால்வாய் ஒட்டுமொத்த உலக வர்த்தகத்தையே திசைமாற்றி வழிநடத்தச் செய்திருக்கிறது என்றால் நம்புவது சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும்.

ஆனால், அதுதான் உண்மை. நீர் ததும்பும் இந்தப் பிராந்தியத்தில் தீப்பிழம்பு களும் அந்தச் சமயத்தில் எழவே செய்தன.

காரணம் நாசர், சுயஸ் கால்வயை தேசியமயமாக்கி, சர்வதேசக் கப்பல் வர்த்தகத்துக்கு குண்டுவைத்த அவரது

கடலுக்குப் போகும் பாதை வழியே கப்பல்கள் செல்லலாம் என்றுதான் யோசித்தார்கள். இந்த யோசனை, கி.மு ஆறாம் நூற்றாண்டில் எகிப்தை ஆண்ட மன்னர்கள் துத்மோசிஸ் 3, பராநெகோ ஆகியோருக்கு இருந்திருக்கிறது. சில சில்லறை முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டிருக்கிறர்கள்.

அதற்குச் சில காலம் கழித்து ஈரானியர்கள் (அப்போது பெர்சியர்கள்) எகிப்தின்மீது ஒருசமயம் படையெடுத்து வென்றிருக்கிறார்கள். அப்போது எகிப்தின் ஆட்சிப்பீடத்தில் ஏறிய மன்னர் டேரியஸ் இந்தக் கால்வாய்த் திட்டத்தை உடனே செய்து முடித்துவிடவேண்டும் என்று உத்தரவிட்டதாகத் தெரிகிறது.

அப்போது ஒரே கால்வாயாக இல்லாமல் இரண்டு தனித்தனிக் கால்வாய்களை வெட்டி இரு எல்லைகளில் இணைத்து நடுவே ஒரு பொதுச்சரடாக நைல் நதியை இணைத் திருக்கிறார்கள். இடையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைச் சீற்றங்களால் நாசமாகி மீண்டும் கால்வாய் சரிசெய்யப்பட்டு, மீண்டும் நாசமாகி ஒரு கட்டத்தில் கால்வாய்த் திட்டத்தையே கைவிட்டுவிட்டார்கள். சுயஸ் கால்வாய் என்பது கற்பனையில் மட்டுமே சாத்தியம் என்கிற முடிவுக்கு அப்போதைய எகிப்து மன்னர் வந்துவிட்டார்கள்.

சுயஸ் கால்வாய் திட்டத்துக்கு மறுபிறப்பு அளித்தவர் நெப்போலியன். அவர் பிரான்ஸின் சக்கரவர்த்தியாக இருந்தபோது தான் (1800 காலகட்டம்) ஐரோப்பாவையும் இந்தியாவையும் கடல்மூலமாக இணைப்பதற்கு இந்தக் கால்வாய்த் திட்டத்தைச் சரியாகப் பயன்படுத்தினால்தான் முடியும் என்று சொன்னார்.

சொன்னதோடு மட்டுமல்லாமல், தன்னுடைய பொறியியலாளர்களையும் அங்கே அனுப்பி வேலையை உடனே ஆரம்பிக்கச்செய்தார். (நெப்போலியன் அப்போது எகிப்துமீது படையெடுத்து வெற்றி கண்டிருந்தார்.)

(தொடரும்...)

# காதல் ஊழல்

10



உண்ண வழியில்லாமல் தவித்தாலும் உதவ மாட்டான் மனிதன் எனும் நாமம் இருக்கும். மனித குணம் இம்மி யளவும் இப்பொழுது இல்லவே இல்லை...!

மரகதம் சந்தித்த மனிதர்களுக்குள் மனித குணம் இருக்கும் மூவரைச் சந்தித்தாள். அதில் முதலாவது நபர் இராண்டாவது கணவர். இரண்டாவது நபர் பெரியார். மூன்றாவது நபர் மாரிமுத்து.

அவள் விதவையாக இருக்கும்போது உயர்ந்த பண்புடன் இடையிடையே பணம் எவ்வளவாவது கொடுப்பதும் உணவுப்பொருள் வாங்கிக் கொடுப்பார். அந்த செயலைக்கூட இழிவாக நடப்பதாக இருவரையும் இணைத்து வைத்தது இந்த இழிவான சமூகம்.

அப்படியான ஒரு நல்ல மனிதனின் வருகைக்காய் அல்லது அவர் தன் மகளை தன்னுடன் இணைத்து வைப்பார் எனும் திட நம்பிக்கையில் இறைவனை வேண்டியவாறு காத்திருந்தாள் மரகதம்!

வானமோ விட்டுவிட்டு கொட்டியது. காலையில் இருந்து சாப்பாடோ. தண்ணீரோ இல்லாமல் காத்திருந்தாள்.

புஸ்பாவின் பாசத்தை உணவாகக் கொண்டாள், கண்ணீரை பருகினாள் காத்திருப்பு தொடர்ந்தது. .

பொழுது மாலையை மணம் முடிக்க குணம் எடுத்துக்கொண்டு இருந்தது. பொழிந்த கடும் மழை குறைந்தது. மரகதம் கோயிலில் இருந்து கொஞ்சம் வெளியே வந்து எட்டிப்பார்த்தாள். மாரிமுத்து வீட்டுக்குவரும் அந்த ஒற்றையடிப்பாதையை!

மரகதத்தின் உணர்வுகள் புதைகுழிக்குள் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தது!

தொலைவில் ஒரு துவிச்சக்கரவண்டி வருவதைக்கண்டாள் மரகதம். அத்தான் மாரிமுத்தும் அன்பு மகள் புஸ்பாவும் வரலாம் என நம்பிக்கை வைத்து இன்னும் கொஞ்சம் வழிநோக்கி விழியை அகல விரித்து அவதானித்தாள்.

இமைக்காமல் பார்த்த வண்ணம் தன்னையறியாமல் சுயநினை விழந்திருந்தாள். அவளின் சுயபுத்தியை மகளின் நினைவுகள் மழுங்கடித்துக்கொண்டிருந்தது.

அவளின் அருகில் துவிச்சக்கர வண்டி வந்து நின்றது...


“மரகதம் என்ன நடந்தது?”

அப்படி ஒரு ஆணின் குரல் ஒலித்தது...

மாரிமுத்துவினதும் மகளினதும் நினைவுகள் மட்டும் மாறிமாறி அவள் நினைவுகளுடன் திருவிளையாடல் நடத்தியதால் அந்த ஆணின் குரல்கேட்டதும்,

“ஆ... அண்ணா என்றாள்”

அந்த ஆண் குரலின் சொந்தக்காரன் அதிர்ந்து போனார்.



அவர் வேறு யாருமில்லை கணவன் அருளானந்தம்!

அவளுக்கு மாரிமுத்து அத்தானாக இருந்தாலும் அண்ணா என்றே அழைப்பாள். அந்த குறுகிய ஒரு சில விநாடிகளுக்குள் அருளானந்தத்தின் மூளைக்குள், “பொம்பளங்க காதலத்தான் நம்பி விடாதே” என்ற பாடல் வரிகள் நுழைந்து மனதை காயப்படுத்திச் சென்றது.

மரகதம் உடனே, “மன்னிச்சிடுங்க... நான் நினைச்சன் மாரிமுத்தண்ணே என்று...” பொம்பளங்க காதல்... நுழைந்ததால் அருளானந்தமும் ஆடிப்போனார். வீட்டுக்காரியா இப்படி கூப்பிட்டாள் என்று மோப்பமிட்டுக்கொண்டிருக்கையில் மரகதத்தின் அந்தக்குரல் செவிகளுக்குள் நுழைந்ததும் செவிடனுக்கு காது கேட்பதுபோல் உணர்ந்தார் அருளானந்தம்.

இந்த விடயத்தில் மனிதனின் மனம் இப்படித்தான் இருக்கும் என்பதை கற்றுக்கொண்டேன். அதை உங்களுக்கும் உணர்த்தும் சந்தர்ப்பமாகவும் கொள்கிறேன்.

இது ஒரு பாடமும்கூட... அத்தோடு திடீர் முடிவெடுக்காமல் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும் என்பதையும் இலவசமாகக் கற்றுக்கொண்டேன். இனாமாக உங்களுக்கும் தருகிறேன்.

(ஊழல் தொடரும்...)



மிஹிந்தலை A.பாரிஸ்

வே. அர்ச்சுணன்

# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 10

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொங்குதமிழ் நிகழ்விற்கான முழுமையான ஏற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பொங்குதமிழ் நிகழ்விற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் பொங்குதமிழ் நிகழ்விற்கு ஆதரவு அலைகள் பெருகிக்கொண்டு இருந்தன.

இந்தப் பொங்குதமிழ் நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து உணர்ச்சிபொங்கும் விதத்தில் பொங்குதமிழ் நிகழ்விற்கான அறிக்கைகள் மற்றும் பொங்குதமிழ் பிரகடனங்கள் என்பன வெளியிடப் பட்டுக்கொண்டு இருந்தன. இவ்வாறு வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த அறிக்கைகள் ஒவ்வொன்றும் சூடேற்று பவையாகவும் உணர்வூட்டுபவை யாகவும் அமைந்திருந்தன.

வீரவசனங்கள் வீராப்பு வார்த்தைகள் என்பனவற்றை முன்னிறுத்தி 17.01.2001அன்று இந்தப் பொங்குதமிழ் நிகழ்வின் முதலாவது நாடகம் அரங்கேறியது. இதில் தமிழ் மக்களின் அபிலாசைகளாவன: சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் மஞ்சள், சிவப்பு நிறத்திலான பெரியளவிலான பொங்குதமிழ் தொடர்பிலான பதாகையும் பின்னர் நிரந்தரமாக நாட்டப்பட்டது.

அதாவது மாணவர்கள் பொங்கு தமிழ் நிகழ்வை முழுமையான அரசியலாக மாற்றி இதனை முன்னெடுக்க முனைந்தபோது படைத்தரப்பினர் இதனைத் தடுக்கமுற்பட்டதுடன் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது விவேகமானது அல்ல எனவும் மாணவர்கள் பொங்குதமிழ் போன்ற நிகழ்வுகளிற்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது கல்வி நடவடிக்கைகளைப் பாழாக்கினால் தங்களது தலையில் தாங்களே மண்அள்ளிப் போடுவதற்கு ஒப்பீடாக மாறிவடும்.

எனவே மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளில் கூடுதலான கவனத்தைச் செலுத்தி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதே பொருத்தமானது என படைத் தரப்பால் அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து சீறியெழுந்த பல்கலைக்கழக மாணவர் சமூகம் படையினருக்கு எதிராகக் காட்டமான அறிக்கைகளை வெளியிட்டதுடன் மட்டும் நிற்காமல் படையினருக்கு எதிரான முழுமையான தீவிர பிரசாரத்திலும் ஈடுபட்டது. பொங்குதமிழ் நிகழ்வு ஆரம்பத்தில் மாணவர்களால் மட்டுமே முன்னெடுக்கப்படுவதாகக் காட்டிக்கொள்ளப்பட்டதுடன் மட்டும் நிற்காமல் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வைப் புலிகளின் எந்தவொரு சாயமும் இன்றி நடத்துவது என்றே ஆரம்பத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் பின்னைய நாட்களில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வுகளில் புலிகள் இயக்கத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படங்களைத் தாங்கியவாறும் புலிகளின் புலிக்கொடியைக் காட்டியவாறும் புலிகளின் தேசியப் பூவாகிய கார்த்திகைப் பூவை இலச்சினையாகப் பொறித்தவாறும் பொங்குதமிழ் நிகழ்வு கொண்டாடப் பட்டதுடன் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் புலிகளின் தளபதிகளும் பின்னைய நாட்களில் பொங்குதமிழ் நிகழ்வில் வெளிப்படையாகவே கலந்து கொண்டனர். இவ்வாறு புலிகள் வெளிப்படையாக பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டமையானது பொங்குதமிழ் நிகழ்விற்கும் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று ஆரம்பத்தில் அறிக்கை வெளியிட்ட கஜேந்திரன் மற்றும் திவியன் போன்றோர் வாயடைத்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதாவது அரசாங்க பிரசார சாதனங்களில் பொங்குதமிழ் நிகழ்வானது முற்றுமுழுதாகப் புலிகளின் பின்ணணியிலேயே கொண்டாடப்படுவதாகவும் இந்த நிகழ்விற்கும் புலிகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருப்பதாக அரசாங்கத் தரப்பு வாதிட்டு வந்ததுடன் கஜேந்திரன், திவியன் போன்றோர்கள்மீது சட்டநடவடிக்கையிலும் ஈடுபட படைத்தரப்பு தயாரானபோது, இல்லை. முற்றுமுழுதாக மாணவர் களாலேயே இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு கொண்டாடப்படுவதாகவும் புலிகளுக்கும் இந்த நிகழ்விற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதுபோன்று கஜேந்திரன் குழுவினர் அறிக்கை வெளியிட்டபோதிலும் உண்மை நில வரத்தை மக்கள் அறிந்துகொண்டார்கள். அத்துடன் பின்னைய நாட்களில் பொங்குதமிழ் நிகழ்வுகளில் புலிகளின் முழுமையான ஈடுபாடு கஜேந்திரன் போன்றவர்களின் ஏமாற்று வித்தையை மக்களுக்கு தெளிவுபடுத்தும் விதத்தில் இருந்தது.

இதேவேளை பொங்குதமிழ் நிகழ்வில் மகேஸ்வரனை கணக்கில் எடுக்காத கஜேந்திரன் குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் முதன்முதலில் மாவை சேனாதிராஜா வையும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜையும் அழைத்து சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களை சினமூட்ட செய்தனர். அதாவது பின்னைய நாட்களில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளில் சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் கலந்துகொள்வதற்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் இடம்கொடுத்த போதிலும் இவர்களை பெரியளவில் மாணவர்கள் கணக்கில் எடுக்கவில்லை.

யாழ்ப்பாண பொங்குதமிழ் நிகழ்வைத் தொடர்ந்து வவுனியாவில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்விலும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அசடு வழிந்தபோதிலும் இங்கும் இவர்களைக் கணக்கில் எடுக்காமலே மாணவர்கள் பொங்குதமிழ் நிகழ்வை முன்னெடுத்தனர்.

வில்லங்கத்திற்கு தங்களைக் கூட்டத்தில் பேசவிடுமாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கெஞ்சிமன்றாடியபோது ஒரு சிலருக்கு அதில் பேசுவதற்குரிய வாய்ப்பை இவர்கள் வழங்கினர்.

அதுவும் ஒவ்வொரு பாராளு மன்ற உறுப்பினருக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு மூன்று நிமிடத்திற் குள் பேசவேண்டும். கூடுதலாகப் பேசினால் கடும்சிக்கல்களை சந்திக்கவேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்தே இவர்களைப் பொங்குதமிழ் மேடைகளில் புலிகளின் பின்னணியில் நின்று செயற்பட்ட மாணவர்கள் பேசுவதற்கு அனுமதித்தனர்.

அத்துடன் முதலாவது பொங்கு தமிழ் நிகழ்வு யாழ். பல்கலைக்கழ கத்தில் இடம்பெற்றபோது இதனை ஒழுங்குபடுத்தி திறம்படச் செய்ததுடன் மட்டும் நிற்காமல் இந்தப் பொங்குதமிழ் நிகழ்வை ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தமைக்காக புலிகளின் இயக்கத்தலைவர் வே.பிரபாகரனின் கையொப்பத்துடன் பல்கலைக், கழக மாணவர் என்ற போர்வை யில் முழுமையாகப் பல்கலைக் கழகத்திற்குள் நின்று செயற்பட்ட சுதன் என்ற புலிகள் இயக்க உறுப்பினரான பல்கலைக்கழக மாணவரிற்கு வன்னியிலிருந்து புலிகளின் அரசியல்துறை போராளியாக நின்று செயற்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் கொல்லப் பட்ட இளைய நம்பி என்ற போராளியால் இப்பாராட்டுக்கடிதம் வன்னியில் இருந்து எடுத்து வரப்பட்டு அன்றைய நாட்களில் சுதனிடம் வழங்கப்பட்டது.

அதாவது இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வானது புலிகளுக்குச் சாதகமான ஒரு செயற்பாடாக தோன்றியதுடன் மட்டும் நிற் காமல் சர்வதேச மட்டத்திலும் புலிகளின் பிரசாரத்திற்கு இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு வலுச் சேர்த்து வந்தது. யாழில் உள்ள தமிழ்ப்பத்திரிகைகளும் I.B.C, தமிழ்நெற், B.B.C. உள்ளிட்ட ஊடகங்கள் இந்த நிகழ்வை ஊதிப்பெருப்பித்து காட்டியதுடன் சில ஊடகவியலாளர்களும் இதன் பின்னணியில் இருந்து செயற் பட்டு வந்ததுடன் உண்மைக்குப் புறம்பாக பல் பொய்ப்பிரசாரங் களையும் இந்த ஊடகங்கள் இவர்களுடன் இணைந்து வெளியிட்டுவந்தனர்.

இதன் தாக்கங்கள் எவ்வாறு இருந்தன, இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார்?, இவை முள்ளிவாய்க்கால்வரை எமது மக்களை எவ்வாறு இழுத்துச் சென்றன என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



■ தொகுப்பு: வேணு கிருஸ்ணா

### பிரெஞ்சுப் பணயக் கைதியின் தலை துண்டிப்பு: ஐ.எஸ். மீண்டும் அட்டூழியம்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிணைக் கைதியின் தலையை ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் துண்டித்தனர். பிரான்ஸ் நாட்டு அதிபர் ஹாலண்டே இதனை உறுதிசெய்துள்ளார். அல்ஜீரியாவில், ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களால் ஹெர்வே கோர்டெல் (55) பணயக் கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவரது தலையை துண்டித்து ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் படுகொலை செய்ததாக தகவல் வெளியானது. தகவலை உறுதிசெய்த பிரான்ஸ் நாட்டு அதிபர் ஹாலண்டே: இச்செயல் மிகவும் கொடூரமானது, கோழைத்தனமானது எனக் கண்டித்துள்ளார்.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றிருந்த பிரான்ஸ் அதிபர், ஐ.எஸ். செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஹெர்வே கோர்டெல், சுற்றுலா வழிகாட்டியான அவரை அல்ஜீரியாவில் ஜுண்ட்- அல்- கிலாபா குழுவினர் அவரை சிறைப்பிடித்தனர்.

### தாக்குதல் தொடரும்:

ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களின் இந்த தாக்குதல் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடவேண்டும் என்ற எங்கள் கொள்கையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. ஐ.எஸ்.-க்கு எதிரான தாக்குதலை நாங்கள் தொடர்ந்து நடத்துவோம். பிரெஞ்சுப் படைகளின் வான்வழி தாக்குதலும் தொடரும் என ஹாலண்டே கூறியுள்ளார்.

மேலும், இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, ஈராக்கில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவ தாக்குதல் மேற்கொள்வது குறித்தும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களை பத்திரமாக மீட்பது குறித்தும் ஆலோசிக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

### ஐ.எஸ் மிரட்டல்:

பிரான்ஸ் நாட்டு பணயக் கைதியின் தலையை துண்டிக்கும் வீடியோ பதிவில், ஐ.எஸ். ஜிகாதிப் படைகளுக்கு எதிராக அணிசேரும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும் என மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஐ.எஸ். படைகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதலை பிரான்ஸ் தொடங்கியது என்பது கவனிக்கத்தது.

### 3 பேர் தலை துண்டிப்பு:

இதற்கு முன்னதாக அமெரிக்க பத்திரிகையாளர்கள் ஜேம்ஸ் போலே, ஸ்டீவன் ஸாட்லா.ஃப் மற்றும் பிரிட்டனின் டேவிட் ஹேன்ஸ் ஆகியோரது தலையை ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் துண்டித்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

### ஒபாமாவின் தவறான கொள்கையினால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் தலைதூக்கியுள்ளது - ஹிலாரி கிளிண்டன்

ஒபாமாவின் தவறான கொள்கையினால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் தலைதூக்கி உள்ளது என்று அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத் துறை மந்திரி ஹிலாரி கிளிண்டன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக்கில் ஷியா முஸ்லிம் அரசுக்கு எதிராக சன்னி முஸ்லிம் பிரிவு ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் போர்க்கொடி உயர்த்தி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராளிகள் தாக்குதலை அடுத்து பதற்றம் அதிகரித்தது. அமெரிக்காவின் உதவியை ஈராக்கும், குர்தீசும் நாடின. இதையடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் நிலைகளை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்தும்படி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டார்.

ஒபாமாவின் அறிவிப்பை தொடர்ந்து, ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா குண்டுவீச்சை தொடங்கியது. இந்நிலையில் ஒபாமாவின் தவறான கொள்கையினால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் தலைதூக்கி உள்ளது என்று அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத் துறை மந்திரி ஹிலாரி கிளிண்டன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்து ஹிலாரி கிளிண்டன், சிரியா உள்நாட்டு போரை கண்டும் காணாமல் இருந்ததன் விளைவாகவே ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பு உருவானதாகவும், அதன் பாதிப்பே ஈராக்கில் எதிரொலித்துள்ளது. என்று குற்றஞ்சாட்டியுள்ளார். சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒடுக்கமுறையாக கொள்கைகள் அவசியம். மத்திய கிழக்கு நாடுகளில், தலைதூக்கும் தீவிரவாதம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். என்றும் ஹிலாரி கிளிண்டன் குற்றஞ்சாட்டியுள்ளார். ஹிலாரி கிளின்டன் அமெரிக்காவின் அடுத்த அதிபர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடலாம் என கூறப்படுகிறது.

### சிரியாவில் ஐ.எஸ். மீது அமெரிக்கா தாக்குதல்

நட்பு நாடுகளுடன் இணைந்து சிரியாவிலுள்ள இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) இலக்குகள்மீது கடந்த பல நாட்களாக வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். நிலைகள்மீது - குறிப்பாக அதன் தலைமையகம், நிதியகம், பயிற்சி நிலையங்கள், விநியோக மையங்கள் மற்றும் பெற்றோலிய எண்ணெய் வயல்கள், தொழிற்சாலைகள் மீது அமெரிக்கா தொடங்கியுள்ள தாக்குதல் குறித்து தலைநகர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் லெப்டினன்ட் ஜெனரல் வில்லியம் மேவில் விளக்கம் அளித்தார். அவர் கூறியது:

"பஹ்ரைன், ஜோர்டான், சவூதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் படைகளுடன் இணைந்து அமெரிக்க இராணுவம் சிரியாவிலுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகள்மீது தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

போர் விமானங்கள், குண்டுவீச்சு விமானங்கள், 'டாமஹாக்' ரக ஏவுகணைகள் (Tomahawk Land Attack Missiles and a stealth F-22 Raptor) ஆகியவை இந்தத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அது குறித்த முழுவிவரங்களை உடனடியாகத் தர இயலாது.

சிரியாவில் தாக்குதல் தொடுப்பதற்கான முடிவு, அதிபர் ஒபாமா அளித்த அதிகாரத்தின் கீழ், கூட்டுப் படைகளின் தளபதியால் எடுக்கப்பட்டது" என்று தெரிவித்தார்.

செங்கடலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அமெரிக்க போர்க் கப்பல்களிலிருந்து தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாக அவர் தெரிவித்தார், தரை இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் 47 'டாமஹாக்' ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்., சிரியாவில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியதுடன், அண்டை நாடான இராக்கிலும் கடந்த ஜூன் மாதம் ஏராளமான இடங்களைக் கைப்பற்றி உலக நாடுகளைத் திகைக்க வைத்தது.

ஈராக்கின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய நகரங்களான மொசூலையும், திக்ரித்தையும் அந்த அமைப்பு கைப்பற்றியதுடன், தலைநகர் பக்தாத்துக்கு 50 கி.மீ. வரை முன்னேறிச் சென்றது.

அதனைத் தொடர்ந்து, பயங்கரவாதிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்து வதற்காக, ஈராக்கிலுள்ள ஐ.எஸ். இலக்குகள்மீது அமெரிக்கா கடந்த மாதம் 8ஆம் திகதி வான்வழித் தாக்குலைத் தொடங்கியது.

அதற்குப் பதிலடியாக, தங்களிடம் பிணைக் கைதிகளாக இருந்த அமெரிக்க செய்தியாளர்கள் இருவரையும், பிரிட்டனைச் சேர்ந்த ஒருவரையும் கொடூரமான முறையில் தலையைத் துண்டித்து படுகொலை செய்த ஐ.எஸ். பயங்கரவாதிகள், தங்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் படுகொலைகள் தொடரும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதனிடையே, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருப்பதாகவும், அவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பி வந்து பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவார்கள் எனவும் அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

இந்நிலையில், ஐ.எஸ். பயங்கரவாதத்தால் எழுந்துள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான செயல்திட்டத்தை அதிபர் ஒபாமா கடந்த மாதம் 10ஆம் திகதி வெளியிட்டார். அப்போது, ஐ.எஸ். பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் ஒடுக்கப்படுவார்கள் எனவும், தேவைப்பட்டால் சிரியாவிலும் அவர்களுக்கு எதிரான தாக்குதல் நிகழ்த்தப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

### எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது: சிரியா

சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நிகழ்த்தப்போவது குறித்து அமெரிக்கா தங்களிடம் ஏற்கெனவே தகவல் தெரிவித்ததாக சிரியா வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இதுகுறித்து அமைச்சக அதிகாரிகள் கூறுகையில், "ராக்கா மாகாணத்திலுள்ள ஐ.எஸ். பயங்கரவாத நிலைகள்மீது தாக்குதல் நிகழ்த்தப்படும் என ஐ.நா. விலுள்ள சிரியா பிரதிநிதிகளிடம் அமெரிக்க அதிகாரிகள் முன்கூட்டியே தகவல் அளித்துள்ளனர்" என்று தெரிவித்தனர்.

ஐ.எஸ். ஆதிக்கம் நிறைந்த பகுதியான ராக்கா, அந்த அமைப்பின் முக்கிய இராணுவ மையமாகத் திகழ்ந்துவருகிறது.

### ஈராக்கிற்கு ஆயுத உதவி: ஐ.எஸ்.ஐ.எஸ்ஸிற்கு எதிராக ஜேர்மனி அதிரடி

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட உதவும் வகையில் ஈராக் மற்றும் குர்திஷ் படையினருக்கு ஜேர்மன் தனது ஆயுத கப்பலொன்றை முதன்முறையாக ஈராக்கின் வடபகுதிக்கு கடந்த மாதம், 25ஆம் திகதி அனுப்பியுள்ளது. கடந்த சில மாதங்களாக ஈராக் மற்றும் சிரியாவில் பல முக்கிய நகரங்களில் வசிக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை வெளியேற்றி அந்நகரங்களை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றி தம்வசம் வைத்துள்ளனர்.

அத்துடன் தமக்கு எதிராக செயற்படும் நாடுகளையும் குறிவைத்து தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் அவர்களால் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளவர்களையும் கொன்று வருவதோடு ஏனையவர்களையும் கொல்வோம் என எச்சரித்துவருகின்றனர். இதனைத்தொடர்ந்து ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்டுள்ள இஸ்லாமிய தேசத்தை குறிவைத்து சர்வதேச நாடுகள் சில அமெரிக்காவுடன் இணைந்து வான்வழித் தாக்குதல்களை முன்னெடுத்துவருகின்றன.

இந்நிலையில் ஜேர்மனி அரசாங்கம் தனது இராணுவ கப்பலில், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள்- துப்பாக்கிகள்- கனரக இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மக்டோலென் டக்ளஸ் KDC-10 (McDonnell Douglas KDC-10) ஆகிய யுத்த தளபாடங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களை இன்று அனுப்பி வைத்துள்ளது. அத்துடன் மேலும் 600 தொன் இராணுவ உபகரணங்களை ஈராக்கிற்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக ஜேர்மன் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்கா தனது இராணுவப்படையை அனுப்பி குர்திஷ் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இஸ்லாத்தின் பெயரில் ஐ.எஸ் கூலிப்படை!

துருக்கியில் அன்றைய ஒட்டோமான் பேரரசின் இஸ்லாமிய மதரீதியான கிலாபத் அரசாட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு, இப்போது மீண்டும் அத்தகைய கிலாபத் அரசாட்சி நிறுவப்பட்டுள்ளதாக 'ஐ.எஸ்.' எனும் சன்னி மார்க்க இஸ்லாமிய பயங்கரவாத இயக்கத்தினர் அண்மையில் அறிவித்துள்ளனர். இராக் மற்றும் சிரியாவில் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை இணைத்துத் தனிநாடாக அறிவித்து, இதனை இஸ்லாமிய அரசு (கிலா.ஃ.பத்) என்று பிரகடனப்படுத்தி உள்ளனர்.


ஐ.எஸ். இயக்கத்தின் தலைவரான அபுபக்கர் அல் பக்தாதி இப்புதிய அரசின் தலைவராக தன்னையே நியமித்துக் கொண்டு, இப்புதிய கிலாபத் அரசானது வடசிரியாவின் அலெப்போ நகரிலிருந்து இராக்கின் தியாலா மாகாணம்வரை பரவியிருக்கும் என்றும், உலகெங்குமுள்ள சன்னி மார்க்க முஸ்லிம்கள் இந்தப் புனித ஆட்சிக்கு ஆதரவளிக்குமாறும், இப்புனித நாட்டில் வந்து குடியேறுமாறும் அறைகூவல் விடுத்துள்ளார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)





# தியாகப் பெருநாளான ஈதுல் அல்ஹாவை கொண்டாடுவோம்



"அல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்....லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்...அல்லாஹு அக்பர்... வலில்லாஹில் ஹம்து..."

துல்ஹஜ் பத்து பிறந்துவிட்டது. ஹஜ்ஜுப் பெருநாள் மலர்ந்துவிட்டது. தக்பீர் முழங்குகிறது. மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இஸ்லாமிய சுலோகம்தான் இனிய தக்பீராகும்.

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... வலில்லாஹில் ஹம்து..."

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதிபடைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதிபடைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாகவேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறை சாற்றும் சர்வதேச அவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி(ஸல்) அவர்களின் வருகைக்குமுன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டுவந்தனர். இணைவைப்போடு மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்துவந்தது. இது ஒரு வழிபாடு என்பதைவிடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி(ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண்முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், க..பாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் துல்ஹஜ் மாதம் 11,12,13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு, பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யா ஆகும்.

ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்கவேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம். உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது.

அப்படி இல்லையென்றால் வேறொருவருக்குப் பொறுப்புக் கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்திற்கு சமூகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்குமுன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்படவேண்டும். நாம் அறுக்கின்ற போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறவேண்டும்.

"உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கின்ற நிலையில் துல்ஹஜ் மாதம் பிறந்ததும் நகம், முடி எதையும் வெட்டவேண்டாம்" (முஸ்லிம்). ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில் நகம் அல்லது முடி ஏதாவது ஒன்றை வெட்டினால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும் போது பிறமதத்தினரின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல. இன்று எமது நாட்டில் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான எதிர்ப்பு பெரியளவில் இல்லாது போனாலும் ஆங்காங்கே சிறுகச் சிறுக அதிருப்தியும் முகச் சுளிப்பும் அண்மைக்காலமாக உணரப்பட்டு வருகின்றன.

மிருகங்களை அறுப்பதற்கும் இறைச்சியைப் .பெற்றுகொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாதவகையில் கழிவுப்பொருட்களை அழித்தொழிப்பதற்கும் போதிய இடவசதி இருக்கும்வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. பல்லின மக்களும் கலந்து வாழும், இடப்பற்றாக்குறை நெருக்கடிமிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்பதும், அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவதும் எப்போதுமே சர்ச்சைக்குரியனவாகின்றன.

அல்லாஹ் படைத்த எந்த மிருகத்தையும் (ஆகுமாக்கப்பட்டதை) அறுத்து உண்பதில் எந்தத் தவறும் கிடையாது. உழ்ஹிய்யா கொடுக்கும் விடயத்தில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் பிறமத உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மிருகங்களை அறுப்பதற்காக கொண்டு செல்லும்போது அதற்கு இம்சை செய்வதோ, அறுத்ததன் பின் இரத்தம்வடியும் நிலையில் பாதைகளில் இறைச்சியைத் தூக்கிச் செல்வதோ கூடாது. அறுத்த பிராணியின் கழிவுகளான தோல், எலும்புகள், கொம்பு, சாணம் போன்றவற்றை துர்நாற்றம் வீசும் நிலையில் பாதையோரங்களில் வீசுவதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். அவைகளை குழிதோண்டிப் புதைத்து விடவேண்டும். ஆனால், நம் சகோதரர்கள் சிலர் அவ்வாறு செய்யத் தவறிவிடுகின்றனர். இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. இது போன்ற தவறுகளை விடுவதால்தான் பிற சமூகத்தினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாக வேண்டியநிலை ஏற்படுகின்றது. இதை உழ்ஹிய்யா கொடுக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படுவது கட்டாயக் கடமையாகும்.

எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளதோடு அதன் பிரகாரம் இறைச்சியின் பொருட்டு கால்நடைகளைக் கொல்வதற்குப் பாதுகாப்பான கொள்கலன்களிலேயே அறுக்கப்படவேண்டும் என்ற நியதியும் உண்டு.

உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக அவ்வப் பிரதேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் பேசி, அதற்காக செலுத்தவேண்டிய சிறு கட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில், சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இக்கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும்.


இறைச்சிக்காக ஆடு, மாடுகளை கொல்வது எமது நாட்டு சட்டத்தால் தடுக்கப்பட்ட விடயமல்ல என்பதை பிற மதத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். உணவுக்காக கால்நடைகளை கொல்வது மிருகவதை என்று சில கொள்கைப் பிரிவினர்கள் வாதாடுகின்றனர்.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னும் ஒருவருக்கு இடைஞ்சலாக இருக்கமுடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இதை அல்லாஹ்தான் அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடனும் சகிப்புத் தன்மையுடனும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மனச் சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்படவேண்டும் 'என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக! ஆமீன்!!

**அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால்,**
**யாழ்ப்பாணம்.**









ஒருவர் அறிவாற்றலுடன் அடக்கமுடனும் நடந்துகொள்வானாயின் அதுவே அவனுக்குப் பெருமையளிக்கும்.

பாப்பா முரசு சிறுகதை



# தற்பெருமையிலிருந்து தப்பிக்க...

ஒருநாள், ஒரு ஞானி சில விஷயங்களைப் பற்றி மக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிராக, தொலைவில், வானத்தில் ஒரு பெரிய பழுப்பு நிறமான புகைவடிவம் தோன்ற ஆரம்பித்தது. இடி இடிப்பதுபோல மிகவும் கடுமையான சத்தம் அந்தத் திசையில் உருவானது.

சில நொடிகளில் அந்தப் புகை வடிவம் பெரிதாகி ஓர் உருவம் பெற்று அவர்களை நோக்கிவர ஆரம்பித்தது.

அங்கே இருந்தவர்களில் பலர், அதனைக் கண்டு அச்சப்பட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு மனிதன், "அய்யோ... அது பறக்கும் முதலை!" என்று கத்திக்கொண்டே ஓட ஆரம்பித்தான். அந்த மனிதன் ஓட ஆரம்பித்ததும் அங்கே அமர்ந்து இருந்த எல்லோரும் அவன்பின்னே வேகமாக ஓடினார்கள். அவர்களோடு சேர்ந்து ஞானியும் ஓடினார்.

சில நாள்கள் கழித்து, ஞானியின் சீடர்கள் அவரிடம், "அன்று தோன்றிய அந்த உருவம் என்ன?" என்று கேட்டார்கள்.

ஞானி அவர்களிடம், "அது ஒன்றும் இல்லை. பாலைவனத்தில் சிலசமயம் காற்றுப்புயல் உருவாகும். அந்தப் புயலின்போது இப்படியாக மணற்பரப்புகள் மேல் எழும்பிவரும். அவை சுழற்சியின் காரணமாக ஒரு வடிவத்தைத் தரும். அந்த வடிவத்தைக் கண்ட அந்த நபருக்கு அது முதலையைப் போலத் தெரிந்துள்ளது. அதுதான் அவர் பயந்து ஓட ஆரம்பித்து விட்டார்..." என்று பதில் சொன்னார்.

சீடர்களுக்கு உண்மை புரிந்தது. ஆனால், அவர்களிடம் மற்றொரு கேள்வி உதயமானது. "இந்த உண்மை தெரிந்தும், எங்களுடன் சேர்ந்து நீங்களும் ஏன் ஓடினீர்கள்?" என்று கேட்டனர்.

அதற்கு ஞானி, "அது ஒன்றுமில்லை. நீங்கள் ஓடியபோது நான் ஒருவன் மட்டும் ஓடாதவனாக இருந்து என் மனம் தற்பெருமை கொள்ளக்கூடாது. தற்பெருமை எண்ணத்தில் இருந்து தப்பிக்கவே ஓடினேன்..." என்றார் அமைதியாக.

## நெருக்கடி!



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்ஸன் தனது வாழ்க்கையில் சந்தித்த ஆறு நெருக்கடிகளைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி, வெளியிட்டார். அந்தப் புத்தகத்தை ஒருவர் கடையில் வாங்குவதைக் கண்டார். அவரிடம், "நான்தான் இந்தப் புத்தகத்தை எழுதியவன். தாங்கள் விரும்பினால் தங்கள் பெயரை இந்தப் புத்தகத்தில் எழுதித் தருகிறேன்." என்றார்.

அதற்கு அந்த மனிதர் சிரித்துக்கொண்டே, "இது உங்களுக்கு ஏழாவது நெருக்கடியாக இருக்கும். என் பெயர் "அன்ட்ரியோவ் நிக்காலோவ் கபிரியேவ். எழுதுங்கள் பார்க்கலாம்." என்றார்.

நிக்ஸன் மறுபேச்சு பேசாமல் அங்கிருந்து நகன்றார்.

## உங்கள் சிந்தனைக்கு...

தேர்தலில் தோல்வியுற்ற காமராஜர் நிருபர்களிடம், "இதுல கவலைப்பட என்ன இருக்குன்னேன். தேர்தலில் நான் தோத்துட்டேன்... ஜனநாயகம் ஜெயிச்சுடுச்சு" என்று சொன்னார். உடனே நிருபர்கள், "நீங்கள் தோற்றதற்கும் ஜனநாயகம் வென்றதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டனர்.

அதற்கு காமராஜர், "சம்பந்தம் இருக்குன்னேன். ஒரு மாநிலத்துக்கு முதலமைச்சராய் இருந்து, அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராய் உயர்ந்திருந்த என்னை ஒரு சாதாரண மாணவன் தோற்கடிக்க முடியும்னா, அதுதானே ஜனநாயகத்திற்கு வெற்றி!

இந்த ஜனநாயக உரிமை எல்லோருக்கும் கிடைக்கணும்னு தானே நான் பத்து வருசம் ஜெயில்லே இருந்தேன்னேன்!" என்றார்.



## வெற்றி!



## டொல்பின்

டொல்பின்களின் அறிவாற்றலும், பழக்கவழக்கங்களும் மனிதனையொத்ததாக இருப்பது மட்டுமல்ல, மனிதனுக்குரிய வியாதிகளும், டொல்பினுக்கும் வருகின்றன.


காய்ச்சல், அல்சர், மாரடைப்பு, இரத்தச்சோகை, மெண்டல் டிஸார்டர் போன்றவை டொல்பின்களிடமும் காணப்படுகின்றன. ஆனால் தடிமல், நீரிழிவு மட்டும் டொல்பின்களுக்கு வருவதில்லை.

மனிதனுக்கு இருப்பதுபோலவே டொல்பின் இதயமும் வலது ஆரிக்கிள், இடது ஆரிக்கிள், வலது வென்ட்ரிக்கிள், இடது வென்ட்ரிக்கிள் என நான்கு பகுதியாகப் பிரிந்து, செயற்பட்டு காற்றைச் சுத்திகரித்து இரத்தத்தில் கலக்க வைக்கிறது. ஆனால், பசுவைப்போல டொல்பின் வயிற்றில் 4 இரைப்பைகள் உள்ளன. டொல்பின் குடும்பத்திலேயே மிகச் சிறியது போர்ப்பயஸ். முதன்முதலாக 1960இல் பிரிட்டனில்தான் டொல்பின் ஷோ நடத்தப்பட்டது.

திருக்குறள் புதிர்

## கண்டுபிடி! கண்டுபிடி!!

இங்கே 29 படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் பெயர்களை வைத்து அதன் எழுத்துகளை கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளின் வரிசைப்படி சரியான எழுத்துகளை கட்டத்திற்குள் எழுதுங்கள். மொத்த கட்டத்திலுள்ள எழுத்துகளையும் ஒன்று சேர்த்து படித்துப் பாருங்கள். ஒரு திருக்குறள் கிடைக்கும்.




**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 13.10.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1064 த.பெ.இல:167,**
**தினமுரசு வாரமலர் யாழ்ப்பாணம்.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1062


அ. இமயவல்லி,
புளியங்குளம், வவுனியா.

பரிசுக்குரியவர்: 1062

பாராட்டுக்குரியவர்கள்

01. சாமில் முனவ்வர், மிரிஸ்வத்த, பலாங்கொடை.
02. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
03. எஸ்.சாய்சரன், தும்பளை, பருத்தித்துறை.
04. தா.ஓவியா, மாசார், பளை.
05. ஈ.அந்திகாரா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
07. அ.மாதங்கி, கோவில் வீதி, கொடிகாமம்.
08. சு.சயந்தன், பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



## உண்மைத் தொடர்

அதிர் இடி 58

மடியில் இருந்து இறங்க முயன்றபடி, "என்னை விட்டு விடுங்கள், நான் எந்தத் தவறும் செய்யவில்லை" என்று அழுதபடியே மன்றாடினாள். உன்னை விடத்தான் போகிறேன். அதற்கு முன்னர் உன் சேவை எனக்குத் தேவை என்று கண்ணடித்தான். கை நீண்டு அவள் கழுத்தை அழுத்தமாக வருடி, கீழிறங்க, சட்டென்று ஏற்பட்ட சீற்றத்தில் இடி அமீனின் கையைக் கடித்துவிட்டாள்.

இனி...



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

கம்பலா மருத்துவ மனையில் பணிபுரிந்த மருத்துவத் தாதியை பிடித்து வந்து அமீன் முன்பாக நிறுத்தினார்கள்.

அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் இறந்து போனார்.

சரியாகப் பராமரிக்காமல் விட்டதால்தான் அதிகாரி இறக்கநேர்ந்தது என்று டாக்டர் ஒருவர் புகார் செய்துவிட்டார்.

அந்த டாக்டருக்கும் மருத்துவத் தாதிக்கும் இடையே பிரச்சினை இருந்தது.

தாதி தன் ஆசைக்கு இணங்கவில்லை என்பது டாக்டரின் தலையாய பிரச்சினை.

"உன்னை எங்கே கொண்டுபோய் நிறுத்துகிறேன் பார்" என்று டாக்டர் சவால்விட்டிருந்தார்.

"நீ என்ன புரட்சிக்காரியா? சதிகாரியா?" என்று கேட்டான் அமீன்.

தாதிக்கு உடம்பெல்லாம் வெடவெட என்று நடுங்கியது. வார்த்தைகள் தொண்டைக் குழியில் இருந்து வெளிவர மறுத்தன.

உடலில் தேவையான உயர்வு தாழ்வுகளுடன் தன் முன்நின்ற தாதியின் அழகில் அமீன் மயங்கிப்போனான்.

"இங்கே வா!" என்று அழைத்தான். அந்தக் குரலில் இருந்த முரட்டுத்தனம் அவளைப் பயமுறுத்தியது.

தயங்கித் தயங்கி அருகில் போனவளை இழுத்து தன்மடியில் அமரவைத்தான்.

திமிற முயன்றாள். அமீனின் பிடி இரும்பாக இருந்தது. "உனக்கு நோயாளர்களைக் கவனிக்கத் தெரியவில்லை என்று டாக்டர் கூறுகிறார் முட்டாள் டாக்டர். உன்னைப் பார்த்தாலே எந்தப் பைத்தியக்காரனும் குணமாகிவிடுவானே? சாகக் கிடப்பவனும் பிழைத்து எழுந்துவிடுவானே? டாக்டர் சொன்னது பொய்தானே?" என்று கேட்டான் அமீன்.

அவள் பதில் சொல்லவில்லை. அழுதாள். விம்மி அழுதாள்.

பயமும், ஆற்றாமையும் பருந்திடம் அகப்பட்ட கோழிக்குஞ்சு போன்ற தன் நிலையையும் எண்ணி அழுதாள்.

அவள் அழுவதையே வக்கிரமான சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அமீன் திடீரென்று கேட்டான்; அந்த டாக்டருக்கு நீ இணங்கிப் போகவில்லை. அதுதான் உன்னை என்னிடம் மாட்டி விட்டிருக்கிறான். என்ன, நான் சொல்வது சரிதானே?"

அழுகையினூடே ஆம், என்று தலைமை அசைத்தாள் தாதி.

"அந்த டாக்டர் சொன்ன பொய்க்காக தண்டனை கொடுக்கப் போகிறேன். உன் முன்னாலேயே அவனை 'வெட்டிப் போடுகிறேன் என்ன சந்தோசம்தானே" என்று சிரித்தினான்.

மடியில் இருந்து இறங்க முயன்றபடி, "என்னை விட்டு விடுங்கள், நான் எந்தத் தவறும் செய்யவில்லை" என்று அழுதபடியே மன்றாடினாள்.

உன்னை விடத்தான் போகிறேன். அதற்கு முன்னர் உன் சேவை எனக்குத் தேவை என்று கண்ணடித்தான், கை நீண்டு அவள் கழுத்தை அழுத்தமாக வருடி, கீழிறங்க, சட்டென்று ஏற்பட்ட சீற்றத்தில் இடி அமீனின் கையைக் கடித்து விட்டாள்.

அமீன் கையை உதறிய போது மடியில் இருந்து குதித்து கதவை நோக்கித் தாவி ஓட முயல தன் கால்களை அவள் கால்களுக்கு குறுக்கே நீட்டினான் அமீன்.

நிலை தடுமாறி முகம் குப்புற விழுந்தவளை தன் நீளமான கால்களால் எட்டி உதைத்தான்.

இருக்கையைவிட்டு எழுந்து அவள் தலைமுடியை பற்றிப் பிடித்து தூக்கி, கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

சட்டையை பற்றி இழுத்து கழித்து வீசினான். அவளால் இப்போது எதிர்க்கவும் திராணியில்லை. அழவும் முடியவில்லை.

அப்படியே தூக்கிச் சென்று கட்டிலில் வீசிவிட்டு, தண்ணீர எடுத்துவந்து முகத்தில் ஊற்றினான்.

குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதால் அவள் முனகிக் கொண்டு கண்களை திறக்க எதிரே அமீனின் முகம் ராட்சத முகமாகத் தெரிய பயத்தில் மறுபடி மயங்கிப் போனாள்.


அவளது மயக்கம் தெளியும் வரை அமீன் காத்திருந்தான். அவகாசம் கொடுத்து மறுபடி தண்ணீரை அவளின் முகத்தில் கொட்டினான்.

மெல்ல மெல்ல சுயநினைவு திரும்பியதும் அவளை ஆக்கிரமித்தான். அவள்மன்றாட வேண்டும், கதறியழவேண்டும். அதனை ரசித்தபடியே அவ-ளுடன் உறவுகொள்ளவேண்டும் என்ற வக்கிரத்தோடு அமீனுக்குள் ஒரு மிருகம் காத்திருந்தது.

அந்த மிருகம் தன் இச்சை அடங்கும்வரை வேட்டையாடியது. வேட்டை முடிந்ததும் தாதியின் கழுத்து கன்னம் கழுத்துக்கீழே என் தன் பற்களால் இரத்தம் பீறிடக் கடித்துக் குதறியது.

வலி தாளாமல் அவள் கதறியபோது இரும்புக் கரங்கள் அவள் வாயையும் மூக்கையும் ஒன்றாகப் பொத்தி அழுத்தின.

அவள் திமிறித் திமிறி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிப் போனாள். நிரந்தரமாகவே, உயிர் அடங்கிப்போனது.



தன்கையைக் கடித்தவனின் கையைக் கடித்து தசையைக் குதறிச் சாப்பிட்டான். அமீன் வெறி அடங்கும்வரை அவளின் உடலில் மேலும் சில பாகங்களையும் புசித்தான்.

(தொடரும்)

---

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 593

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | | |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 591 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ந | 2 ந் | 3 த | 4 கோ | 5 ப | 6 ன் |
| 7 வ | 8 ம் | 9 கா | | 11 கு | 12 ரா |
| 13 ம | 14 ந | 15 ன் | | 17 வா | 18 பி |
| 19 ணி | 20 ஆ | | 22 செ | 23 ய் | |
| 25 மா | 26 த | 27 ம் | 28 ந் | | 30 கா |
| 31 லை | 32 ன | 33 வ | 34 தி | 35 ல் | 36 ம் |

### இடமிருந்து வலம்

01.தருக்க சாஸ்திரங்களில் ஒன்று.
07.இலங்கையில் முக்கிய நீர்த்தேக்கமும், மின் உற்பத்தி நிலையமும் இங்கே உள்ளது. (குழம்பியுள்ளது)
15.சஞ்சரிப்போர். (குழம்பியுள்ளது)
17.பத்து.
19. ஒரு கொடி வகை.
23. தித்திப்பு. முதலெழுத்து விடுபட்டுள்ளது.
25.சொல்.
33. "ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்" என்று சொன்னவர். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01.மழலை வார்த்தை.
02.ஒரு சரணாலயம்.
03.ஆராய்தல்.(குழம்பியுள்ளது)
04. உலக இன்பங்களை அனுபவிப்போர்.
05.தனியாக விடப்பட்டவள். (குழம்பியுள்ளது)
06.அண்மை; மூலஸ்தானம். (குழம்பியுள்ளது)
20.உப்பளம்.
28.ஆட்சேபம். (திரும்பியுள்ளது)
36.ஓர் எழுத்து; தொழிற்பெயர் விகுதி.

### போட்டி விதிகள்:


இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 13.10.2014 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 593
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 591 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

ச.மைத்திரேகி, சரசாலை, மட்டுவில்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. து.மைதிலி, சின்னக்கடை, மன்னார்.
02. எம்.சாமந்தி, கோவில் வீதி, கொழும்பு -15.
03. கு.மாதவன், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்
04. எம்.ஜெயதாஸ், பிரதான வீதி, நுவரெலியா.
05. எஸ்.எவ்.ஹிமாயா, ஜின்னாநகர், திருகோணமலை.
06. தா.உருத்திரகுமார், ரெட்பானா, விசுவமடு.
07. ச.டிலான், தும்பளை, பருத்தித்துறை.
08. ஆ.இந்திரகுமார், பரந்தன், கிளிநொச்சி.
09. சௌ.தனுஷன், பருத்தித்துறை, வீதி, கொடிகாமம்.






## மீண்டும் காதலில்...

நடிகை நயன்தாராவை தீவிர காதலித்து அந்த காதலுக்காகவே மனைவியை விவாகரத்து செய்த பிரபல நடிகரும் இயக்குனருமான பிரபுதேவா, காதல் தோல்விக்கு பின்னர் பொலிவூட் பக்கம் சென்றார்.

சமீபத்தில் சென்னைக்குச் சென்ற பிரபுதேவா, தனக்கு மீண்டும் ஒரு திருமணம் தேவையில்லை என்றும், தனியாக வாழ்வதே தனக்கு நிம்மதியாக இருக்கின்றது என்றும் கூறினார். இந்நிலையில் அவர் பொலிவூட்டில் உள்ள பெண் டான்ஸ் ஒருவரை காதலிப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இவர்கள் இருவரது காதல் தீவிர நிலையை அடைந்து தற்போது இருவரும் திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் வட இந்திய பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

தற்போது அக்சன் ஜாக்சன் என்ற படத்தை இயக்கி வரும் பிரபுதேவா, அதே படத்தில் டான்ஸ் மாஸ்டராக பணிபுரியும் ஒருவருடன் நெருக்கமாகி உள்ளார் என்றும் இருவரும் அடிக்கடி ஒன்றாக மும்பை தெருக்களில் சுற்றிவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பிரபுதேவா பொலிவூட்டில், ரவுடி ரத்தோர், வாண்டட் போன்ற ஹிட் படங்களை இயக்கி முன்னணி இயக்குனர்கள் வரிசையில் தற்போது இடம்பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.



## மிரண்டது ஐ?

2014ஆம் ஆண்டு தீபாவளிக்கு ஷங்கரின் 'ஐ', விஜய்யின் கத்தி, விஷாலின் பூஜை ஆகிய திரைப்படங்கள் வெளிவரும் என கூறப்பட்டிருந்தது. விஜய் நடித்த கத்தி படத்திற்கு தமிழ் அமைப்புகள் பிரச்சினை செய்துகொண்டிருந்ததால், கண்டிப்பாக கத்தியின் ரிலீஸ் தாமதமாகும் என்ற நம்பிக்கையில் 'ஐ' படக்குழுவினர் தீபாவளிக்கு தங்கள் படத்தை ரிலீஸ் செய்ய அதிரடியாக முடிவெடுத்தனர். ஒரு முக்கிய திருவிழா நேரத்தில் பிரமாண்ட படத்தை ரிலீஸ் செய்தால், அந்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மாபெரும் வசூல் கிடைக்கும் என்பதே தீபாவளி வெளியீட்டின் நோக்கம்.

ஆனால் தற்போது கத்தி படத்தின் தயாரிப்பாளர், தங்கள் படத்தை தீபாவளி தினத்தின் திரையிடுவது உறுதி என சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியுள்ளதால் தற்போது விஜய்யுடன் மோத விரும்பாமல் 'ஐ' படத்தின் ரிலீஸை ஒத்தி வைக்க ஆலோசனை செய்துகொண்டு வருகின்றனர்.

தற்போது 'ஐ' படத்தின் ஒரு பாடல் காட்சி மட்டுமே பெண்டிங் இருக்கிறது. அந்த பாடல் காட்சியின் படப்பிடிப்பும் தற்போது நடந்து வருகிறது. இதன்பின்னர் கம்பியூட்டர் கிரா-பிக்ஸ் உட்பட தொழில்நுட்ப பணிகள் இருப்பதால் தீபாவளிக்குள் படத்தை திரையிடுவதில் சிக்கல் இருக்கின்றது என்ற காரணத்தை 'ஐ' படக்குழு தெரிவித்தாலும், விஜய்யின் மாஸ் படத்துடன் மோதுவதை தவிர்க்கவே படத்தின் ரிலீஸ் ஒத்தி வைக்கப்படுவதாக கொலிவூட்டில் கூறப்படுகிறது.ஆனால் 'ஐ', கத்தி இரண்டு படங்களும் ரிலீஸ் ஆனாலும்கூட தன்னுடைய பூஜை ரிலீஸாகும் என விஷால் தனது முடிவில் உறுதியாக இருக்கின்றார். சமீபத்தில் அஞ்சானை எதிர்த்து தைரியமாக ரிலீஸ் செய்து வெற்றிபெற்ற பார்த்திபனை உதாரணம் கூறும் விஷால், எனக்கு என் படத்தின்மீது நம்பிக்கை இருக்கின்றது. எனவே நான் போட்டி படங்கள் குறித்து கவலைப்படவில்லை என்று போல்டாக கூறியுள்ளார்.

## சமந்தாவிர்...

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ... பொலிவூட் வாய்ப்பு வந்து அங்கு செ... நடிகையாக இருந்தவர் நடிகை ஸ்ரீதேவி ... சென்று மூக்கில் அறுவைச்சிகிச்சை செய்... வாய்ப்புகள் பொலிவூட்டில் குவிந்தது என... நடிகை சமந்தா பின்பற்றியுள்ளார்.

தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு... பொலிவூட் படங்களில் நடிக்க முயற்சி ... வட்டாரங்கள் சமந்தாவின் மூக்கை இன்னு... நன்றாக இருக்கும் எனக்கூறிய ஆலோசன... மூக்கு அறுவைச்சிகிச்சையை சமந்தா ... பின்னர் மீண்டும் லண்டன் சென்று இரண்... அவர் முடிவு செய்திருப்பதாக கூறப்ப... இரண்டுகட்ட அறுவைச் சிகிச்சை செய்தபின்னர் பொலிவூட்டில் காலூன்ற முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.





## இந்தியா பாகிஸ்தான்

'நான்', 'சலீம' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து விஜய் அண்டனி நடித்து வரும் படம் 'இந்தியா பாகிஸ்தான்'. இதில் இவருக்கு ஜோடியாக சுஷ்மா ராஜ் நடித்துவருகிறார்.

மேலும் பசுபதி, எம்.எஸ்.பாஸ்கர் உள்ளிட்ட பலர் படத்தில் நடித்துவருகிறார்கள். பாத்திமா விஜய் அண்டனி தயாரிக்கும் இப்படத்திற்கு விஜய் அண்டனி இசையமைக்கிறார்.

ரொமண்டிக் கலந்த காமெடி படமாக உருவாகும் இப்படத்தை ஆனந்த் இயக்கிவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்புகள் விரைவாக நடந்துவருகிறது. இன்னும் 15 நாட்கள் படப்பிடிப்பு மீதமுள்ள நிலையில் ஒரு பாடல் காட்சியும் படமாக்கப்படவுள்ளனர்.

அடுத்த வார திரை விமர்சனம் மெட்ராஸ்



## தோனியின் வாழ்க்கை வரலாறு படமாகிறது

கிரிக்கெட் உலகில் இந்திய அணியின் ஈடு இணையில்லாத கேப்டன் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் மகேந்திரசிங் தோனி. 2007-ம் ஆண்டு 20 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இவர் தலைமையிலான இந்திய அணி கோப்பையை வென்றதன்மூலம் பிரபலமானார்.

அடுத்து, 2011-ம் ஆண்டு உலகக் கோப்பையை இவரது தலைமையிலான 28 வருடத்திற்கு பிறகு இந்திய அணி பெற்றதன் மூலம் தோனியின் புகழ் உச்சிக்குப் பரவத் தொடங்கியது. தொடர்ந்து பல ஒருநாள் போட்டிகளில் இவர் தலைமையிலான இந்திய அணி வெற்றியை பெற்றதையடுத்து, ஒருநாள் போட்டிகளில் முதல் இடத்தை இன்றும் தக்கவைத்து உள்ளது. தனிப்பட்ட முறையிலும், அணிக்கும் பல்வேறு சாதனைகளை பெற்றுத்தந்த இவருடைய வாழ்க்கை வரலாற்றை தற்போது படமாக்க முடிவு செய்துள்ளனர். பிரபல பொலிவூட் இயக்குனர் நீரஜ் பாண்டே, தோனியின் வாழ்க்கையை படமாக எடுக்க முடிவெடுத்துள்ளார். எம்.எஸ்.தோனி என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் தோனியாக 'கை போச்சே', 'சுத்தேசி ரொமான்ஸ்' ஆகிய படங்களில் நடித்த சுசாந்த் சிங் நடிக்கிறார். சமீபத்தில்தான் பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோமின் வாழ்க்கையை படமாக பொலிவூட்டில் எடுத்தனர். அதில், மேரிகோம் கதாபாத்திரத்தில் பிரியங்கா சோப்ரா நடித்திருந்தார். இப்படம் பெரும் வெற்றியை பெற்றது.



## கு சிகிச்சை!

கொலிவூட்டில் மிகவும் பிசியாக இருந்த நேரத்தில்
பத்து ஆண்டுகளாக பொலிவூட்டின் நம்பர் ஒன்
இவர் பொலிவூட்டுக்கு சென்றபின்னர் லண்டன்
ப்துகொண்டார் என்றும் அதன்பின்னர்தான் அவருக்கு
ன்றும் கூறப்பட்டது. தற்போது ஸ்ரீதேவியின் வழியை

மொழிகளிலும் பிசியாக இருக்கும் சமந்தா, அடுத்து
செய்து கொண்டுவருகிறார். இந்நிலையில் அவருடைய
லும் அழகுபடுத்த அறுவைச்சிகிச்சை செய்தால்
னையின்படி சமீபத்தில் லண்டன் சென்று முதல்கட்ட
சய்துள்ளார். கத்தி படத்தின் படப்பிடிப்பு முடிந்த
டாவதுகட்ட அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள
படுகிறது.

## மீண்டும் சிக்கினார் சிம்பு

ஏற்கனவே நயன்தாரா மற்றும் ஹன்சிகாவுடன் காதல் ஏற்பட்டு தோற்றுப்போன சிம்பு, தற்போது மீண்டும் ஒரு காதலில் விழுந்துள்ளதாக கூறப்படுகிறது. சில நாட்களாகவே கன்னட நடிகை ஹர்சிகாவுடன் சிம்பு டேட்டிங் சென்று கொண்டிருப்பதாக செய்திகள் வெளிவந்த நிலையில் தற்போது ஹர்சிகாவுடன் சிம்பு அந்தரங்கமாக இருந்த வீடியோ ஒன்று இன்ரநெட்டில் வெளியாகி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அண்மையில் மலேசியாவில் தென்னிந்திய திரைப் படங்களுக்கு விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் சிம்பு, தனுஷ், த்ரிஷா உட்பட பல நட்சத்திரங்கள் கலந்துகொண்டனர். இரண்டு நாட்கள் நடந்த இந்த விழாவில் கலந்து கொள்ள சென்றிருந்த சிம்பு அங்கு நடிகை ஹர்சிகா தங்கியிருந்த ஸ்டார் ஓட்டலில் பக்கத்து பக்கத்து அறைகளில் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் சிம்பு தங்கியிருந்த ஸ்டார் ஓட்டலின் சிசி டிவி கேமராவை சோதனை செய்தபோது ஓட்டலின் ஒரு பகுதியில் சிம்புவும் நடிகை ஹர்சிகாவும் அந்தரங்கமாக, ஒருவருக்கொருவர் லிப் கிஸ் கொடுத்துக்கொண்டிருக்கும் வீடியோ பதிவாகி இருந்தது. இந்த வீடியோவை பார்த்த ஓட்டல் நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

தற்போது இந்த வீடியோ இன்ரநெட்டில் காட்டுத்தீ போல பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதன்மூலம் சிம்புவின் அடுத்த காதல் உறுதியாகி விட்டதாக கூறப்பட்டாலும், சிம்புவின் தரப்பில் இருந்து இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வீடியோவில் இருப்பது தான் இல்லை என்றும், அது ஒரு போலியான வீடியோ என்றும் தன்னுடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்த செய்த சதி என்றும் கூறியுள்ளார்.

## பொறியாளன் — திரை விமர்சனம்




புதிதாக சிட்டியில் வீடு வாங்குபவர்கள் எந்தளவுக்கு விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கும் பொறியாளன் இயக்குனர் மக்களுக்கு கொடுத்தது ஒரு படம் அல்ல பாடம்.

எஞ்சினியரிங் படித்து முடித்துவிட்டு ஆடுகளம் நரேன் நிறுவனத்தில் உதவி பொறியாளராக பணிபுரிகிறார் ஹீரோ ஹரிஷ் கல்யாண். இவருடைய நண்பரின் வீட்டில் இருக்கும் நாயகி ஆனந்தி ஹரிஷை காதலிக்க ஹரீஷும் ஆனந்தியை காதலிக்கிறார்.

இந்நிலையில் தான் வேலை பார்த்த நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக வேலையை விட்டு வெளியே வரும் ஹரிஷ், சொந்தமான கட்டுமான நிறுவனம் ஆரம்பிக்க தந்தையிடம் இருந்து பணம் வாங்குகிறார். புரோக்கர் மோகன்ராம் உதவியுடன் சிட்டியில் உள்ள ஒரு இடத்தை பார்க்கிறார். ஆனால் அந்த இடத்தை வாங்க பணம் போதவில்லை. இந்நிலையில் ஹரீஷின் நண்பன் அஜய் வேலைபார்க்கும் நிறுவனத்தின் உரிமையாளர் ஒரு வழக்கில் சிக்கி சிறைக்கு செல்கிறார். சிறைக்கு செல்வதற்கு முன் அஜய்யிடம் ரூ.2 கோடியை கொடுத்துவிட்டு, செல்கிறார். அந்த பணத்தை நண்பன் ஹரீஷுக்காக கொடுத்து உதவுகிறார் அஜய், ஆனால் புரோக்கர் மோகன்ராம் ஒரு வில்லங்கமான இடத்தை ஹரீஷின் தலையில் கட்டிவிட்டு தலைமறைவாகிறார். இடத்தின் உண்மையான சொந்தக்காரர் ஹரீஷுக்கு நெருக்குதல் கொடுக்க, ஜெயிலுக்கு சென்ற அஜய் முதலாளி மீண்டும் திரும்பி வந்து தான்கொடுத்த பணத்தை கேட்கிறார். ஹரீஷ் மோகன்ராமை கண்டுபிடித்து பணத்தை எப்படி மீட்கிறார் என்பதுதான் கிளைமாக்ஸ்.

ரியல் எஸ்டேட் துறையில் எப்படியெல்லாம் ஏமாற்றுவார்கள் என்பதை மிகவும் துல்லியமாக தெளிவாக கூறியிருக்கிறார் இயக்குனர் தாணுகுமார். புதிதாக வீடு வாங்குபவர்கள் கண்டிப்பாக பார்க்கவேண்டிய படம். கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்து கஷ்டப்பட்டு வீடு வாங்குபவர்களை ரியல் எஸ்டேட் முதலாளிகளும், புரோக்கர்களும் எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை பொதுமக்கள் தெரிந்துகொள்ள இந்த படம் கண்டிப்பாக ஒரு பாடம் என்றுதான் சொல்லவேண்டும்.

படத்தில் நடித்திருக்கும் அனைவரது நடிப்பும் ஓ.கே. இயக்குனர் சொன்னதை சரியாக செய்துள்ளனர். ஜோன்ஸ் இரண்டு பாடல்கள் கேட்கும்படி உள்ளது. மொத் தத்தில் பொறி யாளன் இன் னொரு சதுரங்க வேட்டை என்றுதான் சொல்ல வேண்டும். தாராள மாக பார்க்கலாம்.





### மகேஷ் பாபுவுடன் நடிக்கும் ரஜினி

தெலுங்கு நடிகர் மகேஷ் பாபுவுடன் இணைந்து புது படத்தில் ரஜினி நடிக்கிறார். இந்தி, படங்களில் இரண்டு கதாநாயகர்கள் இணைந்து நடிப்பது வழக்கமாக இருக்கிறது. மலையாள படங்களிலும் சேர்ந்து நடிக்கிறார்கள்.

ஆனால் தமிழ், தெலுங்கு படங்களில் ஒன்றாக நடிக்க தயக்கம் காட்டுகிறார்கள். இந்த நிலை யில் தான் தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ்பாபுவுடன் நடிக்க ரஜினி சம்மதித்து உள்ளார். பிரபல தெலுங்கு தயாரிப்பாளரும் மகேஷ்பாபுவின் உறவினருமான சூரிய நாராயாணராவ் இரண்டு கதாநாயகர்களை வைத்து படம் எடுக்கிறார். இப்படத்துக்கு மகேஷ்பாபு ஏற்கனவே தேர்வாகியுள்ளார். அவருடன் இன்னொரு நாயகனாக ரஜினியை நடிக்க வைக்கவேண்டும் என்று விருப்பப்பட்டார்.

தேன் கிண்ணம்

# கேட்கிறேன் கிடைக்குமா?



என்னுள் புதைத்து வைத்திருக்கும்
சோகங்களை உன்னிடம்
சொல்லி அழ சம்மதம்
கேட்கிறேன்....
சாய்ந்து கொள்ள உன்
தோள் கேட்கிறேன்.
என் மனதின் க்னத்தை
உன் வார்த்தை கரைத்திடும்
உன் வார்த்தைகளை
கேட்கிறேன்...
உனை போல் நண்பனை
கொடுத்த கடவுளுக்கு
நன்றிச் சொல்ல மீண்டும்
உன் நட்பை கேட்கிறேன்...
கிடைக்குமா...?

ஏ.எம்.சமீர்,
கம்பளை.

# நண்பா!

நட்பு நடிக்காது
நம் நட்பை நயவஞ்சகர்கள்
களங்கப்படுத்திய போது
நான் உனக்கு
அடகு வைக்கப்பட்டவனோ!
சோரம் போனவனோ அல்ல.
நட்பின் சுவடுகள்
கடும் போக்கை
தளர்த்திக் கொள்ளுமாறு
கட்டளையிட்ட தற்கிணங்கியே
உன்னுடன் மீண்டும் நட்புக் கொண்டேன்.

என் நட்பின் தாகமே
உன் நட்பை ஏற்று
உன்னுடன் மீண்டும் வந்தேன்.
பிழைப்பிற்காக வரவில்லை.
நான் யாருடைய
கை பொம்மையுமில்லை.
கிள்ளுக் கீரையுமில்லை.
அரிச் சுவடி படித்தவருக்கும்
கலாநிதி படித்தவருக்கும்
நட்பு ஒன்றுதான் – அதற்காக
உன் நட்பு வேண்டுமென்று
காலில் விழுந்து
சாஸ்டாங்கம் செய்யமாட்டேன்,
ஆலாவாக பறக்கவும் மாட்டேன்
சதா சேவகம் செய்யவும் மாட்டேன்
உன் வார்த்தைகளால்
பல சந்தர்ப்பங்களில்
நான் பலப்பட்டுள்ளேன்.
நம் நட்பை
பலவீனப்படுத்தாதே நண்பா...

மு.கா.முகம்மது அஸ்வர்,
திருகோணமலை.




# தொடரட்டும் சோதனைகள்

என்னைக் கண்டதும்
முறைக்கிறாய்... பரவாயில்லை
என் பேச்சைக் கேட்க
மறுக்கிறாய்... பரவாயில்லை
உன்னைப் பின் தொடர்வதை
வெறுக்கிறாய்... பரவாயில்லை
காதல் கடிதம் கொடுத்தால்
கிழித்தெறிகிறாய் ... பரவாயில்லை
பிறந்த நாட் பரிசளித்தால்
திருப்பி அனுப்புகிறாய்... பரவாயில்லை
தொலைபேசியில் அழைத்தால்
உடன் வெட்டி விடுகிறாய் .. பரவாயில்லை
ரோஜா மலரைக் கொடுத்தால்
அதைக் கசக்கி எறிகிறாய்.... பரவாயில்லை
"இதெல்லாம் அவன் காதலைச் சோதிக்கவே"
என்று உன் தோழிக்கு நீ சொன்னது
எனக்குத் தெரியும்... பரவாயில்லை
உன் சோதனைகள் முடிய
எனை நீ ஏற்றுக் கொள்வாய் என்பதும்
எனக்குத் தெரியும்... பரவாயில்லை
தொடரட்டும் உன் சோதனைகள்.



அ.சந்தியாகோ, கண்டி.

# காதல் காணிக்கை...



என் கவிதை என்னும்
அதியுட்பமான படைப்புக்கு
உன் உருவமே சாட்சி...

என் கவிதையில் இந்த உலகம்
மிக இனிமையாக இருந்தாலும்
அதில் அழகாக தோன்றுவது
உன் முகம்தான்...

ஒத்த பின்னலும் பூப் போட்ட
பாவாடையும் சட்டையுமாய்!
வட்ட முகத்தில் சிவந்த பொட்டுடனும்
சிரிப்போடு போட்ட விதைகள்தான்
இந்த கவிதைகள்!

இந்த ஊமைக் குயிலைக்
கவிக்குயிலாக்கிய என் உயிரே
என்றுமே உனக்கு நான்...
காதல் காணிக்கைதான்!

கே.பாலேந்திரன்
கொள்ளுப்பிட்டி.

# நீ வாழ நான் வேண்டும்



இங்கு பல மதங்கள்
வேறுபட்ட சமய வழிபாடுகள்
மாறுபட்ட ஆடையணிகள்
வெவ்வேறு உணவுப்
பழக்க வழக்கங்கள்
தனித்துவமான கலாசார
பாரம்பரிய பின்னணிகள்
இவை ஒன்றுக்கொன்று
முரண்பாடுகளல்ல
சகிப்புத் தன்மையை
சோதிப்பதுமல்ல
ஒன்றை ஒன்று
அனுசரித்துச் செல்ல வேண்டியவை


அதனால்தான்
சதி பதிபோல்
ஒற்றுமையில் உயர்வாக
பின்னிப் பிணைந்திருந்தோம்
இதுவே நாம் கற்றுத்தேர்ந்த
அரிவரிப் பாடங்கள்

அனைத்தும் இன்றுவரை
சிறப்பாகத்தான் இருந்தது
மற்றவர் தலங்களைப் பார்வையிட்டு
அவர் வழிபாடுகளை கண்டுகளித்து
ஒன்றை ஒன்று நோகாமல்
நடந்த இனிமையான பொழுதுகள்
எங்கே போனது

மாண்பாயிருந்த
மதத் தனித்துவங்கள்
ஏன் மறுக்கப்படுகின்றது
சொல்ல முடியாதவைகள் கூட
தோரணம் போட்டு
காழ்ப்புணர்வு கலந்து
இட்டுக் கட்டப்படுகிறதே

இனமொன்றின் மனக்கொதிப்பு
எதனை சாதகமாக்கித் தரும்
ஒரு பக்கம் இசைவாக்கப்படுவது
மறுபக்கம்
சமூக இருப்பை
கேள்விக் குறியாக்கி விடும்
இப்புவியில் தான்
மனிதம் வாழவேண்டும்
அதனால் மாறவேண்டும்
இந்தப் போக்கு
இவ்வுலகிற்கு என்றும்
சாத்தியமான சாஸ்திரம்
நீ வாழ நான் வேண்டும்.

எம்.ஐ.எம்.அஷ்ரப், சாய்ந்தமருது



# கட்டமைப்பு வீக்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் அடுத்த நிரந்தரப் பயிற்சியாளர் யார் என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. இங்கிலாந்தின் பார்பிராஸ் காலைவாரிவிட்டு இங்கிலாந்து அணியுடன் இணைந்து கொண்டபின், . இடைக்காலப் பயிற்றுனராகக் கடமையாற்றிய மாவன் அத்தப்பத்து இப்பொழுது நிரந்தர பயிற்றுனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உலகக் கிண்ண ஒரு நாள் போட்டி, மற்றும் அதனைத் தொடர்ந்தும் கடமையாற்றுவார் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்த விடயத்திலும் இலங்கைக் கிரிக்கெட் சபையில் ஒருமித்த கருத்து இருக்கவில்லை போலத் தெரிகிறது. ஏனெனில் இலங்க்கை அணியின் பிரதம தெரிவாளர் சனத் ஜெயசூரியா, திடீரென்று தனது பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வேன் என்று அறிவித்திருந்தார். அதாவது இந்தத் தெரிவில் தனக்குச் சம்பந்தம் இருப்பதாகக் காட்டிக்கொள்ள அவர் விரும்பமில்லை என்பதையே அதுகாட்டியது. அவர் தெரிவுக் குழுவில் இருந்தும் விலகிக்கொள்வதாகக் கூறியது கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் புயலைக் கிளப்பியது.

சனத் தான் விலகிக்கொள்வதற்கான காரணத்தை வெளிப் படையாகத் தெரிவிக்கவில்லையாயினும், உரியநேரம் வரும் போது எல்லாவற்றையும் வெளிப்படுத்துவேன் என்றும், இந்தத் தெரிவில் தான் சம்பந்தப்படுவதை விரும்பவில்லை என்றும் கூறியிருந்தார். ஆனால் தான் உள்ளூர் பயிற்சியாளரே அன்றி, வெளிநாட்டுப் பயிற்சியாளருக்கு ஆதரவுதருவதாக சபை உத்தியோகத்தர்கள் தன்மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தி இருப்பதாகவும் சனத் எடுத்துக்கூறியுள்ளார்.

முன்னதாக, அத்தப்பத்துவைவே நிரந்தர பயிற்சியாளராக நியமிக்காமல் பயிற்றுனருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இறுதியில் இரண்டு பேர் வரையில் படிப்படியாகக் குறைக்கப் பட்டு இங்கிலாந்தின் ஜோண் லூயிஸ் மற்றும் இலங்கையின் மாவன் அத்தப்பத்து வரையில் வந்து இப்போது அத்தப் பத்துவையே நியமித்துள்ளார்கள்.

பயிற்றுனர் தெரிவுக்குழுவில் உள்ள சிலருக்கு அத்தப்பத்துவைத் தெரிவுசெய்தது சம்மதம் இல்லை என்றவாறாகவும் கருத்துக்கள் வெளியாகின்றன. உண்மையில் யார், யாருக்கு என்ன விருப்பங்களோ, அபிலாசைகளோ என்று ஒன்றும் புரியாமல் இருக்கிறது. ஒன்று மட்டும்தான் தெரிகிறது. கடந்துபோன பல சம்பவங்களை எடுத்துப் பார்க்கும்போது இலங்கை கிரிக்கெட் சபை சார்ந்த சகல விடயங்களும் நெல்லிக்காய் மூட்டை போலத்தான் இருக்கின்றன. தற்போதைய விடயத்தில் மாவன் அத்தப் பத்து எங்கு நிற்கிறார், சனத் ஜெயசூரியா எங்கு நிற்கிறார். ஒன்றும் புரியவில்லை.

# ஒட்டாத உறவு




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் அலிஸ்ரர் குக்கின் பதவிக்கு ஆபத்தில்லை என்ற நிலை உருவாகியுள்ள நிலையில், மீண்டும் கெவின் பீற்றர்சன் பற்றிய விடயங்கள் அதாவது உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கிவரும் வேளையில் தலைதூக்குகின்றன.

இவர் திறமை சற்றும் குறையாத வீரர். ஆனால் மீண்டும் அணிக்குள் வருவாரா என்பதே இப்போதைய கேள்வி. இதுபற்றி முன்னாள் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜெப் போய்கொட் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அதாவது பீட்டர்சன் மிகத் திறமையானவர். ஆனால் இங்கிலாந்து அணிக்கு இவர் வேண்டாத விருந்தாளியாகத் தான் இருப்பார். இப்பொழுது இங்கிலாந்து கிரிக்கெட் சபை பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. இப்படியிருக்க, புதிதாக இன்னொரு தலையிடி எதற்கு என்றுதான் அவர்கள் நினைப்பார்கள்.

எனவே இங்கிலாந்து அணிக்குள் கெவின் பீற்றர்சன் நுழைவது என்பது இனி இல்லை என்பதே என் கருத்து என்று சொல்லியிருக்கிறார். இவரது கண்ணோட்டம் வித்தியாசமான திசையில் செல்கிறது. அதாவது அலிஸ்ரர் குக் கெவின் பீற்றர்சனை ஒரு அணித்தலைவராகக் கையாள்வது சாத்தியம் அல்ல. குக் ஒரு சிறந்த துடுப்பட்ட வீரர். ஆனால் இவர் சொல்கேட்டு கெவின் நடப்பர் என்று நம்பமுடியாது.

எனவே இங்கிலாந்து அணியில் கெவினின் மீள் நுழைவிற்கான தடைகளில் இது முக்கியமான காரணமாகும். இப்படியாக போய்கொட் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். மிகத்திறமையான வீரர் கெவின். தன் அத்துமீறிய நடத்தைகளால் நல்ல சந்தர்ப்பங்களை இழப்பது துரதிர்ஷ்டம்தான். மேலும் போய்கெட்டின் கருத்துக்கள் முழுவதும் சரியானவையாகவே தோன்றுகின்றன. கெவின் மட்டுமல்ல, இன்னும் பல சர்வதேச பிரபலங்கள் விளையாட்டுத் துறையில் காணாமற்போனமைக்கு அவர்களது அடக்கமின்மை ஒரு காரணமாக இருந்திருக்கிறது. அந்த வகைக்குள் கெவின் பீற்றர்சனும் அகப்பட்டுவிட்டார்.

# தங்க மகன்



இங்கிலாந்தில் நடைபெற்ற மிக உயர்ந்த வைபவம் ஒன்றில் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கபில் தேவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இதனை வழங்கியவர்கள் IEBF எனப்படும் இந்திய ஐரோப்பிய வர்த்த சம்மேளனமாகும்.

கபில்தேவ் இந்தியாவிற்கு உலகக் கிண்ணத்தைவென்று கொடுத்தவர் என்ற வகையிலும், விளையாட்டுத் துறைக்கு அவர் ஆற்றிவரும் சேவைகளுக்கும், வறுமை ஒழிப்பு மற்றும் ஆதரவற்றோர் களுக்கு உதவும் பொதுநல சேவையில் கபில் காட்டிவரும் அக்கறைக்குமாக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கும் நிகழ்வில் அவர் பேசும்போது சுவையாகச் சில விடயங் களைக் கூறியுள்ளார்.

நான் இந்தியன் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். இங்கிலாந்து எம்மை அடக்கியாண்டதால் இங்கிலாந்து மீது எனக்கு வெறுப்புண்டு. ஆனால் கிரிக் கெட் ஆட்டத்தை அவர்கள் தந்ததால் அவர்கள்மீது விருப்பம் உண்டு. ஆனால் கிரிக்கெட்டை அவர்களைவிட நாங்கள் தான் நன்றாக விளையாடுகின்றோம். ஆனால் அவர்கள் ஆங்கிலம் நன்றாகப் பேசுகிறார் கள். எனக்கு ஆங்கிலம் அவ்வளவு நன்றாக வருவதாக இல்லை என்று ஹாஸ்யமாகக் கூறியுள்ளார். 55 வயதாகும் கபில், தோற்கடிக் கப்படவே முடியாது என்று நம்பப்பட்ட மே.இந்திய அணியை 1983இல் தோற் கடித்து உலகக் கிண்ணத்தை வென்றவர். இந்தியாவின் பெருமைமிக்க மகன் இவர்.

# கடினமான பாதை





கிரிக்கெட் ஆட்டங்களின்போது முறை தவறிய நடவடிக்கைக்காக அபராதம் விதிக்கப் படுவதை அறிந்துள்ளோம். ஆனால் இப்போது புதியதொரு அபராத முறைமை பாகிஸ்தானில் இருந்துவருகிறது. அதாவது உடற்தகுதியைச் சரியாக வைத்துக்கொள்ளாத பன்னிரண்டு கிரிக்கெட் வீரர்களின் சம்பளப் பணத்தில் இருந்து 25வீதம் அபராதமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த உடற்தகுதிப் பரிசோதனை என்பது பதினேழு உபவகைகளைக் கொண்ட 5 பிரிவு களைக் கொண்டு அமைந்துள்ளது. செப்ரெம்பர் மாதத்தில் பாகிஸ்தானின் 29 கிரிக்கெட் வீரர்கள் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் பரிசோதனையின்பின் நட்சத்திர வீரர் சாஹிட் அப்ரிடி, உமர் அக்மல், சார்பிராஸ் அகமட், அப்துர் ரகுமான், மொகமட் இர்பான் உட்பட பன்னிரண்டு பேர் தமது சம்பளத்தில் 25வீதம் அபராதத்துக்கு உட்பட்டுள்ளனர். இதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளுக்கு அமைய உடற்தகுதியைப் பேணியவர்களுக்கு போனஸ் பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய வெகுமதியைப் பெற்றுக்கொண்டவர்களில் பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக், அஹமட் செஜாட் ஆகியோர் அடக்கம். இவர்கள் 10வீதம் போனஸ் பெறுகிறார்கள்.

மிகச் சிறப்பாக உடற்தகுதியைப் பேணிக்கொண்ட ஷான் மசூட், உமர் அமீன் இருவரும் 17வீதம் போனஸ் பெற்றுக்கொள்கிறார்கள். பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படுகிறார்கள். இதில் மாதாந்த சம்பளம் 4250 அமெரிக்க டொலர்கள் (இலங்கை ரூபா 5½ லட்சம்) 1000 அமெரிக்க டொலர்கள் (ஏறத்தாள இல. ரூபா 1½ இலட்சம்) சம்பள வேறுபாடு அமையும். இதன் அடிப்படையிலேயே அபராதமும் விதிக்கப்படும்.

உடற்தகுதியை எதிர்பார்த்த அளவிற்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்றால் வீரர்கள் நிறைய விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டும். அர்ப்பணிப்பும், அதிகம் அவசியம். எனவே சாதாரண ரசிகர்கள் அக்கறைப்படாத பல்வேறு விடயங்களில் தம்மை ஒறுத்துத்தான் நட்சத்திரங்களாக மிளிரமுடியும். நாங்கள் ஆர்ப்பரித்து, ஆரவாரம்செய்து கொண்டாடும் பல வீரர்கள், எவ்வளவோ விடயங்களை இழந்துதான் எமக்குச் சந்தோசத்தைத் தருகிறார்கள்.




# இன்றைய பெண்களின் வித்தியாசமான ஆசைகள்



18 வயது முதல் 25 வயது வரையுள்ள பெண்களிடம் எடுக்கப்பட்ட 'கல்யாண ஆசைகள்' பற்றிய கருத்துக்கணிப்பில் அவர்கள் தங்களது வித்தியாசமான விருப்பங்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

நண்பர்போலவும், திறந்த மனதோடும் பழகும் கணவர் தேவை என்று 80 சதவீத பெண்கள் தெரிவித்திருக்கிறார்கள். கணவரிடம் அதிகபட்ச அன்பு, செக்ஸ், ஆண்மை நிரம்பிய குணம் போன்றவைகளை எதிர்பார்க்கும் பெண்கள் 5 சதவீதம் மட்டுமே!

மனதிற்குள் இருக்கும் எல்லாவற்றையும் பேசும் அளவுக்கு கணவர் நடந்துகொள்ள வேண்டும். சுதந்திரம்தர வேண்டும். எதற்கும் கட்டுப்பாடு விதிக்காதவராக இருக்கவேண்டும் என்று கிட்டத்தட்ட எல்லா இளம் பெண்களுமே எதிர்பார்க்கிறார்கள்.

ஐந்து நிமிடம் பார்த்து, அடுத்த மாதமே திருமணம் செய்துகொண்டு, அவரோடு அவசர அவசரமாக தேனிலவுக்கு புறப்பட்டு செல்லும் மனநிலை தங்களுக்கு இல்லை. குறைந்தது 6 மாதமாவது பழகிய பின்பே அவர் தங்களுக்கு தகுதியானவரா என்று கண்டுபிடிக்க முடியும்.

அதற்கான வாய்ப்பை தங்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று 90 சதவீத பெண்கள் எதிர்பார்க்கிறார்கள். எவ்வளவு நல்ல வரனாக இருந்தாலும், "நாங்கள் பார்த்து பேசி முடிவு செய்துவிட்டோம். நீ ஒத்துக்கொள் என்பதுபோல் பெற்றோர் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று, 68 சதவீத பெண்கள் அதிரடியாக சொல்கிறார்கள். பத்து சதவீத பெண்கள், வாழ்க்கையில் திருமணம் அவ்வளவு முக்கியமில்லை என்கிறார்கள்.

திருமணம் முடிந்த பின்பும் தங்கள் வருங்கால கணவரின் சுதந்திரத்தில் தலையிடமாட்டோம் என்று 40 சதவீதப் பெண்கள் சொல்கிறார்கள்.

ஆனால் தாங்கள் கொடுக்கும் சுதந்திரத்தை கணவர் தங்களுக்கு தரவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். 30 வயதிற்கு பிறகு அது போதுமே என்கிறார்கள். 40 சதவீத பெண்கள் திருமணத்தில் ஆடம்பர அலங்காரங்கள் அவசியம் என்கிறார்கள்.


காரணம், "வாழ்க்கையில் ஒருமுறைதான் திருமணம் செய்கிறோம். அதனால் அலங்காரத்திற்கு நிறைய பணம் செலவிடலாம்" என்ற ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

கல்யாணத்தை ஆடம்பரமாக நடத்தவேண்டிய தில்லை என்று 58 சதவீத பெண்கள் சொல்லும் போது, 42 சதவீதப் பெண்கள் "அந்த விஷயத்தில் பெற்றோர் எடுக்கும் இறுதி முடிவை ஏற்றுக் கொள்கிறோம்" என்றுகூறி, ஆடம்பரத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்களாக இருக்கிறார்கள்.

மது அருந்தும் பழக்கம் கொண்டவர்கள் தங்களுக்கு வேண்டாம் என்றுதான் பெரும்பாலான பெண்கள் கூறியிருக்கிறார்கள். காரணம், மது அருந்துபவர்கள். அளவுக்குள் அடங்கிக் கொள்ளமாட்டார்கள்.

எல்லை மீறிப்போய்விடுவார்கள் என்ற பயம் பெண்களிடம் இருக்கிறது. டீன்ஏஜ் பெண்களில் 58 சதவீதம் பேர் தங்களுக்கு சமையல் தெரியும் என்றிருக்கிறார்கள். ஆனால் தங்களை சமையல் அறைக்குள்ளே போட்டுவிடக்கூடாது என்ற பயத்தில், "சமையல் அவ்வளவாக தெரியாது" என்று கூறிவிடுகிறார்களாம்!

# சோள மா ஓலை கொழுக்கட்டை



**தேவையான பொருட்கள்:**

சோள மா - 100 கிராம்
கருப்பட்டி - 50 கிராம்
பாசிப்பருப்பு - 10 கிராம்
எள் - 5 கிராம்
பனை ஓலை - தேவையான அளவு

**செய்முறை :**

பாசிப்பருப்பை வெறும் கடாயில் போட்டு நன்றாக வறுத்துக் கொள்ளவும்.

கருப்பட்டியை பாகுவாக நன்றாக காய்ச்சி கொள்ள வேண்டும்.

அதில் சோள மாவை போட்டு நன்றாக பிசைந்து வறுத்த பாசிப்பருப்பு, எள் ஆகிய இரண்டையும் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

ஓலைகளை 1 அடி அளவில் வெட்டிவைக்கவும். ஓலையில் நடுவே மாவை வைத்து ஓலை நாரால் கட்டவும். இவ்வாறு அனைத்து ஓலைகளிலும் மாவை வைத்து கட்டி இட்லி பாத்திரத்தில் வைத்து வேகவைக்கவும். சுவையான சத்தான சோள மா ஓலை கொழுக்கட்டை தயார்.

# முகத்துக்கு பிரகாசம் அளிக்கும் கிரீம்

இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் கிரீம்கள் உடனடி பயன்பாட்டுக்குத்தான் ஏற்றது. ஓரிரு நாட்கள் வைத்திருக்க வேண்டுமென்றால்கூட, அது சரிவராது. உடனடியாக பயன்படுத்தும் வகையிலான பவுடர் மற்றும் பேர்னெஸ் கிரீம் தயாரிக்கும் முறைகளை சொல்கிறேன்.

முல்தானி மட்டி, சந்தன பவுடர் இரண்டும் தலா 5 கிராம் எடுத்து, வட்டமான கிண்ணத்தில் போடுங்கள். இதன் ஓரத்தில் 10 துளிகள் ரோஸ் வோட்டரை விட்டு காற்று போகாத மூடியால் இறுக மூடிவிடுங்கள். இந்தக் கலவை ஒரு மணி நேரத்தில் 'கேக்' போன்று மாறிவிடும்.

* முகத்தை நன்றாக கழுவி, ஒரு ஸ்பொஞ்ச்சினால் இந்த 'கேக்'கைத் தொட்டு, இதை முகத்துக்குப் பூசுங்கள். கிரீம் போட்டதுபோல், முகம் பளிச்சென்று இருக்கும். விரும்புகிறவர்கள் இதற்கு மேல் பவுர் பூசிக் கொள்ளலாம்.

* முல்தானி மட்டி-ஒரு கிராம், சந்தன பவுடர்-10 கிராம், சிவப்பு சந்தன பவுடர்- 2 கிராம்... இவற்றுடன் தேவையான அளவு ரோஸ் பவுடர் கலந்து வையுங்கள். வெளியில் செல்லும் போது இந்த பவுடரை பூசிக் கொள்ளலாம்.

* கூடுதல் நேரம் முகத்தில் பவுடர் இருக்கவேண்டும் என்று நினைக்கிறவர்கள், சிறிது வெண்ணெயை கையில் தடவி, அதே கையால் இந்த பவுடரை தேய்த்து முகத்தில் பூசலாம். நோர்மல் மற்றும் உலர்ந்த சருமத்தினருக்கு ஏற்ற அலங்காரம் இது.

* எண்ணெய் பசை சருமத்தினர், முல்தானி மட்டிக்கு பதில், வெட்டிவேரை நைஸாக அரைத்து, சேர்த்து இந்த பவுடர் மற்றும் கிரீமை தயாரித்துக் கொள்ளலாம். வெட்டிவேர், முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெயை ஈர்த்து, முகத்தை பிரகாசமாக்கிவிடும்.



தேவையான சில பொருட்களை பெண்கள் வைத்துக் கொள்வதற்காகத்தான் ஹேண்ட் பேக். அதில் மேக்கப் ஐட்டங்கள், பெண்கள் சமாச்சாரங்கள் முதல் மணிபேர்ஸ், சாவிக் கொத்துக்கள் வரை வைத்துக்கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம்.

கைப்பையில் அவசியமான சில பொருட்களை மட்டும் வைத்துக் கொண்டால்தான் அழகு. ஆனால் இப்போதெல்லாம் தேவையில்லாத கசடுகளும் அடைக்கப்பட்டுக் கொண்டு, பையை வீங்க வைத்துக் கொண்டுள்ளன. அதுபோன்ற சில தேவையில்லாத பொருட்கள் உங்கள் உடல் நலத்துக்கும் கெடுதல் தருவதாகும்.

தேவையில்லாமல் கைப்பையில் அடைபட்டுக் கிடக்கும் அத்தகைய பொருட்களை பார்க்கலாம். ஒரு முறை மட்டுமே உபயோகித்து எறிந்துவிடக்கூடிய போத்தல்களில் எல்லாம் தண்ணீரை நிரப்பிக்கொண்டு அதை கைப்பையில் வைத்துக் கொள்வது நல்லதல்ல.

# பெண்களின் கைப்பையில் இருக்கும் கேடான பொருட்கள்



இதுபோன்ற போத்தல்களில் நப்தலீன் என்ற வேதிப்பொருள் இருப்பதால் அது தண்ணீருடன் கலந்து விஷத் தண்ணீராக மாறிவிடும். அதற்கு பதிலாக ஆரோக்கியமான அலுமினியம் அல்லது ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் செய்யப்பட்ட போத்தல்களில் தண்ணீரை அடைத்து வைத்துக் கொள்வது நல்லது.

பல பெண்கள் கைத்துண்டுகளைக் கொண்டு மூக்கை நன்றாகச் சிந்திவிட்டு, அவற்றை மறுபடியும் கைப்பைக்குள்ளேயே வைத்துக் கொள்கிறார்கள். அது கைப்பைக்குள்ளேயே இருந்துகொண்டு வைரஸ் களைப் பரப்பும். எனவே கைத்துண்டுகளைப் பயன்படுத்திவிட்டு அவற்றை மீண்டும் கைப்பைக்குள் வைக்கும் பழக்கத்தை விடுங்கள்.

250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-439

**கேள்வி: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 13. 10. 2014

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 439
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 437 இற்கான விடை :-
பருக்களை கிள்ளவோ, தொடவோ கூடாது, பேஷியல் செய்யக் கூடாது.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
எம்.பன்னீர்ச்செல்வம்,
சின்னக்கடை,
மன்னார்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

439

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

# ஜெ.ஜெ

## ஜெயிலில் ஜெயலலிதா!

# தீர்ப்பும் பின்னணியும்

ஏ.எச்.ஏ. ஹூசைன்



அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். இது எல்லோருக்கும் பொருந்தும். எல்லோரையும் எவரும் எந்நேரமும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதை காலம் உணர்த்திநிற்கும்.

செப்டெம்பெர் 27ஆம் திகதி காலையில் தமிழக முதல்வராக அதுவும் பிரதமருக்கு உரிய பாதுகாப்புடன் தனி விமானத்தில் பெங்களூர் பரப்பன அக்ர ஹாரா சிறப்பு நீதிமன்றம் நோக்கிப் பயணித்தார் ஜெயலலிதா. பின்னர் மாலையில் கர்நாடகாவின் அக்ரஹாரா சிறைக்கு சிறை வாகனத்தில் சிறை அதிகாரிகளின் பாதுகாப்பில் அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்திய அரசியல் வரலாற்றிலே காலையில் முதல்வராகவும் மாலையில் கைதியாகவுமான ஒரேயொருவர் ஜெயலலிதாதான். தீர்ப்பளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் நீதிமன்றத்திற்கு நேரில் வரவேண்டும் என பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

காலை 11 மணிக்கெல்லாம் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்த்ததால் நேரகாலத்துடனேயே தனிச்சிறப்பு விமானத்தில் பெங்களூர் போய்ச் சேர்ந்தார் ஜெயலலிதா. தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் இந்தத் தீர்ப்பு எவ்வாறு அமையுமோ என்ற பரபரப்பு நிலவியது.

அந்தப் பரபரப்புக்கு மத்தியில் பிற்பகல் 2.25 மணியளவில் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கேல் டி குன்ஹா தீர்ப்பை வழங்கினார். சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகளும் நிரூபணமானதாக நீதிமன்றம் அறிவித்தது.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி ஜெயலலிதா எம்.எல்.ஏ. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகிறார். அவரது முதல்வர் பதவியையும் இழக்கிறார். என்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. இது அறிவிக்கப்பட்டு சற்று நேரத்திற்கெல்லாம் அவருக்கான இசட் பிளஸ் பாதுகாப்பும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

தீர்ப்பை அடுத்து முதல்வர் ஜெயலலிதாவின் காரில் இருந்து தேசியக் கொடி அகற்றப்பட்டது. தண்டனை விபரம் மீதான விவாதம் 3 மணிக்கு தொடங்கியது. எதிர்த்தரப்பு சார்பில், ஜெயலலிதாவுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என வாதிட்டதாக பெங்களூர் சிறப்பு நீதிமன்ற வழக்கறிஞர் பவானி சிங் தெரிவித்தார்.

இந்நிலையில் ஜெயலலிதா நீதிபதியிடம் கூறுகையில், "இந்த வழக்கு என்னை அரசியலில் இருந்தே ஒழித்துக்கட்ட செய்யப்பட்ட கூட்டுச்சதி. மேலும் எனக்கு உடல் நிலை சரியில்லை. அதனால் எனக்கு குறைந்தபட்ச தண்டனை அளியுங்கள்" என்று கெஞ்சினார்.

பின்னர் மாலை 5 மணியளவில் தண்டனை அறிவிக்கப்பட்டது. ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறையும், மேலும் 100 கோடி இந்திய ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இதனால் ஜெயலலிதா 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட உடனேயே பெங்களூர் பொலீஸார் ஜெயலலிதாவை தங்கள் பொறுப்பில் எடுத்தனர். முன்னதாக சிறைச்சாலை வளாகத்திலுள்ள மருத்துவமனையில் ஜெயலலிதாவுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அதேபோல, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்பிறகு அவர்கள் எல்லோரும் பரப்பன அக்ரஹாராவில் அமைந்துள்ள பெங்களூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். ஜெயலலிதாவுக்கு சிறைக்கைதி எண் 7402, சசிகலாவுக்கு 7403, சுதாகரனுக்கு 7404, இளவரசிக்கு 7405.

ஜெயலலிதாவை சிறையில் அடைத்தது குறித்து அறிந்த அ.தி.மு.க.வினர் கண்ணீர விட்டு கதறி அழுதனர். தமிழ் நாடெங்கும் பதட்டம் நிலவியது. சிறைச்சாலையில் வழங்கப்பட்ட இரவு உணவைக் கண்ணீருடன் கலந்து உண்டார் ஜெயலலிதா.

**சிறையின் வெளியே அ.தி.மு.க. உறுப்பினர்கள் கண்ணீருடன் காத்திருந்தனர்**

இந்த அதிரடி தீர்ப்பு அ.தி.மு.க.வின் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தொண்டர்கள் மற்றும் விசுவாசிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஈரோட்டில் தீர்ப்பு வெளியானவுடன் அ.தி.மு.க.வினர் கதறியழுதனர்.

சொத்துக் குவிப்பு வழக்கை 18 ஆண்டுகளாக எவ்வளவு இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவுக்கு இழுத்தடித்த ஜெயலலிதா, ஒவ்வொருமுறையும் சிறப்பு நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று மாற்றி மாற்றி வழக்குப் போட்டு இழுத்தடித்துப் பார்த்தார்.

தம் மீதான தீர்ப்பு மிகக் கடுமை காட்டக்கூடிய ஒரு நீதிபதியிடம் சிக்கும் என்று அவரே நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். ஜெயலலிதாமீது சொத்துக் குவிப்பு வழக்கு போடப்பட்டு 18 ஆண்டுகளாகிவிட்டது.

தீர்ப்பு திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட எத்தனையோ மனுக்களைத் தாக்கல் செய்தார் ஜெயலலிதா. உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்புவருவதற்கு முதல் நாளும்கூட ஒரு வழக்கைப் போட்டு தீர்ப்பை வேறு மாநிலத்துக்கு. மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் பார்த்தது ஜெயலலிதா தரப்பு.

ஆனால், எதுவும் நடைபெறவில்லை. இத்தனை போராட்டத்துக்கும் 'இழுத்தடிப்புக்கும் பயனில்லாமல் ஊழல் வழக்குகளில் மிகக் கடுமையான தீர்ப்பளிக்கக்கூடிய' நீதிபதி குன்காவிடம் போய் தானே சிக்கி, தற்போது 4ஆண்டு சிறைத் தண்டனையுடன் ரூ.100 கோடி அப்ராதம் விதிக்கப்பட்ட ஒரு தீர்ப்பை ஜெயலலிதாவே எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி என அறிவிக்கப்பட்டுவிட்டதால் அவரது முதல்வர் பதவி இரண்டாவது முறையாக பறிபோய்விட்டது. 2001ஆம் ஆண்டு டான்சி ஊழல் வழக்கில் 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றது செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் அப்போது ஜெயலலிதாவின் முதல்வர் பதவி பறிபோனது.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் ஒன்றுகூடி ஓ. பன்னீர செல்வத்தை முதல்வராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் 2001ஆம் ஆண்டு செப்டெம்பெர் முதல் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை இடைக்கால முதல்வராக இருந்தார்.

இந்திய அரசியல் வரலாற்றில் முதல்வர் பதவியில் இருக்கும்போதே ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத்தண்டனை பெற்ற நாட்டின் 'முதல்' முதல்வர் என்ற பெயரை எடுத்து ஜெயலலிதா சிறப்பு கவனம் பெற்றுள்ளார்.

இதே சட்டத்தின் விளைவாக, பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் பதவி பறிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அவர் தீர்ப்பு வழங்கப்பட்டபோது முதல்வர் பதவியில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

**வழக்கு பின்னணி:**

கடந்த 1991-96 காலகட்டத்தில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.66 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 395.59 சொத்து குவித்ததாக அப்போதைய ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கடந்த 14.06.1996 அன்று சென்னை மாநகர அமர்வு நீதிமன்றத்தில் புகார் அளித்தார்.

27.06.1996 அன்று அவரது புகாரை விசாரிக்குமாறு தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறைக்கு சென்னை மாநகர அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஐ.எஸ்.ஐ.எஸ். மீது...

மேற்காசியாவில், குறிப்பாக ஈராக்கில் அதிருப்தியிலும் விரக்தியிலுமுள்ள சன்னி முஸ்லிம் மக்களை இந்த இயக்கத்தினர் தமக்கு ஆதரவாகக் கவர்ந்திழுப்பதில் கணிசமான வெற்றியைச் சாதித்துள்ளனர். இஸ்ரேலின் இனவெறி பயங்கரவாதத் தாக்குதலாலும், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்கத் தாக்குதலாலும், ஈராக்கிலும் ஆப்கானிலும் நடந்துள்ள அமெரிக்க ஆக்கிரமிப்பாலும், இப்பிராந்திய மக்களிடம் நிலவும் ஆத்திரத்தையும் நம்பிக்கையின்மையையும் சாதகமாக்கிக் கொண்டு இந்த இயக்கத்தினர் அண்மைக்காலமாக பிரபலமடைந்து வருகின்றனர்.

ஈராக்கின் அமெரிக்க பொம்மை அரசப் படைகளுக்கு எதிராகவும், சிரிய அரசப் படைகளுக்கு எதிராகவும் நடத்திவரும் தாக்குதல்களையும், பிற சிறுபான்மை மத, இனக்குழுவினர் மீதான படுகொலைகளையும், அமெரிக்கப் பத்திரிகையாளரைப் பகிரங்கமாகக் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளதையும் வீடியோ படம் எடுத்து இணையத்திலும் சமூக வலைத்தளங்களிலும் இவ்வியக்கத்தினர் பரப்பிவருகின்றனர். இவற்றின்மூலம், தங்களை உண்மையான இஸ்லாமிய விடுதலை இயக்கமாகச் சித்தரித்துக் கொண்டு தங்களை யாராலும் வெல்ல முடியாது என்ற பிரசாரத்துடன் இணையத்தின்மூலமாக சன்னி முஸ்லிம்களை இவ்வியக்கத்தினர் ஈர்க்கின்றனர்.

இவற்றைக் கண்டு சில சன்னி முஸ்லிம்கள், இது நம்ம ஆளு என்று இந்த இயக்கத்தினரை ஆதரிப்பதோடு, ஏதோவொரு வகையில் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையிலான அரசாட்சி உலகில் உதயமாகியிருப்பதைப் புதிய நம்பிக்கையாகவும் பார்க்கின்றனர்.

இஸ்லாம்தான் ஒரே தீர்வு என்று இந்தியாவிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சில சன்னி முஸ்லிம் இளைஞர்கள் இந்த ஐ.எஸ். படையில் இணைந்துள்ளதோடு, தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தில் 26 இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற முத்திரை பதித்த டி-சேர்டுகள் அணிந்து புகைப்படம் எடுத்து அதனை பேஸ்புக்கில் வெளியிட்டுத் தமது ஆதரவைக் காட்டியுள்ளனர். "எங்களை மிகவும் கண்ணியமாக நடத்தினர். எங்கள்மீது ஐ.எஸ். இயக்கத்தினரின் விரல்கள்கூடப் படவில்லை" என்று ஈராக்கிலிருந்து மீண்டு வந்த இந்தியச் செவிலியர்கள் அளித்த பேட்டியைக் குறிப்பிட்டு, இஸ்லாத்தின் நெறிப்படி "நடப்பவர்கள்தான் பெண்களைக் கண்ணியமாக" நடத்துவார்கள் என்றும், ஐ.எஸ். இயக்கத்தினர் இஸ்லாமிய மார்க்க நெறிப்படி நடக்கும் புனிதப் போராளிகள் என்றும் சில சன்னி மார்க்க முஸ்லிம்கள் இந்த இயக்கத்தினரை ஆதரிக்கின்றனர்.

இஸ்லாமிய நெறிப்படி நடப்பதாக ஐ.எஸ். இயக்கத்தினர் விளம்பரப்படுத்திக் கொண்டபோதிலும், இந்த இயக்கம் மேற்காசிய முஸ்லிம் மக்களின் விடுதலைக்கான, முன்னேற்றத்துக்கான இயக்கமே அல்ல. கடந்த இருபது ஆண்டுகளாக முஜாஹிதீன்கள், தலிபான்கள், அல்கொய்தாக்கள் எனப் பல்வேறு இஸ்லாமிய இயக்கங்கள் உருவாகியுள்ள போதிலும், தாங்கள்தான் உண்மையான இஸ்லாமிய நெறிப்படி நடப்பவர்கள் என்று அவை கூறிக்கொண்ட போதிலும், ஆப்கானில் தாலிபான்கள் ஆட்சி செய்தபோதிலும் இத்தகைய இயக்கங்களால் ஏகாதிபத்தியத்தையோ, காலனியாதிக்கத்தையோ வீழ்த்த முடியவில்லை.

இக்குறுங்குழுவாத சன்னி மார்க்கப் பயங்கரவாத இயக்கங்கள் அமெரிக்காவை எதிர்ப்பதைப் போலக் காட்டிக் கொண்டாலும், பல நாடுகளில் அமெரிக்காவின் கூலிப்படையாகவே இயங்கியுள்ளன.

1970-களில் எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய நாடுகள் அரபு தேசியவாத முழக்கத்துடன் பெயரளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பைக் காட்டின. ஆனால் இஸ்லாமிய சர்வதேசியம் பற்றிப் பேசும் இத்தகைய இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களோ, ஏகாதிபத்தியங்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் கூட்டுச்சேர்ந்து தமது நிலையை வலுப்படுத்திக் கொண்டு, கூட்டுக்கொள்ளையில் ஈடுபடுவதோடு, பெயரளவுக்குக்கூட ஜனநாயகமே இல்லாமல் அப்பட்டமான கொடுங்கோன்மையைத்தான் நிலைநாட்டின.

ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்ட தேசியத்தைக் கட்டியமைப்பதற்கான நோக்கமோ, அதற்கான அரசியல் - பொருளாதாரத் திட்டமோ, நடைமுறையோ இந்த இயக்கங்களிடம் இல்லை என்பதோடு, துருக்கியின் கமால்பாட்சாவும், எகிப்தின் நாசரும்; ஈராக்கின் சதாமும் மேற்கொண்ட பெயரளவிலான சமூக சீர்திருத்தங்களைக்கூட இத்தகைய இயக்கங்கள் கீழறுத்துப்போட்டன.

இவற்றின் விளைவாக, நாகரிகத்தால் முன்னேறிய மேற்காசிய சமூகம், பல நூற்றாண்டுகள் பின்னுக்கு. இழுக்கப்பட்டு இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்ட அவலம்தான் நடந்துள்ளது.

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர்- 25



## கட்டுக்குருந்தையில் கிறிஸ்தவர்களுடன் முறுகல்

தென்னிலங்கையின் களுத்துறை மாவட்டம் கட்டுக்குருந்த பிரதேசத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தது தெரிந்ததே.

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்குச் செல்லும் வழியில் வழிபாட்டுக்காக கிறிஸ்தவ திருவுருவச் சொரூபம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோது ஏற்பட்ட குழப்ப நிலைமைகளைத் தொடர்ந்தே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை அருகில் கூடியிருந்த சிங்கள ராவய உள்ளிட்ட பௌத்த அமைப்புகளைச் சேர்ந்த பிக்குகள் பொலிஸாரிடம் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுமாறு கூறியத் தொடர்ந்து பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சியடித்து, கண்ணீர்ப்புகையை பிரயோகித்தனர்.

### மாத்தறை, இஸ்ஸதீன் நகரிலுள்ள பள்ளிவாசலையும் முஸ்லிம் குடும்பங்களையும் வெளியேற்றுவோம். - சேனா எச்சரிக்கை

மாத்தறை, இஸ்ஸதீன் நகரிலுள்ள பள்ளிவாசலை மூடா விட்டால் நகரிலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்களை பகிஷ்கரிப்போம் என பௌத்த தேரர்கள் கடந்த 22ஆம் திகதி மிரட்டல் விடுத்தனர்.

13 முஸ்லிம் குடும்பங்களே வாழும் இஸ்ஸதீன் நகரில் பள்ளிவாசலொன்று அவசியமில்லை. அந்த பள்ளிவாசலை உடனடியாக மூடவும் எனவும் தேரர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு பள்ளிவாசல் மூடப்படா விட்டால் குறித்த நகரிலுள்ள 13 முஸ்லிம் குடும்பங்களையும் வெளி யேற்றுவோம். இதன்மூலம் பள்ளிவாசல் தானாக மூடப்படும் எனப் பௌத்த தேரர்கள் எச்சரித்தனர்.

1804ஆம் ஆண்டு காலப்பகுதியின் பிரபல தொழிலதிபரான மீராகாந்து இஸ்ஸதீன் என்பவர் இந்தப் பிரதேசத் திலுள்ள 85 ஏக்கர் காணியினை கொள்வனவு செய்து பராமரித்துவந்தார்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் மூன்று விகாரைகள் அமைப்பதற்கும் காணிகளை அவர் அன்பளிப்பு செய்ததாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இவரது 4ஆவது பரம்பரையின் காலப் பகுதி யில் அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் காணிக் கொள்கைக்கு அமைய 50 ஏக்கருக்கு மேல் காணி வைத்திருந்தமையினால் பிரபல தொழிலதிபரான மீராகாந்து இஸ்ஸதீனுக்கு சொந்தமான காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது.

பின்னர் இந்த காணி பொதுமக் களுக்கு விற்கப்பட்டது. இதன்போது பௌத்த மக்கள் அதிகமாக காணி-யினை கொள்வனவு செய்தனர்.

இதன்போது முஸ்லிம் மையவாடிக் காக ஒரு பகுதி காணியையும் பிரபல தொழிலதிபரான மீராகாந்து இஸ்ஸதீன் ஒதுக்கியிருந்தார்.

குறித்த காணியில் மூன்று ஜனாஸாக் கள் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும் குறித்த காணியும் சிலரினால் சுவீகரிக்கப்பட்டது.

மேலும் இந்தப் பிரதேசத்திற்கு தனவந்தர் இஸ்ஸதீனின் நினைவாக அரசாங்கத்தினால் இஸ்ஸதீன் நகர் எனவும் பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாறான நிலையில் தற்போது அங்கு சுமார் 17 முஸ்லிம் குடும்பங் கள் வாழ்ந்துவருகின்றனர். இவர்களின் நன்மை கருதி கடந்த 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறியளவிலான பள்ளிவாசலொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

பின்னர் கடந்த 2008ஆம் ஆண்டு நிரந்தர கட்டடமொன்றில் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டது. இதனையடுத்து

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

2012ஆம் ஆண்டு வக்பு சபையில் இந்த பள்ளிவாசல் பதிவுசெய்யப்பட்டது.

இவ்வாறான நிலையில் இந்த பள்ளிவாசலினை மூடுமாறு கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து சில தேரர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இதுதொடர்பில் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் எந்தவித முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் பிரதேசத்தில் சகவாழ்வினை ஏற்படுத்தும் முகமாக குறித்த பள்ளிவாசலினை மூடுமாறு புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சின் செயலாளர் எம்.கே.டி.எஸ். திசாநாயக்க உத்தரவிட்டிருந்தார்.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சின் 'செயலாளரின் சுற்று நிருபத்தினை மீறி இந்த பள்ளிவாசல்' நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடிதத்தில் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த பள்ளிவாசல் விடயத்தில் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சின் செயலாளர் எம். கே.டி.எஸ். திசாநாயக்க தலையிட முடியாது என வக்பு மேன் முறையீட்டு சபை அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில்தான் புத்த சாசன மற்றும் சமய விவகார அமைச் சின் செயலாளர் எம்.கே.டி.எஸ். திசா நாயக்க தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாத்தறை மாவட்ட செயலாளர், முஸ்லிம் சமய விவகார திணைக்கள பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.சமீல் நளீமி, ஜனாதிபதி யின் பௌத்த சமய விவகார மாத்தறை மாவட்ட இணைப்பாளர், மாத்தறை மாவட்ட பௌத்த தேரர்கள் சம்மேளன பொதுச் செயலாளர், இஸ்ஸதீன் நகரிலுள்ள விகாரையின் விகாராதிபதி உட்பட 60 பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இஸ்ஸதீன் நகர் பள்ளிவாசலின் பிரதிநிதிகளாக முஸ்லிம் சட்டத்தரணி களும் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் மூவரும் பங்குபற்றினார்.

சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீனின் வழிகாட்டலில் இளம் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தலைமையில் சட்டத்தரணிகளான றுஸ்தி ஹபீப், சப்ராஸ் ஹம்சா மற்றும் எம். இம்தியாஸ் ஆகியோருடன் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் ஹாஜி அஸ்லம் ஒத்மானும் கலந்துகொண்டார்.

எனினும், சட்டத்தரணிகள் இந்த கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு பௌத்த தேரர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். சட்டத்தரணிகள் கலந்துகொள்ள அனுமதிக்காவிட்டால் கூட்டத்தினை பகிஷ்கரிப்போம் என பள்ளிவாசல் நிர்வாக சபையின் தெரிவித்தனர்.

இதனையடுத்து சட்டத்தரணிகள் பள்ளிவாசல் சட்டரீதியானது என கூட்டத்தில் நிரூபித்ததுடன் இந்த கூட்டம் சட்டவிரோதமானது எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சட்டத்தரணிகளுக்கும் பௌத்த தேரர்களுக்கும் இடையில் பாரிய வாக்குவாதம் இடம்பெற்றது. இந்த வாக்குவாதம் முற்றியதை தொடர்ந்து,

"மாத்தறை, இஸ்ஸதீன் நகரிலுள்ள பள்ளிவாசலை மூடாவிட்டால் நகரிலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்களை பகி'கரிப்போம். 13 முஸ்லிம் குடும்பங்களே வாழும் இஸ்ஸதீன் நகரில் பள்ளிவாச லொன்று அவசியமில்லை. அந்த பள்ளிவாசலை உடனடியாக மூடவும். பள்ளிவாசல் மூடப்படாவிட்டால் குறித்த நகரிலுள்ள 13 முஸ்லிம் குடும்பங்களையும் வெளியேற்றுவோம்.

இதன்மூலம் பள்ளிவாசல் தானாக மூடப்படும். இதற்குரிய அனைத்து நடவடிக்கையினையும் நாங்கள் மேற் கொள்வோம். இதற்கு தேவையான இளைஞர் சக்தி எம்மிடமுள்ளது. தம்பிலாவிற்கு இங்கு எந்த அதிகாரமும் இல்லை" என பௌத்த தேரர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம்களுக்கு எதிராக தேவை யாற்ற வார்த்தை பிரயோகங்களை பௌத்த தேரர்கள் பயன்படுத்தியமை யினால் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பில் கூட்டத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் கூட்டத்திலிருந்து வெளியேறி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### பொதுபலசேனா பா.ஜ.க விடம் உதவிகோரல்

பௌத்த, இந்து மக்களை அழிக்கும் இனவாத செயற்பாடுகளை தடுத்து தமிழ், சிங்கள மக்களைப் பாதுகாப்பதில் நாம் அக்கறை செலுத்துவோம். இந்த விடயங்களுக்கு இந்தியாவும் எமக்கு துணை நிற்கவேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பினர் பா.ஜ.க.வின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என ஊடக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை இலங்கை வந்துள்ள பா.ஜ.க.வின் தேசிய பொதுச் செயலாளர் முரளிதர்ராவ், கட்சியின் வெளிவிவகார அழைப்பாளர் விஜய் ஜொலி ஆகியோர் கடந்த வாரம், பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர். கிருலப்பனையில் உள்ள பொது பலசேனாவின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் பொதுபலசேனாவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்த விதானகே கருத்து தெரிவிக்கையில், பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர், தேசிய அமைப்பாளர் விதாரந்ததீய நந்ததேரர் ஆகியோர் மேற்கொண்டிருந்தோம்.

இந்திய - இலங்கை உறவு முறை மிக நீண்டகாலமாக உள்ளது அரசியலுக்கு அப்பால் கலாசார பொருளாதார ரீதியிலும் இரு நாடுகளும் நல்ல உறவினை மேற்கொண்டு வருகின்றது.

அதேபோல் இந்து- பௌத்த உறவு முறையும் மிக நல்ல நிலையில் நிலவு கின்றது. எனவே, இவற்றினை மேலும் பலப்படுத்தவேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் நல்ல உறவினை ஏற்படுத்தி வருகின்றனர். இது மேலும் பலமடைய வேண்டும். அதேபோல் பௌத்த - இந்து தொடர்புகளும் நெருக்கமானவையே.

ஆகவே, தொடர்ந்தும் இந்திய - இலங்கை உறவு முறையானது அரசியல், கலாசார மத அடிப்படையில் பலமடையவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகளை பெற்றுத் தருவதில் பொதுபலசேனா துணை நிற்கும்.

அதேபோல் இலங்கையில் பௌத்த தமிழ் மக்களை அழிக்கும் இனவாத செயற்பாடுகளை தடுத்து தமிழ் - சிங்கள மக்களை பாதுகாப்பதிலும் நாம் அக்கறை செலுத்துவோம்.

எனவே, இந்தியாவும் இவ்விடயங் களில் எமக்கு துணை நிற்கவேண்டும் எனவும், நாம் அவர்களிடம் எடுத்துரைத் துள்ளோம் எனவும் அவர் தெரிவித்த தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பொதுபலசேனாவுடன் சேர்ந்து செயற்படுவோம். – அஸின் விராது

இனிவரும் காலங்களில், பொதுபல சேனா அமைப்புடன் மியன்மாரின் 969 அமைப்பு ஒன்றிணைந்து செயற்படும் என கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அந்த அமைப்பின் தலைவரும் நிறுவனருமான அஸின் விராது கூறினார்.

சுகதாச உள்ளக அரங்கில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுபலசேனா அமைப்பின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

பொதுபலசேனா அமைப்பின் இந்த பௌத்த தேசியு மாநாடு பௌத்தர் களான எமக்கு மிகவும் முக்கியமானது.

(தொடரும்)



மழைக்காலம் தொடங்கி விட்டால் தும்மல், மூக்கடைப்பு, மூக்கு ஒழுகுதல் என்று பல தொல்லைகள் வரிசையில் வந்து நிற்கும்.

இவற்றில் தும்மல் என்பது சாதாரண உடலியல் விடயம் தான். காற்று தவிர வேறு எந்த அந்நியப் பொருள் மூக்கில் நுழைந்தாலும், மூக்கு அதை அனுமதிக்க மறுக்கிறது. அதற்கான எதிர்ப்பு செயல்தான், தும்மல்.

நமது நாசித் துவாரத்தில் சிறிய முடியிழைகள் நிறைய இருக்கின்றன. நாம் உள்ளிழுக்கும் காற்றில் கண்ணுக்குத் தெரியாத தூசு, துகள் இருந்தால் அவற்றை வடிகட்டி அனுப்புவது தான் இவற்றின் வேலை. இங்கு

# தும்மல் ஏற்படுவது ஏன்?

ஒரு மென்மையான சவ்வுப் படலம் உள்ளது. இது நிறமற்ற திரவத்தைச் சுரக்கிறது.

அளவுக்கு அதிகமாகத் தூசியோ, துகளோ மூக்கில் நுழைந்துவிட்டால், இந்தச் சவ்வுப் படலம் தூண்டப்படுகிறது. உடனே அவற்றை வெளித்தள்ளும் முயற்சியில் சவ்வுப் படலம் அதிகளவில் நீரைச் சுரக்கிறது.


இதன் தூண்டுதலால், நுரையீரல், தொண்டை வாய் மற்றும் வயிற்றுத் தசைகள் ஒன்றுசேர்ந்து சுவாசப் பாதையில் உள்ள காற்றை அழுத்தமாகவும் வேகமாகவும் மூக்குவழியாக வெளித் தள்ளுகின்றன. இதுதான் தும்மல். இப்படித் தும்மும்போது அந்த அந்நியப்பொருள் வெளியேற்றப்படுகிறது. ஒரு தும்மலின் வேகம் மணிக்கு 160 கி.மீ. சாதாரண தும்மல் சில நிமிடங்களில் நின்றுவிடும். சிலர் தொடர்ச்சியாக நூறு முறைகூடத் தும்முவார்கள். ஒரு கைத்துண்டு நனைகின்ற அளவுக்கு மூக்கிலிருந்து நீர்கொட்டும், மூக்கு அரிக்கும். இதற்கு 'ஒவ்வாமை தும்மல்' என்று பெயர்.

ஒவ்வாமைதான் இதற்கு அடிப்படைக் காரணம். குறிப்பாக வீட்டுத் தூசு, ஒட்டடை, பருத்தி, பஞ்சு, சணல், சாக்கு, கயிறு, கம்பளி, சுண்ணாம்பு, உமி போன்றவற்றின் தூசு மூக்கில்பட்டதும் அடுக்கு தும்மல் தொடங்கிவிடும்.

அதுபோல் குளிர்ந்த காற்று, பனி, ஊதுவத்தி, சாம்பிராணி, கற்பூரம், கொசுவத்தி போன்றவற்றின் புகை, வாகனப் புகை, தொழிற்சாலை புகை, பூக்களின் மகரந்தங்கள், பார்த்தீனியச் செடியின் முள்ளிழைகள், பூஞ்சைகள் முதலியவை அடுக்கு தும்மலுக்கு வழிவிடும்.

தும்மலை நிறுத்துவதற்கு, ஒரு தேக்கரண்டியில் சமையல் உப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் எட்டில் ஒரு பங்கு உப்பை 200 மி.லி. இளம்சூடான தண்ணீரில் கலந்துகொள்ளுங்கள். இப்போது சுத்தமான துணியை அந்தத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்துகொண்டு, திரிபோலச் சுற்றிக்கொண்டு, ஒவ்வொரு நாசித் துளையிலும் விட்டு மூக்கைச் சுத்தப்படுத்துங்கள். தும்மல் நிற்கும்.

# கோழி பிரியர்களுக்கு எச்சரிக்கை!



பலருக்கும் பிடித்தமான அசைவ உணவு பிரொய்லர் கோழி. சில இடங்களில் கோழிகளுக்கு தீவனத்துக்குப் பதிலாக அன்ட்டி பயோட்டிக் ஊசிபோட்டு வளர்க்கப்படுகிறது. இந்த கோழிகளை சாப்பிடுவதால் காய்ச்சலுக்கும் மற்ற பிரச்சினைகளுக்கும் நாம் சாப்பிடும் அன்ட்டி பயோட்டிக் மருந்துகள் செயலிழந்து போகலாம் என்பதை ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

கோழிகள் வேகமாக வளர்வதற்காகவும், முட்டை பொரிக்கும்போது தொற்றுநோய்களைத் தடுப்பதற்காகவும் அன்ட்டிபயோட்டிக் மருந்துகள் அவற்றின் உடலில் செலுத்தப்படுகின்றன. இந்த மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்வதால் எந்த மருந்தாலும் எதிர்க்கமுடியாத பக்ரீரியாக்கள் உருவாகும்.

இந்த பக்ரீரியாக்கள் உள்ள கோழிகளைச் சாப்பிடும் மனிதர்களுக்கும் இவை நேரடியாகக் கடத்தப்படும். வளர்சிதை மாற்றம் அடையாத பக்ரீரியாக்கள் இறைச்சியில் இருந்தால், வயிற்றில் உள்ள நுண்ணுயிர்களைத் தாக்கும். கோழிப் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் ஆன்ட்டிபயாடிக்குகள், மனிதப் பயன்பாட்டுக்கான வீரியத்தன்மை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் வாங்கும் கோழியில் பயன்படுத்தாமல் தூக்கி எறியும் பாகங்கள் என்ன ஆகின்றன? மேலே சொன்ன ஆபத்தான பக்ரீரியாக்கள் அவற்றின் சிறகுகள், எலும்புகளில் இருக்கும். அவை மண், நிலத்தடி நீர், நீர்நிலைகளில் கலக்கும். இதன்மூலம் இந்த பக்ரீரியாக்கள் சுற்றுச்சூழல் முழுவதும் பரவும் ஆபத்து உருவாகிறது.


தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே

A/L, O/L மற்றும்
புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன் தினமும்
வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான்
எழுதும்
நாட்டு நடப்பு
குறிப்புகளும்
விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...



வீட்டிலிருந்து புறப்படும் போதே மெய்யரசன் இந்த வேலையாவது கிடைத்தால் வீட்டில் பணத்தால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளித்து விடலாம் என நினைத்தான்.



# வானம் தூரமில்லை

மெய்யரசன் கணினித் துறையில் எம்.இ. பட்டம் பெற்றிருந்தான்.

அவன், வேலை தேடவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டான். வேலை கிடைக்கும்வரை மாணவர்களுக்கு ஆங்கில மொழிக்கான தனிப்பயிற்சி வகுப்பை ஏற்படுத்தினான். அதன்மூலம் வரும் வருமானத்தில் தன் வாழ்க்கையை ஒவ்வொரு நாளாகக் கடத்தினான்.

பல நிறுவனங்களுக்கு விண்ணப்பங்கள் போட்டபடி இருந்தான். ஒரு நாள் ஒரு நிறுவனத்திலிருந்து நேர்காணலுக்கு வரும்படி அழைப்புக் கடிதம் வந்தது. மெய்யரசனின் அம்மாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த வேலை கிடைச்சிருமா?

கிடைச்சிரும்னுதான் நினைக்கிறேன். என்று சொல்லிவிட்டு, அம்மாவின் கையைப் பிடித்து கையைப் பார்த்த மெய்யரசன், அம்மா... உன் கை இப்படிக் காய்ச்சிப் போய்க் கிடக்குது!

அதுக்கென்ன இப்போ... உனக்கொரு வேலை கிடைச்சா இதெல்லாம் மறைஞ்சு போயிடும்.. போயி உன் வேலையைப் பாரு என்றாள் அவன் கன்னத்தை வருடியவாறு.

அவள்தான் என்ன செய்வாள்? மேல்நிலை வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் தன் தம்பி விசயனைப் படிக்க வைக்கவேண்டும் அக்கா ஜெயசித்ராவிற்குப் போடவேண்டிய நகையை இன்னும் போடவில்லை, அவள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தாள். அப்பா கூலிவேலைக்குச் சென்றாலும் வீட்டு விஷயங்களைப் பார்ப்பது அம்மாதான்.

மெய்யரசன் தன் படிப்பிற்கு வாங்கிய கல்விக் கடன் தொகையைக் கட்ட வேண்டும். இதையெல்லாம் சரிசெய்ய மெய்யரசன் தனக்கு எப்பொழுது வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால், அவனுடைய எண்ணம் ஈடேற இன்னும் பல நாள்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. மெய்யரசன், தான் செய்துவந்த தனிப்பயிற்சியில் வரும் ஊதியத்தில் தனது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவே பற்றாக்குறையாக இருந்தது. அவன் வீட்டிற்கு அருகில் புதியதாகத் திறக்கப்பட்ட ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்ற ஆரம்பித்தான்.

ஒரு நாள் செய்தித்தாளைப் பார்த்தபோது ஒரு மிகப் பெரிய நிறுவனத்திலிருந்து நிர்வாக அதிகாரிக்கான வேலைக்கான நேர்காணலுக்கு அழைப்பு வந்திருந்தது.

இந்த வேலைக்கு விண்ணப்பித்தால் நிச்சயம் தனக்கு இந்த வேலை கிடைத்துவிடும் என்று உறுதியுடன் நம்பினான்.

நேர்காணலுக்கான நாளும் வந்தது. அதற்காக முன்பே தயாராக எடுத்து வைத்திருந்த ஆடையைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான். நடந்த அனைத்து எழுத்துத் தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றான். இனி மீதியுள்ளது நேர்முகத் தேர்வு மட்டுமே. அதற்காகக் காத்திருந்தான். அன்று மாலை அவனை நேர்காணலுக்கு அழைத்தனர். மிகவும் ஆவலுடன் நேர்காணலுக்கான அறைக்குச் சென்றான்.

அங்கு நேர்காணலுக்காக இருவர் அமர்ந்திருந்தனர். அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இருவர்தான் இருக்கிறார்கள். எளிதாக பதில் கூறிவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினான். உள்ளே நுழைந்த மெய்யரசனை நாற்காலியில் அமரும்படி கூட கூறவில்லை. இருந்தபோதும் அதையும் பொருட்படுத்தாமல் நின்றபடியே அவர்களுக்குத் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்தான்.

அவர்களில் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெரியவர் மெய்யரசனைப் பார்த்து, நீயெல்லாம் இந்த வேலைக்கு விண்ணப்பிக்கலாமா? என முதலும் கடைசியுமாக வினவினார்.

ஏன்...? நான் எல்லாத் தேர்வுகளிலும் முதல் மதிப்பெண் பெற்றுள்ளேனே!

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நீ... (அவனுடைய ஜாதியையும் கூறி) உன்னால எல்லோரையும் கென்ட்ரோல் பண்ணமுடியாது. இந்தக் கம்பெனியையும் மேலே வளரவைக்க முடியாது. நீ போகலாம்.

மெய்யரசன் விக்கித்துத்தான் போனான். பின் ஏன் என்னை நேர்காணலுக்கு அழைத்தீர்கள் என்று கேட்கக்கூடத் தோன்றாமல் தன்னுடைய சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

வீட்டிற்குவரும் வழியில் வீட்டிற்குச் செல்ல மனமில்லாமல் ஓர் இடத்தில் அமர்ந்து நடந்த நிகழ்ச்சியை எண்ணி வருத்தம் அடைந்தான்.

என்னை அழைத்து அவமானப்படுத்தி விட்டனரே! இந்த ஜாதியில் பிறந்தது என் குற்றமா? இன்னும் கீழ்ஜாதி, மேல்ஜாதி என்னும் வேறுபாடு இன்னும் ஒழியவில்லையே! எல்லாத் தேர்வுகளிலும் முதல்நிலையை அடைந்தும் என்னுடைய பிறப்பைக் காரணம் காட்டி, இந்த வேலையை எனக்குக் கொடுக்க மறுத்தது மட்டுமின்றி, தன்னைக் கேவலப்படுத்திவிட்டார்களே! என்றும் வருத்தப்பட்டான்.

இன்றும் இந்த ஜாதிப் பேய் ஒரு சிலரின் மனதைவிட்டு இன்னும் அகலவில்லையே!. வேதகாலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் இந்த ஜாதிப் புற்றுநோய் இன்னும் வேர்விட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு ஒரு விடிவே இல்லையா? நாங்கள் இப்படியே மனநோயாளிகளாக இருந்து சாகவேண்டியது தானா! வயிற்றுப் பிழைப்பிற்காக அடங்கி அடங்கி செத்துப்போன என் முன்னோர்களின் அடிமை உணர்வு தொடர்ந்து என் இரத்தத்திலும் ஊறித்தான் இருக்கிறதோ! அதனால்தான் என்னால் நேர்காணுபவர்களை எதிர்த்துத் துணிவுடன் எதுவும் கேட்க முடியாமல் போய்விட்டதோ? நான் இவ்வளவு படித்தும் என் குடும்பத்தை நல்ல முறையில் வைத்துக் கொள்ள முடியவில்லையே! இது யார் செய்த குற்றம்? மனிதனின் சுயலாபத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த நிலை எப்பொழுது ஒழியும்? ஒழிந்துவிட்டது என்றார்களே!

இது இன்றுவரை நீறுபூத்த நெருப்பாகத்தான் உள்ளது. இனி வருங்காலம் ஒரு கேள்விக்குறியாகி விட்டதே! என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்தவன், தான் உட்கார்ந்திருந்த இடத்தின் எதிரே ஒரு வீட்டின் வாசலில் ஒரு குழந்தை தவழ்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தான்.

அக்குழந்தை தன் அருகில் இருக்கும் முறுக்கை எடுக்க முயற்சி செய்தது. அதனுடைய அம்மா கொஞ்ச தூரம் தள்ளி நின்றிருந்தாள். அந்த முறுக்கை எடுக்கத் தவழ்ந்து கொண்டிருந்த அக்குழந்தை, அருகில் இருந்த சுவரைப் பிடித்துக் கொண்டு எழுந்து நிற்க முயற்சி செய்யும்போ[illegible] எழுந்த அக்குழந்தையால் நிற்க முடியாமல் கீழே விழுந்தது.

அக்குழந்தையைத் தூக்க அதன் அம்மா ஓடி வருவாள் என்று மெய்யரசன் அந்த அம்மாவை நோக்கினான்.

ஆனால், அந்த அம்மா நின்றிருந்த இடத்தைவிட்டு நகராமல் அக்குழந்தையைப் பார்த்தபடி இருந்தார். அக்குழந்தை மீண்டும் எழுந்து நிற்க முயற்சி செய்தது. இம்முறை அழகாக எழுந்து நின்றது. பின் இலேசாகச் சிரித்தது. அதைப் பார்த்த அக்குழந்தையின் தாய் ஓடிவந்து முறுக்கை எடுத்துக் கொடுத்துவிட்டு அக்குழந்தையை வாரியணைத்து முத்தம்கொடுத்து அதன் உச்சிமுகர்ந்தாள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த மெய்யரசனுக்குத் தலையில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. நாமே ஒரு சிறிய நிறுவனத்தை நிறுவி நமது அறிவையும் உழைப்பையும் ஈடுபடுத்தி முன்னேறி, நம்மைப்போன்ற நிலையில் இருப்பவர்கள் பலருக்கு வேலை கொடுக்கலாமே, என்னைப் புறக்கணித்தவர்கள் முன்னால் ஜெயித்துக் காட்டுவேன் என்று மனத்திடத்துடன் துள்ளிக் குதித்து எழுந்தான். அக்குழந்தை அவனைப் பார்த்துக் கையசைத்தது.


**— மீனாட்சி —**



"ஏன் உங்க வீட்டுக்காரர் இரண்டு, மூன்று வாரமாய் உப்புச் சப்பில்லாமல் கதை எழுதுறார்?"



"ஆமாண்டியம்மா... உடம்பு சரியில்லாமல் பத்தியமாய் டாக்டர். அவரை இருக்கச் சொல்லியிருக்கிறார். எதிலேயும் உப்பு சேர்க்க வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்."



ரேடியோ கேட்டுக் கொண்டிருப்பவர்: ரொம்ப மோசம்! இந்தப் பாட்டெல்லாம் யார் கேட்டார்கள்?

ரேடியோ: இதுவரை நடைபெற்றது, "நீங்கள் கேட்டவை!"



ஜோசப் வாஸ்

தமிழர் பண்பாட்டை மதித்து மொழி, இன வேறுபாடுன்றி பணிபுரிந்தவர்

# ஜோசப் வாஸ் அடிகள் புனிதராகின்றார்

**அருட்பணி. எஸ்.எயின்சிலி றொஷான்**



இலங்கை திருச்சபையின் தூணாக கருதப்படும் அருளாளர் ஜோசப் வாஸ் இலங்கையின் முதல் புனிதர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாரம் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதியில் இலங்கைக்கு திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அருளாளர் ஜோசப் வாஸ் புனிதர் பட்டம் கொடுக்கவுள்ளார்.

வழக்கமாக புனிதர் பட்டம் வழங்குவதற்கான நிபந்தனைகளுள் ஒன்று யாருக்கு அப்பட்டம் வழங்கப்படவிருக்கின்றதோ அவரை நோக்கி வேண்டுதல் செய்ததின் வழியாக குறைந்தது இரு புதுமைகள் நிகழ்ந்திருக்க வேண்டும். அப்புதுமைகள் உண்மையாகவே இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டு கடவுளின் அருளால் நிகழ்ந்தவை என்று திருச்சபை அதிகாரிகளாலும் விஞ்ஞானிகளாலும் ஒப்புதல் பெறவும் வேண்டும். அருளாளர் ஜோசப் வாஸ் பேரில் முதலாவது புதுமை நிகழ்ந்த நிலையில் அவருக்கு புனிதர் பட்டம் அளிப்பதற்கு இரண்டாம் புதுமைக்காக காத்திருக்க வேண்டாம் என திருத்தந்தை பிரான்சிஸ் விதிவிலக்கு வழங்கியுள்ளர். இவ்வாறு பல புனிதர்களை விரைவில் ஆசிய மண்ணிற்கு வழங்கவுள்ளதாகவும் திருத்தந்தை உறுதிமொழி வழங்கி உள்ளார்.

இலங்கையின் முதல் புனிதர் என வர்ணிக்கப்படும் அருளாளர் ஜோசப் வாஸ் யாழ்ப்பாணத்தில் தான் முதன் முதலாக தமது புனித பாதங்களை பதித்தார் என்பது எமக்குப் பெருமை. கிறிஸ்தவ விசுவாசத்தை இலங்கையில் பரப்புகையில், எம் தமிழ் பண்பாட்டு விழுமியங்களை மதிக்க வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்து தமிழ் சிங்கள மொழிகளையும் கற்றுக்கொண்டார். மொழி இன வேறுபாடுகளைக் களைந்து கடவுள் நம்பிக்கையில் மக்கள் வளரவேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாகவும் இருந்தது.

யோசப் வாஸ் அடிகள் இந்தியாவின் கோவாவில் பிறந்தவர். இவர் இலங்கையின் கத்தோலிக்க நம்பிக்கை ஒல்லாந்தரால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில் இலங்கைக் கத்தோலிக்கரை, விசுவாசத்தில் உறுதிப்படுத்தி அவர்களுக்குப் பணிபுரிய வந்த கத்தோலிக்கக் குருவாவார். இவர் ஈழத்தில் யோசப் வாஸ் முனீந்திரர் எனவும் அழைக்கப் பட்டார்.

### யாழ்ப்பாணம் வருகை

கி.பி.1685ஆம் ஆண்டில் கோவாவின் தூயபிலிப்பிநேரியா துறவற சபையில் (Oratary Of St. Philip Neri) இணைந்த யோசப் வாஸ் அடிகளார் 1687 ஆம் ஆண்டு ஏப்ரலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அப்போது இலங்கையில் ஆட்சியில் இருந்த ஒல்லாந்தர் கால்வினி சத்தைப் பின்பற்றியவர்கள். எனவே அவர்கள் கத்தோலிக்கரையும் குருமாரையும் அக்காலத்தில் வன்மையாக துன்புறுத்தினர். பாடசாலைகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தனர். இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்கு சில்லாலை ஊர் மக்கள் புகலிடம் வழங்கினர். அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு தனது சேவையை வழங்கினார். பின்னர் அவர் மாறுவேடத்தில் கால்நடையில் 24 ஆண்டுகளாக வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று கத்தோலிக்க விசுவாசத்தை பரப்பினார்.

### கண்டிக்கு விஜயம்

1693 இல் கண்டிக்குச் சென்ற ஜோசப் வாஸ் அடிகளார் அங்கு றோமன் கத்தோலிக்க மதத்தை மீள ஸ்தாபிக்க பெரும் முயற்சி செய்தார். இதனால் அவர் அங்கு இரண்டு ஆண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது. கண்டியில் இருந்தே தனது சேவையைத் தொடர்ந்த ஜோசப் வாஸ் அடிகள் 1696 இல் இலங்கையின் குருமுதல்வராக (Vicar - General) பணி நியமனம் பெற்றார். 1710 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி தூய வியாகுல மாதா கோவில் வளவில் சிறு ஓலைக் கோயில் கட்டி பலி ஒப்புக்கொடுக்கும்போது காட்டிக் கொடுக்கப்பட்டு மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். 1711 ஆம் ஆண்டில் கண்டியில் காலமானார்.

### தமிழருக்கும் சிங்களவருக்கும் பணி

அருளாளர் ஜோசப் வாஸ் இலங்கை நாட்டில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. வண.யாக்கோமே கொன்சால் வேஸ் திருவிவிலியத்தை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்ப்பதற்கு உந்துதல் கொடுத்தவரும் மொழிபெயர்ப்புக்கு பிரதான காரணியுமாக அருளாளர் ஜோசப் வாஸ் விளங்கினார். இரு மொழிகளிலும் மக்கள் கடவுளை வழிபடுவதற்கான நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும் வண. யாக்கோமே கொன்சால்வேஸ் இயற்றவும் காரணமானார் அருளாளர் ஜோசப் வாஸ். மருதமடு அன்னை தேவாலயத்தை புதுப்பித்துக் கட்டுவதற்கு யோசப் வாஸ் அடிகள் துணைபுரிந்தார். இன்று இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் அருளாளர் யோசப் வாஸ் 1995. ஜனவரி 20 இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கொழும்பு வந்திருந்தபோது ஜனவரி 21 இல் காலி முகத்திடலில் இடம்பெற்ற திருச்சடங்கின் போது யோசப் வாஸ் அடிகளார் அருளாளர் நிலைக்கு உயர்த்தப் பெற்றார். அருளாளர் ஜோசப் வாஸுக்கு புனிதர் பட்டம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு வத்திக்கான் தலைமையகத்தில் இருந்து 2014,செப்டம்பர் 17ம் நாள் வெளியிடப்பட்டுள்ளது.

---

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜெ.ஜெ....

இவ்வழக்கை விசாரிக்க தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி நல்லம்ம நாயுடு தலைமையில் 15 காவல் ஆய்வாளர்கள் விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப் புட்டனர். அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் ஆகியோர் இவ்வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டனர்.

சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கில் முதல்கட்ட விசாரணை, குற்றப்பத்திரிகை தாக்கல், சாட்சிகள் விசாரணை ஆகியவை 2003ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகனின் மனுவைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் கடந்த 2003ம் ஆண்டு நவம்பர் 18ம் திகதி இவ்வழக்கை பெங்களூருக்கு மாற்றி உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழில் இருந்த ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல், பிறழ் சாட்சிகளின் விசாரணை, குறுக்கு விசாரணை, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தல் மற்றும் இறுதிவாதம் ஆகியவை கடந்த 11 ஆண்டுகளாக நடைபெற்று வந்தன.

வழக்கு குறித்த அனைத்து விசாரணைகளும் கடந்த ஒகஸ்ட் 28-ம் திகதி நிறைவடைந்ததால், செப்டெம்பர் 20-ம் திகதி தீர்ப்பு வெளியாகும் என சிறப்பு நீதிபதி ஜோன் மைக்கேல் டி குன்ஹா உத்தரவிட்டார்.

இதனிடையே இஷட் பிளஸ் பாதுகாப்பு பிரிவில் இருக்கும் ஜெயலலிதா தனக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கோரியதால் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் பரப்பன அக்ரஹாரா மத்திய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள காந்திபவனுக்கு மாற்றப்பட்டது.

### எந்தெந்த பிரிவுகளில் வழக்கு:

சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மீது அவர் முதல்வராவதற்கு முன்பாக (1.07.1991 இற்கு முன்பு) அவருடைய சொத்து மதிப்பு ரூ.2 கோடியே 1 இலட்சத்து 83 ஆயிரத்து 956.53 ஆகும். ஆனால் வழக்கு காலத்திற்கு பிறகு (1.07.1991 இற்கு முதல் 30.04.1996 வரை) ரூ.66 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 395.59 ஆக சொத்து அதிகரித்துள்ளது.

எனவே ஜெயலலிதா தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்துள்ளார். மேலும் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சொத்து குவிக்க உடந்தையாக இருந்துள்ளனர்.

எனவே அவர்மீது ஊழல் தடுப்பு சட்டம் 13(1) (ஈ) பிரிவில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்தது மற்றும் 13(2) அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்கு உடந்தையாக இருந்தது மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 120(பி) கூட்டு சதி தீட்டியது ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

### இரு தரப்பு வாதம்:

ஜெயலலிதாவின் வருமானத்தை விவரித்து அவரது வழக்கறிஞர் பி.குமாரும், அதனை மறுத்து அரசு வழக்கறிஞர் பவானி சிங்கும்" சுமார் 100 மணிநேரம் வாதிட்டுள்ளனர்.

இதேபோல சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரின் வழக்கறிஞர்கள், "ஜெயலலிதாவிற்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை. இது தி.மு.க.வின் அரசியல் பழிவாங்கும் வழக்கு" என சுமார் 90 மணிநேரம் வாதிட்டு உள்ளனர். சுமார் 5ஆயிரம் பக்கத்துக்கு எழுத்துமூல அறிக்கையும் தாக்கல் செய்துள்ளனர்.

சொத்து குவிப்பு வழக்கில் மூன்றாம் தரப்பான அன்பழகன் தனது வாதமாக 445 பக்கங்களில் எழுத்துமூலமான ஆதாரங்களை அடுக்கியிருந்தார்.

### சுப்பிரமணியம் சாமி!

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை 1996-ம் ஆண்டு. தி.மு.க அரசு-தான் போட்டது என்றாலும்கூட அதற்கான பிள்ளையார் சுழியைப் போட்டவர் இந்த சாமிதான். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோதே அவரது சொத்து குவிப்பு தொடர்பான அத்தனை ஆதாரங்களையும் கோப்புகளாக்கி அப்போதைய ஆளுநரிடம் வழங்கி ஜெயலலிதாமீது வழக்குத் தொடர அனுமதி கோரியிருந்தார் சாமி.

உண்மையில் ஜெயலலிதா மீதான பிற வழக்குகளை திமுக அரசுதான் போட்டது. அதை சாமி போடவில்லை. எனவே, அந்த வழக்குகளில் ஜெயலலிதா எளிதாக வெளியே வந்துவிட்டார். ஆனால் சாமி போட்ட முடிச்சை அவிழ்க்கத்தான் அவரால் முடியாமல் போய்விட்டது.

### சாமி - ஜெயா நட்பும் பகையும்

ஒரு காலத்தில் ஜெயலலிதாமீது நட்பாகத்தான் இருந்தார் சாமி. ஜெயலலிதாவும்கூட தி.மு.க.வுக்கு எதிராக சாமியைத் தான் பயன்படுத்திவந்தார். ஆனால், பின்னர் திடீரென இருவரும் எதிரியாகிவிட்டனர்.

டான்சி ஊழல் விவகாரத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்குத் தொடர அப்போதைய ஆளுநர் சென்னா ரெட்டி மூலம் அனுமதி வாங்கிய சாமியைப் பார்த்து அனைவரும் அதிர்ந்துபோய் நின்றனர். அதுதான் சாமிக்கும் பெரிய ஹைலைட்டான அரசியல் வெற்றியாகும்.

ஆனால், அதன்பின்னர் அதேவேகத்தில் பல்டி அடித்து மீண்டும் ஜெயலலிதாவுடன் நட்பானார் சாமி. அதுவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் ஜெயலலிதாவின் தூதராகவும் மாறினார் சாமி. வாஜ்பாய் அரசில் ஜெயலலிதா இணைவதற்கு சாமிதான் முக்கிய காரணமும்கூட.

அதேபோல நாடாளுமன்றத் தேர்தலில் மதுரை தொகுதியில் அ.தி.மு.க சார்பில் சாமியை நிறுத்தி வெற்றிபெறவும் வைத்தவர் ஜெயலலிதா. இதன்மூலம் போயஸ் தோட்டத்தின் ராஜகுரு என்ற அந்தஸ்துக்கும் உயர்ந்தவர் சாமி. உண்மையில் சாமியை அரசியல் ரீதியாக வளர்த்துவிட்டவர் ஜெயலலிதா என்பதில் சந்தேகமே இல்லை.

ஆனால் வாஜ்பாய் ஆட்சியை மிகக் குறுகிய காலத்தில் கவிழ்த்த ஜெயலலிதா மீது கோபம்கொண்டார் சாமி. மீண்டும் இருவரும் பூனையும் எலியுமாக மாறினர்.

### பன்னீர்செல்வம் மீண்டும் தமிழக முதல்வரானார்.

தமிழ்நாட்டின் 17வது முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய அமைச்சரவையில் நிதியமைச்சராக இருக்கும் ஓ.பன்னீர்செல்வம், ஏற்கனவே 2001 செப்டம்பர் முதல் 2002 மார்ச் மாதம்வரை தமிழக முதல்வராக இருந்தது குறிப்பிடத்தக்கது. 63 வயதான ஓ.பன்னீர்செல்வம் போடியிலிருந்து 3வது முறையாக பன்னீர்செல்வம் சட்டப்பேரவைக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பன்னீர்செல்வம் கடந்த 2001இல் ஜெயலலிதா அமைச்சரவையில் பொதுப் பணித்துறை அமைச்சராக பதவிவகித்தவர்.

### கருணாநிதி மீது வழக்கு

இதற்கிடையில், அ.தி.மு.க.வினர்மீது ராயப்பேட்டையில் தாக்குதல் நடத்த தி.மு.க.வினரை தூண்டியதாக அக்கட்சியின் தலைவர் கருணாநிதி மற்றும் பொருளாளர் ஸ்டாலின்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

### உடனடியாக பிணை பெறமுடியாத நிலை

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயலலிதா தரப்பினர் கர்நாடக - பெங்களூர் உயர் நீதிமன்றத்தில் மட்டுமே பிணை கேட்டு மேல்முறையீடு செய்யமுடியும்.

கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதியின் வீட்டிலும் அவசர வழக்குகளை விசாரிக்கும் வசதியில்லை என்பதால் ஜெயலலிதாவின் பிணை மனுவை விசாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே பிணை கிடைக்கும் வரை ஜெயலலிதா 'வெண்ணிற ஆடை'யுடன் சிறையிலேயே காலங்கழிக்கவேண்டும். (ஜெயலலிதா நடித்து புகழ்பெற்ற படங்களில் ஒன்று வெண்ணிற ஆடை)

"அரசன் அன்று கொல்வான் சாமி நின்று கொல்லும்"



# சொல்லோ? வில்லோ?



புலவருக்கெல்லாம் புலவர் பொன்முடி
பகைவருக்கெல்லாம் எமன் தளபதி.
தளபதிக்கும் புலவருக்கும் தினம் பிணக்கு
தலையிட்டு தீர்வு கண்ட மன்னருக்கு சலிப்பு!

"ஏனப்பா தளபதி, புலவர் சொல்லுக்கு அதிபதி
நீயோ வில்லுக்கு அதிபதி
வேண்டும்தானா அவருடன் விரோதம்?
மன்னன் தளபதிக்கு புத்தி சொன்னான்.

"வாள் தான் பெரிது என்கிறேன் நான்
நா தான் பெரிது என்கிறார் அவர்
வில் கண்டுதான் பகை அஞ்சும் என்றால்
சொல் கண்டும் பகை நடுங்கும் என்கிறார்?
தளபதி தன் தரப்பு நியாயம் சொன்னான்.

"கல்லடி பட்டால் உடல்தான் காயப்படும்
சொல்லடி பட்டால் உள்ளம் காயப்படும்
கைவாள் வீசினால் உயிர்தான் சாகும்
நா வாள் வீசினால் உள்ளமே வேகும்"
மன்னன் முன்பாய் புலவர் பொருமினார்.

புலவரைக் கண்டால் தளபதி நகைப்பான்
புழுங்கச் செய்யும் கேலி நகைப்பு
"முறைக்காதீர் புலவரே! என்னை
முறித்துப் போட நினைக்கிறீர் அல்லவா?
முடியாது உம்மால் நான் வில்லில் வீரன்
வில்லெடுத்து நீரும் வாரும்
சொல்லெடுத்து என்னை அசைக்கவா முடியும்?"

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
அறிஞருடன் பகைக்கின் பேரும் கெடும்
பொறுமகனே நாள் அது வரும்?"
புலவர் சொல்லி விலகிப் போவார்.

"போர் என்ற நச்சுப்புகை
பூத்துவிட்ட காதல் செடியைக்
கருக்கிப் போட்டு விடப் போகிறாதோ?"
தளபதி மனம் சுருங்கிக்கொண்டே
அயல்நாட்டுக்கு தூதாய் போனான்!

"சூழப்போகும் போர் நம்
காதல் சுவாசத்தையே
களங்கப்படுத்தி விடுமா கண்மணி?"
மனதில் இருந்தவளிடம்
மனுப்போட்டு விசாரித்தான்!

பதிந்த நகக்குறி காய்வதற்குள்
விழுந்த பற்குறி அழிவதற்குள்
பறந்து வருவேன் என்றுரைத்தார்
பகையாய் வருவார் என்றறிந்து
பதையாய் துடிக்குது என் உயிரே?"
இளவரசியும் கலங்கிக்
கொண்டிருந்தாள்.

"முடிவை மாற்ற வேண்டுமானால்
ஒரு நிபந்தனை!"
"என்ன மன்னா! என்னிடம் சொல்க
எங்கள் மன்னரிடம் சென்றுரைப்பேன்"

"நீ எந்தன் மருமகனாக வேண்டும்
எங்கள் சேனையின் தளபதியாக வேண்டும்"

"கட்டிளம் பெண்ணாள் – கொவ்வை
இதழாள் – இன்பம் கொட்டுகின்ற
எழில் உரு உடையாள்.
சுட்டும் விழி, நீரும் குழல்
குத்தவரும் எழில்கள் – மடை
திறந்த வெள்ளமென சொர்க்கம்
தரும் தங்க நிகர் பெண்ணாள்!
தளபதி மனதில் அவள் உருவம்.

பதவியை விட்டால் என்ன
பாவையை தொட்டால் போதும்"
காதல் பித்து கால் இடறியது.

நான் தயார் மன்னா
வான் வரை உயரம் நீவிர்;
காண்கிலேன் உம்போல்
ஒரு மன்னவன் உலகில் யானே?"

தூதாக வந்தவன் – பகை நாட்டு
தோழனாக திரும்பிச் சென்றான்.

மன்னன் சபையில்
தளபதி தன் தூது விளக்கம்
உரைத்து நின்றான்.

புலவர் பக்கம் திரும்பிய மன்னன்
தளபதியின் தூது எப்படிப்
புலவரே? வெட்கம் அன்றோ
விவேகம் இதுவோ?"
வினா தொடுத்தான்.

புலவர் உடனே மறுத்துச் சொன்னார்
"மெச்ச வேண்டும் மன்னா
மெச்ச வேண்டும் – நான்
ஒரு பாட்டால் வாழ்த்தவேண்டும்!"

'வாழ்த்துக' என்றார் மன்னர்
வியப்புடன்!

புலவர் பாடினார் – புலமையாய் பாடினார்.
தூ! தூ! போ! நாயே! நீ
தூ! தூ! போ! நாயே!"

தளபதி கொதித்தான்
பதவியில் உள்ள தளபதியை
நாய் என்று இகழ்வது
நாட்டுக்கு இழுக்கு
நாயகனே தீர்ப்பு வழங்குக!"

"என்ன புலவரே!
ஏன் நீர் இகழ்ந்தீர்?"
மன்னன் கேட்க புலவர் நகைத்தார்
தூது போனாயே என்று பாடலை
நீட்டிச் சொல்ல வார்த்தை வரவில்லை
வார்த்தை வரும் வரைக்கும்
தூதுபோனோயே என்பதை நீட்டிப் பாடினேன்.
ஆச்சரியம் மன்னா!
அதனை தூ! போ! நாயே! என்று
அர்த்தப்படுத்திக் கொண்டது?"

தளபதி தலை குனிந்தான்
சபை கலைந்தது – புலவர்
அவன் காதில் ஓதினார்
வில்லை ஏராக உடைய
பகைவருடன் பகைத்தாலும்
சொல்லை ஏராக உள்ள
அறிஞருடன் பகைக்காதே!"

**"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"**
அதிகாரம்: 88. குறள்: 872




**சிந்தியா! ஜெயலலிதாவுக்கு முதலமைச்சர் பதவி பறிபோய் விட்டதே?**
**க.மனோகரி, திருகோணமலை.**

ஆம். நடக்கின்ற நிகழ்வுகளைப் பார்க்கின்ற பொழுது நகைச்சுவை நடிகர் கவுண்டமணியின் பாணியில் "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

18 ஆண்டுகள் வருமானத்துக்கு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கில் இழுத்தடிக்கப்பட்ட நிலையில் இப்போது வெளியாகியிருக்கின்ற தீர்ப்பானது ஜெயலலிதாவின் வாழ்க்கையில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இது தற்போதைய நிலைமை மட்டும் தான். எதிர்காலத்தில் ஜெ.ஜெயின் மேன் முறையீடு வெற்றியளித்து அவர் மீண்டும் அரியணை ஏறும் சூழல் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அது ஒருபுறம் இருக்கட்டும் மனோகரி. 66 கோடி மோசடி செய்தவருக்கே நான்கு ஆண்டுகள் என்றால் 176000 கோடியை சுருட்டியவர்களுக்கு எத்தனை ஆண்டு கிடைக்கப் போகிறது?



**சிந்தியா! பர்மாவில் முஸ்லிம்களுக்கு எதிராக பிரசாரம் செய்யும் விராத்து தேரர் இலங்கை வந்திருக்கிறாராமே?**
**எவ்.இஸாம், புத்தளம்.**

ஆம். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கையில் வலம் வருகின்றார்.

ஏற்கெனவே பொதுபலசேனா போன்ற கட்சிகள் முஸ்லிம்களுக்கு எதிராக பிரசாரத்தை வீரியமாக மேற்கொண்டு வருகின்றன. அது சில முஸ்லிம் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்து கொண்டிருக்கின்றது என அம்மக்கள் பிரதிநிதிகளே கருத்து வெளியிட்டு வருகின்ற சூழலில் விராத்து தேரரின் வருகை பௌத்தபிரான் போதிக்கின்ற சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு உதவும் என்று யாரும் நம்புகிறார்கள் இல்லை.

**சிந்தியா! கடந்த 65 ஆண்டு காலமாக சிறுபான்மையினரை ஏமாற்றிய பெரும்பான்மை அரசியல்வாதிகள் இன்னும் எத்தனை ஆண்டுகள் ஏமாற்றுவார்கள்?**
**எம்.என்.ரமேஸ், யாழ்ப்பாணம்.**

ரமேஸ், உங்களின் கேள்வியுடன் முழுமையாக உடன்பட முடியாமல் இருக்கின்றது. அரசியல் ஆதாயங்களுக்காக சில பெரும்பான்மையின அரசியல்வாதிகள் சிறுபான்மையினரை ஏமாற்றுகிறார்கள் என்பதை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துரைக்கின்றன. அதேபோன்று சிறுபான்மையினரின் நலன்களை ஏறி மிதித்த விற்பன்னர்கள் பலர் நம்மத்தியிலும் இருந்திருக்கின்றார்கள் - இருக்கின்றார்கள்.

இரண்டு தரப்பிலும் இருந்த சுயநலவாதிகள்தான் கடந்த காலங்களில் சிறுபான்மையினர் ஏமாற்றப்பட்டமைக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள்.

எனவே முதலில் நம்மத்தியில் உள்ள சுயநலமிகளை களையவேண்டும். அதன் பின்னர்தான் அடுத்த கட்டங்கள் பற்றி யோசிக்கவேண்டும்.

**சிந்தியா! தமிழ் மக்களின் எதிர்காலத் தலைவிதியை கூட்டமைப்பினர் தலைகீழாக்குவார்களா?**
**இளம்பிறை யோகன், புத்தளம்.**

இல்லை. ஏனெனில் கடந்த பல ஆண்டுகளாக அவர்களின் செயற்பாடுகள் எப்போது தமிழ் மக்களின் தலைவிதியை தலைகீழாக மாற்றிப் போட்டுவிட்டது. ஆகவே எதிர்காலத்தில் அவர்களினால் தலைகீழாக்கவும் முடியாது. ஆக்க வேண்டிய தேவையும் இல்லை.

தமிழ் மக்கள் இப்போது இருக்கின்ற நிலைமைதான் அவர்களின் அரசியல் இருப்புக்கு ஏற்றதாக இருக்கின்றது.

எனவே இப்படியே இருப்பதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்.

**சிந்தியா! புதிய பயிற்றுனர் அத்தப்பத்து இலங்கை அணியை மிளிரச் செய்வாரா?**
**எம்.அலோசியஸ், மட்டக்களப்பு.**

ஒரு காலத்தில் இலங்கை அணியின் முதுகெலும்பாக இருந்தவர். கிரிக்கெட் உலகில் துடுப்பாட்டத்தில் மிகவும் நுணுக்கமான முறைகளில், அழகான முறையில் கையாண்ட விரல் விட்டு எண்ணக்கூடியவர்களில் ஒருவர். சிறந்த அணித் தலைவர். அப்படிப்பட்டவர் இப்பொழுது பயிற்சியாளராகி இருக்கின்றார்.

தற்போதைய இலங்கை அணி வீரர்களின் திறமைகளை சிறுவயதில் இருந்து அவதானித்து வருகின்றார். அவர்களுடன் நெருக்கமாக பழகி அவர்களின் பலம், பலவீனங்களை அறிந்து கொள்வதற்கு மொழி தடையாக இருக்கப் போவதில்லை. இளையவர்களுடனும் சகஜமாகப் பழகக்கூடியவர்.

இவ்வாறு பல தகுதிகள் மாவன் அத்தப்பத்துவுக்கு வாய்ப்பாக இருக்கின்றது. எனவே இலங்கை அணியில் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

**சிந்தியா! அதிகரித்துவரும் சிறுவர் துஸ்பிரயோகங்களைத் தடுப்பது யார்?**
**இ.ஷர்மிலி, கோண்டாவில்.**

துஸ்பிரயோகங்களைத் தடுக்கும் கடப்பாட்டையும் அதில் ஈடுபடுபவர்களை தண்டிக்கும் அதிகாரத்தையும் சட்டம் - நீதித்துறைக்கும், காவல்துறைக்கும் வழங்கி இருக்கின்றது.

ஆனால், அவர்களினால் மட்டும் இவற்றைப் பூரணமாகத் தடுத்துவிட முடியாது. சிறுவர்கள் துஸ்பிரயோகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகளின் நடமாட்டங்கள் செயற்பாடுகள் தொடர்பில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

அத்தோடு சமூக மட்டத்தில் இவை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையான செயற்பாடுகளை திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளவேண்டும். சமூகத்தில் ஏற்படுகின்ற விழிப்புணர்வின் ஊடாகவே துஸ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜனாதிபதியின்.....

அதுமட்டுமல்லாமல் யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் முன்னேற்றங்கள் மற்றும் வளர்ச்சிகள், திட்டங்கள் எனப் பல்வேறு விடயங்களை தரவுகளோடு சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்துவதாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஐக்கிய நாடுகள் சபையின் உரை அமைந்திருந்தது.

இதன்மூலமாக இலங்கை மீதான அமெரிக்கா தலைமையிலான நாடுகளின் குற்றச்சாட்டுக்களை முதல் முறையாக ஜனாதிபதி சர்வதேச தளமொன்றில் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான நெருக்கமான உறவும், இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் இணக்கமான அயலுறவுக் கொள்கையும் அதிலும் விஷேடமாக இலங்கைக்கு வெளிக்காட்டும் நெருக்கமான சமிக்ஞைகளும் இலங்கையின் மனோநிலையை வலிமையடையச் செய்துள்ளதையே காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவற்றை ஆராயும்போது, இலங்கை அரசு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களாலும், போர்க்குற்றச் சாட்டுக்களாலும் துவண்டு போய்விடும் என்ற நம்பிக்கையை பரப்புவதும், இலங்கை சர்வதேச சமூகத்தால் தண்டிக்கப்படும்போது இலங்கை தமிழருக்கான தீர்வையும் சர்வதேச சமூகம் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் என்று பொய்யான நம்பிக்கையை தமிழ் மக்களிடையே விதைத்துவருவோரின் கனவு வெறுங்கனவாகவே இருக்கப்போவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

## வணக்கமுங்கோ!

**ரண்டு கிழமைக்கு முன்னம் பாரிஸில எங்கட நெடியவன் தம்பியின்ர றைட் ஹான்டா இருக்கிற ஆதித்தன் மாஸ்ரர் எண்டு சொல்லுற சிறப்புத் தளபதியின்ர தலையில பிஸ்ரல் வைச்சு மிரட்டினவையாம். அவையள் தங்களை எல்லாளன் படையெண்டு சொல்லித்தான் மிரட்டிப்போட்டு போனவையாம்.**

இது நெடியவன் தம்பியின்ர குறூப் கொஞ்சம் ஆட்டம்காண வைச்சிட்டுப் போலதான் கிடக்குது. இது பற்றி அவையள் ஒரு அறிக்கை விட்டிருக்கின முங்கோ! தங்கட சிறப்புத் தளபதியை மிரட்டினது உண்மையில ஆர் எண்டிறது இவைக்குத் தெரிஞ்சிருந்தாலும் அதை வெளியில சொல்லக் கூச்சப்படுகினமுங்கோ.

சொல்லியும் ஆகோணும். உண்மையைச் சொன்னாலும் கூச்சம். ஆற்ற தலையில பழியைப் போடலாம் எண்டு தலைவர் நெடியவன் தன்ர தேசிய ஆலோசகர் கலாநிதி சேரமான் என்கிற மேதாவியின்ர அட்வைஸ் கேட்டவராமுங்கோ. அவரின்ர ஆலோசனைப்படி "இது இலங்கை அரசாங்கத்தின்ர சதித்திட்டம், அரச பயங்கரவாதம்" எண்டு அறிக்கையில சொல்லியிருக்கினம்.

அந்த அறிக்கையில தங்கட ஊடக இல்லத்தின் பணியாளர் ஒருத்தர்மீது கொலை முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அவர் தம் பணிகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கேக்க. பின்தொடர்ந்து போன சிலர் கொலை 'முயற்சி' செய்திருக்கினம். ஆனால் 'கோர்ட் கிறேஸ்' அவையள் கொண்டுவந்த துவக்கு வேலை செய்யாமப்போட்டுது. அதனால எங்கட சிறப்புத் தளபதி தப்பியிருக்கிறார் எண்டு சொல்லியிருக்கினம்.

இதுபற்றி வேற வழியால வந்த செய்திகள் என்ன சொல்லுதாமுங்கோ. தலையில துவக்க வைச்சு "தேசியச் செயற்பாடுகளின்ர ஒற்றுமையைக் குலைக்கிற மாதிரி உங்களைப் பிடிக்காதவைக்கு துரோகப் பட்டம் குடுக்கிறது போன்ற கோல்மால் வேலைகளையெல்லாம் விட்டுவிடவேணும்.

புலிகளின்ர சொத்துக்களை எல்லாம் உடன ஒப்படைக்கவேணும் எண்டு நிந்தனை குடுத்துத்தான் உயிரைப் பறிக்காம விட்டுட்டுப் போனவையாம். போனவை சும்மா இருக்கேலையுங்கோ. திரும்பவும் எங்கட சிறப்புத் தளபதிக்குக் கோல் பண்ணி, "24 மணி நேரத்துக்குள்ள ஈழமுரசு பேப்பரையும், ஊடக இல்லத்தையும் மூடிப்போட வேணும். இல்லையெண்டு சொன்னால்" பரிதி போன இடத்துக்குத்தான் போக வேண்டிவரும்" எண்டு வெருட்டிப் போட்டினமாம்.

சும்மாவே வெறுமனே அறிக்கைப் புலியாகவே இருந்த எங்கட வீரத்தளபதி ஆடிப்போட்டாராமுங்கோ. அதின்ர விளைவு என்னவெண்டா முதற்கட்டமா ஈழமுரசுக்கு மூடுவிழா நடந்திருக்குதுங்கோ.

இந்த ஈழமுரசு என்கிறது ஒரு காலத்தில வன்னியில புலிகள் ஆட்சி பண்ணேக்க அவையளின்ர பிரச்சார வீரிய ஊடகமா இருந்தது. 2009, மே,19 புலிகளின்ர தலைவர் தலைமறைவாப் போனதோட (நெடியவன் படையணியின் கருத்துப்படி) ஈழமுரசின்ர கொன்றோல் தளபதி நெடியவனிட்ட போய்ச் சேர்ந்திட்டுது. அதுக்குப் பிறகு நெடியவன் படையணியின்ர வீரத்தாக்குதல்கள், இராசதந்திர நகர்வுகள் ஒவ்வொருநாளும் துரோகிப்பட்டியலில இணைக்கப்படுவர் என்றபெயர் விபரங்கள் அப்பப்ப, எம் தலைவர் சாகவில்லை வீரப்புலி தோற்பதில்லை போன்ற உசுப்பேத்தல்கள் ஈழமுரசிலதான் வாறதுங்கோ. அதான் மூடச்சொல்லி சிறப்புத்தளபதி ஆதித்தன் மாஸ்ரின் தலையை துப்பாக்கி முத்தமிட்டிருக்குது.

எங்க சிறப்புத் தளபதி ஆதித்தன் மாஸ்ரர் நிஜப் புலியாய் இருந்திருந்தா இந்த பிஸ்ரலுக்கெல்லாம் லேசில மிரண்டிருக்கமாட்டார். இவர்தான் பேப்பர் புலியாச்சே. தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் எண்டுநினைச்சுக் கொண்டு வேர்த்து விறுவிறுக்க வீட்டுக்குள் ஓடினவர் செய்த முதற் காரியமே ஈழமுரசு பத்திரிகையை மௌனிக்கச் செய்யிறதுக்கான தந்திரோபாய நகர்வுதானாமுங்கோ.

இந்த நிலையில உந்த விசயங்களையெல்லாம் டீப்பா அவதானிச்சுக் கொண்டு பாரிஸ் லாச் சப்பலில தேத்தண்ணிக் கடை வைச்சிருக்கிற சுன்னாகத்துப் பரமண்ண என்ன சொல்லுறார் தெரியுமோ...

என்னடாப்பா இது? வெளிநாடுகளில புலிகளின்ர கை ஓங்கி இருக்குது. அதுதான் இலங்கைக்கெதிராக சர்வதேச விசாரணையை நெருக்கிக்கொண்டு இருக்கிறது என்கிறியள். தேசியத் தலைவர் மறைவிடத்தில இருந்து வழிகாட்டுறார் என்கிறியள். சிங்கள அரசாங்கம் வெளிநாட்டில எங்களிட்ட வாலாட்ட ஏலாது எண்டு மார்தட்டுறியள்.

இப்ப என்னடாவெண்டா பிரான்சில மிரட்டினது இலங்கை அரசாங்கத்தின்ர பயங்கரவாதம் என்கிறியள். மிரட்டுறது மட்டுமல்ல சுட்டாலும் சுட்டுவிடுவாங்கள் எண்டு துள்ளி ஓடுறியள்.

நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் இலங்கை அரசாங்கம் மகா கில்லாடியள் போல இருக்கு. இலங்கைக்குள்ள கூண்டோட அழிச்சினம். நாட்டுக்கு வெளியே உங்களைத் துள்ளியோட வைக்கினம்!

சும்மா ஏன் ஐயா பேசாம இருக்கிற இலங்கை அரசாங்கத்துக்கு நீங்களே மௌச எடுத்துக் குடுக்கிறியள்... எமது விநாயகம் அணிதான் மிரட்டினது எண்டு உண்மையைச் சொல்லிப்போடலாமே. புலிதான் புலியை மிரட்டினது எண்ட கோணத்தில மிரட்டிப் பணியவைத்த பெருமையானது இலங்கை அரசாங்கத்து க்குப் போகாமல் தமிழினத்துக்குள்ள தங்குமே...! எண்டு பரமண்ணை சொல்லுறதும் சரியாத்தான் இருக்குதுங்கோ. அந்தாள் லாச்சப்பல்ல தேத்தண்ணிக் கடை போட்டாலும் கரெக்டா விசயத்தப் பிடிச்சிட்டாருங்கோவ்...

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# வரலாறு படைத்த வல்லுநனர்கள்

## முதன் முதலில் பறந்தவர்கள்



"இப்படிப் பல தடவைகள் கிளைடர் களைப் பறக்கவிட்டுத் திருப்தி கண்ட ரைட் சகோதரர்கள். 1903ஆம் ஆண்டில் ஒரு கிளைடரில் தாங்களே தயாரித்த ஒரு மோட்டார் எஞ்சினை இணைத்து, பறக்கும் ஏரோப்பிளேன் இயந்திரத்தை உருவாக்கினார்கள். இது ஒரு பைபிளேன், அதாவது இரண்டு இறக்கைகளைக் கொண்ட விமானம், மரச்சட்டங்களால் உருவான இவ்விமானத்தின் இறக்கைகள் பட்டுத்துணியால் போர்த்தி மூடப்பட்டிருந்தன. இதற்காக இவர்கள் தயாரித்திருந்த மோட்டார்கள் பன்னிரண்டு குதிரை சக்தி கொண்டது. விமானத்தில் புரப்பல்லர்களை மரத்தினால் தாங்களே செதுக்கி உருவாக்கி இருந்தார்கள். மிக மிக எளிமையானது இவர்கள் உருவாக்கி இருந்த விமானம், அதில் விமானி குப்புறப்படுத்துக்கொண்டு தன் இரு கை, கால்களால் இயக்கி அதைப் பறக்கச் செய்யவேண்டும்.

ரைட் சகோதரர்கள் தாங்கள் தயாரித்த இந்த விமானத்துக்கு ஃபிளையர்' என்று பெயரிட்டார்கள். தாங்கள் தயாரிக்கும் சைக்கிள் வண்டிகளுக்குக் கொடுத்திருந்த பெயர் இது. ஃபிளையர் பூர்த்தியானதும், அதை ஓஹியோவிலிருந்து சிட்டிஹொக்குக்கு ரயில் வண்டியில் அனுப்பினார்கள். அதன் இறக்கைகளின் நீளம் 40 அடிகள். விமானத்தின் நீளம் 21 அடிகளுக்கு மேலே. எடை 600 பவுண்டுகள்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.10.2014 தொடக்கம் 08.11.2014 வரை)

### மேடம்

மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு பிரச்சனைகளை விலைக்கு வாங்கி மன நிம்மதியை இழக்கவேண்டாம். திடீர் அதிர்ஷ்டங்கள் மூலமாக பொருள் வந்து சேரலாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்திருந்த நல்ல செய்திகள் கிடைக்கக் கூடிய காலமாகும் புதிய ஆடைஅணிகலன்கள், ஆடம்பர அலங்காரப் பொருட்களை வாங்குவீர்கள். தந்தையின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பொதுநலத் தொண்டுகளில் பிரியமுடன் ஈடுபடுவீர்கள். தீர்த்த யாத்திரை சென்றுவர வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். பிறருக்காக உழைப்பதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். தென்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும்.

### இடபம்

கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். அடுத்தவர் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். வீடுகளில் பணம் பொருட்கள் திருட்டுப்போக இருப்பதால் எச்சரிக்கை தேவை. புதிய வீடு மற்றும் நிலங்கள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. மூத்த சகோதரரால் பொருட்செலவுகள் ஏற்படும். உடம்பில்மூலம் மற்றும் உஷ்ண சம்பந்தமான பீடைகள் வந்துதீரும். விருந்தினர்களின் எதிர்பாராத வரவால் பொருள்விரயமாகும். நீண்டதூரப் பயணங்களால் மனநிம்மதி ஏற்படாது. காதல் சம்பந்தமாக நல்ல செய்தி வந்துசேரும்.

### மிதுனம்

சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி போன்றவற்றால் தனவரவுகள் உண்டு. வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக் கட்டவும், வீடு மாற்றம் செய்யவும் எண்ணுவீர்கள். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் குறையும். உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். தாய்க்கு இருந்துவந்த நோய்கள் குறைந்து காணப்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். பங்காளிகளாலும், நண்பர்களாலும் சிற்சில தொல்லைகள் ஏற்படலாம். ஆலயங்களைத் திருத்தி அமைப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். வடதிசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டு. மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவ செலவுகள் வந்துசேரும். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். தேவையற்ற மனச்சஞ்சலமும் குழப்பங்களும் குடும்பத்தில் வரக்கூடும். புதிய நண்பர்களைச் சேர்ப்பதைத் தவிர்க்கவும்.

### சிங்கம்

நீண்டதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். உடம்பில் வாதம் வாயு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். சொத்துக்கள் சம்பந்தமான விசயங்களில் எதிர் பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கச் இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். சகோதர சகோதரிகளுடன் காரணமில்லாத சச்சரவுகள் வந்துபோகும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி உறவுகள் பலப்படும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் விபரீதங்களைச் சந்திக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான தகவல்கள் வந்துசேரும் காலமாகும்.

### கன்னி

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். வங்கிகளில் இருந்து வர வேண்டிய பணம் மற்றும் வங்கி கடன் உதவிகள் கிடைக்கும். விவசாயம் செய்வோர்கள் விவசாயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். திடீர் அதிர்ஷ்டம் ஆகிய ரேஸ் லோட்டரி வழியாகத் தனவரவு உண்டாகும். தீராத நாட்பட்ட வழக்குகள் தீர நல்ல முடிவுகள் கிடைக்கும். உடம்பில் நரம்பு, எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். பழைய கடன்கள் அடைபடும். உறவினர்களிடம் இருந்து தூரத்து நற்செய்திகளை கேட்பீர்கள்.

### துலாம்

புதிய வீடு, நிலம் வாங்குவது சம்பந்தமான முயற்சிகளைச் சற்று காலதாமதமாகச் செய்வது நல்லது. சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுப காரிய நிகழ்ச்சிகளில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. சம்பந்தம் இல்லாத பிரச்சினைகள் வர இருப்பதால் முன்கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும். காதல் விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அரசு வேலை மற்றும் உத்தியோக முயற்சிகள் வெற்றி தேடித்தரும். பழைய வழக்குகள் மீண்டும் தொடரலாம். பொருளாதாரம் நெருக்கடி ஏற்படுத்தினாலும் சமாளித்து கொள்வீர்கள். உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும்.

### விருச்சிகம்

ஒரு சிலர் இருப்பிடம் விட்டு வெளியூர் செல்ல வாய்ப்பு உள்ளது. புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக வெகு முயற்சிகளைச் செய்து கடனை அடைப்பீர்கள். வீடுகளைத் திருத்திக்கட்ட எண்ணுவீர்கள். நெடுநாட்களாக வராத கடன்கொடுத்த பணம் திரும்ப கை வந்துசேரும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீர்வதற்கான காலமாகும். பெரியவர்களின் நல்லாசிகள் கிடைக்கும். பெண்களால் வடதிசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும்.

### தனுசு

கண்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருக்கவும். புதிய வீடு, நிலம், வாகனம் போன்றவற்றை மற்றவர்களின் உதவிகளோடு வாங்குவீர்கள். தொலை தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லதாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணக் காரியம் கைகூடும். பிள்ளைகளால் பொருட் செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் பணவரவு உண்டு. தீர்த்த யாத்திரை சென்றுவருவதற்கான ஏற்பாடுகளில் சற்று காலதாமதம் ஏற்படும். மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் சற்றுக் குறையும்.

### மகரம்

விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருங்கள். சுய தொழில் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். மனைவி வழிச் சொந்த பந்தங்களால் பொருட்செலவு ஏற்படும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவிகளில் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். தந்தையால் பொருள்வரவு உண்டு. உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. கை விட்டுப்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். குலதெய்வ வழிபாட்டிற்காக வெளியூர் செல்லுவீர்கள்.

### கும்பம்

அரசியல்வாதிகளால் ஆதாயம் இருக்காது. பிறரிடம் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடை பெறும். விருந்தினர் வரவால் மன மகிழ்ச்சி உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாக பேசிப்பழகுதல் நல்லதாகும். கூட்டுத்தொழில் சம்பந்தமான புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் மனநிம்மதி அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். பிள்ளைகளின் மருத்துவச் செலவுகளுக்காகப் பொருட்செலவுகள் உண்டாகும்.


### மீனம்

அடுத்தவர்களின் விசயத்தில் தலையிட்டு மனநிம்மதியை இழக்க வேண்டாம். செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். கண்களில் கவனம் தேவை. நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எச்சரிக்கை தேவை. காணாமற்போன பொருட்கள் காவல்துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். பூமி, நிலம் சம்பந்தமாக வெகு காலமாகத் தடைப்பட்டு வந்த காரியங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல இலாபம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவர். ஒரு சிலருக்கு புதிய வீடு மற்றும் வாகனம் வாங்க வாய்ப்பு உள்ளது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)


# தேசிய சேமிப்பு வங்கி மூலம்

## மனதில் உருவான கனவு இல்லத்தை நனவாக்கிக்கொள்ள




# வீட்டுக் கடன்!

- உங்களுக்கென ஒரு வீட்டை அமைத்துக்கொள்ள அல்லது கொள்வனவு செய்ய
- வீடு ஒன்றை அமைத்துக்கொள்வதற்கான காணியை வாங்க
- வீடமைப்பு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய, புனர்நிர்மாணம் அல்லது பகுதியை இணைத்துக்கொள்ள
- வீட்டை நவீனமயப்படுத்தல் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அழகுபடுத்தல்
- வீடமைப்பு சம்பந்தமாக ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடனை மீளச் செலுத்துதல் உட்பட உங்களது அனைத்து வீட்டுத் தேவைகளுக்கும்

மிகக்குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன்

- மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை
- உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய ஆவணங்கள் உட்பட தேவையான காகிதாதிகளுக்கான துரித சேவை
- காணிகளுக்கு பிணையாக தனிநபர் கடன் வசதி

வருமானம் தொடர்பான விபரங்களுடன்

**அருகிலுள்ள NSB கிளைக்கு இன்றே விரையுங்கள்!**

கடமை புரியும் 24 மணித்தியாலங்களில் Express வீட்டுக்கடனை உங்களுக்குப் பெற்றுத்தருதல்.

தலைமை அலுவலக கடன் பிரிவு மற்றும் கண்டி, ஜா-எல, மொறட்டுவ, கிருலப்பனை, யக்கல, பதுளை, இரத்தினபுரி, மாத்தறை. குருநாகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கிளைகளில்

நிபந்தனைகள் அடங்கும்

துரித அழைப்பு 0112379379

Fitch Rating:AAA (lka)

NSB
உங்களினதும் நாட்டினதும் முன்னேற்றத்தின் முன்னோடி




இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அர்ஜுனா அச்சகத்தில் டி.டி என்டர்பிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒக்டோபர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.